உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 28 சனிக்கிழமை (14-12-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:18

# பிரதமர் ரணிலின் சமாதான முயற்சிக்கு கருணாநிதி கடிதம் மூலம் பாராட்டு



சென்னை,டிசெ.14

இலங்கையில் அமைதி முயற்சிகளை மேற்கொண்டிருப்பதைப் பாராட்டுத் தெரிவித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி கடிதம் அனுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1956 இல் ஈழத்தமிழர்களின் தந்தை செல்வநாயகம் தலைமையிலான உரிமைப்போராட்டம் வெற்றி பெறவும், இலங்கையில் அமைதியான வாழ்வு மலரவும் வாழ்த்தி தி.மு.க. பொதுக்குழுவில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அதை நான்தான் முன்மொழிந்தேன்

அதன் பின்னர் கலங்கிடத்தக்க, கண்ணீர் விடத்தக்க பெருமூச்சு விடத்தக்க எத்தனையோ நிகழ்வுகள் ஈழத்திலும், தமிழகத்திலும் நடந்தேறிவிட்டன.

(12ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் தென்கிழக்கு ஆசியாவில் வானொலி ஒலிபரப்பு நடத்த இந்தியா எதிர்ப்பு

கொழும்பு,டிசெ.14

விடுதலைப் புலிகள் இயக்கம் பெற்றுக் கொண்டிருக்கும் வானொலித் தொடர்புக் கருவிகளைப் பயன்படுத்தி தென்கிழக்கு ஆசியாவில் வானொலி ஒலிபரப்புகள் மேற்கொள்ளப்படுமேயானால் அது குறித்து கவனம் செலுத்த வேண்டிவரும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சு செயலாளர் கே.சிபால் கூறுகிறார்.

நோர்வே அரசாங்கத்தின் தலையீட்டினால் புலிகள் இயக்கத்துக்கு அதிநவீன வானொலித் தொடர்புக் கருவிகள் அண்மையில் கிடைக்கப்பெற்றன.

இக் கருவிகள் வானொலி ஒலிபரப்புகளை நடத்தப் பயன்படுத்தவிருக்கின்றன என்று அறியப்படுவதாகவும் - அவை இலங்கைக்குள் மேற்கொள்ளப்படுமேயானால் பிரச்சினைகள் இல்லை எனவும் செயலா

(12ஆம் பக்கம் பார்க்க)

# தீவுப்பகுதி, நெல்லியடி சம்பவங்கள் பற்றி இன்று முகமாலைக் கூட்டத்தில் ஆராய்வு!

## ஒஸ்லோ பேச்சுக்குப் பின் உப குழுவின் முதல் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெம்பர்14

**இராணுவ அதிகாரிகள் மற்றும் புலிகளின் பிரதி நிதிகள் பங்குபற்றும் - பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான - உபகுழுவின் கூட்டம் முகமாலை சூனியப் பிரதேசத்தில் இன்று நடைபெறவுள்ளது.**

**ஒஸ்லோவில் நடந்த மூன்றாம் சுற்று அமைதிப் பேச்சுக்குப் பின்னர் நடைபெறும் பாதுகாப்பு உப குழுவின் இந்த முதற்கூட்டத்தில் தீவுப்பகுதி நிலைமை, நெல்லியடியில் பொலீஸார் மேற்கொண்ட தாக்குதல் ஆகிய விவகாரங்கள் உட்பட முக்கிய விடயங்கள் ஆராயப்படும் என்று தெரிகிறது.**

ஏற்கனவே மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற பாதுகாப்பு உபகுழுவின் மாவட்ட மட்ட கூட்டங்களில் எட்டப்பட்ட முடிவுகள், தீர்மானங்கள் பற்றி இன்றைய கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்படும்.

தீவுப்பகுதியில் நடைபெறும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதம், அங்கிருந்து ஈ.பி.டி.பியை வெளியேற்றுவது, நெல்லியடியில் பொலீஸார் மேற்கொண்ட தாக்குதல், நாகர்கோயில் வீதியை மீண்டும் திறப்பது, அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீள் குடியமர்த்துவது ஆகியவை தொடர்பாக இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் எனத் தெரிகிறது.

விடுதலைப் புலிகள் தரப்பில் கேணல் கருணாவும், பாதுகாப்புத் தரப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோவும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் ஆயுதங்களைக் கைவிடும் வரை சமாதான முயற்சிக்கு ஆதரவில்லை

### பொ.ஐ.முவின் நிலைப்பாடு குறித்து கதிர்காமர்

கொழும்பு,டிசெ.14

தமிழீழ விடுதலைப் புலிகள் முதலில் ஆயுதங்களைக் கீழே வைக்கும்வரை இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் ஆதரவு வழங்கப்படமாட்டாது என்று பொதுஜன ஐக்கிய முன்னணி நேற்றுத் தெரிவித்தது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் பொ.ஐ.முன்னணி எம்பியுமான லக்ஷ்மன் கதிர்காமர் இதனைத் தெரிவித்தார்.

" விடுதலைப் புலிகளின் ஆயுதக் களைவு உடனடியாக இடம்பெறவேண்டும். ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கீழே வைக்கும்வரை தீவு முயற்சிக்கு ஆதரவு வழங்கமாட்டோம். முதலில் சமாதானத் தீர்வு, பின்னர் ஆயுதக் களைவு இடம்பெறும் என்ற நிலைப்பாட்டுக்குவருபோதும் இடமளிக்க மாட்டோம்" என்றும் அவர் சொன்னார். (ஓ)

## புனர்வாழ்வுக்கழக அலுவலகம் மீது கிரனேட் வீச்சு!

மட்டக்களப்பு,டிசெ.14

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மட்டக்களப்பு அலுவலகம் மீது நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் இனந்தெரியாதோரால் கிரனேட் வீசப்பட்டது.

கிரனேட் வீசப்பட்ட சமயம் அலுவலகத்தில் எவரும் இருக்கவில்லை. இதனால் இக்கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை. இச்சம்பவத்தில் அலுவலக தொலைபேசிக்கம்பிகள் அறுந்துள்ளதுடன் அலுவலகமும் சேதத்துக்குள்ளானது.

(ஓ-4)

## மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு தலா ரூ. 15,000 வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.14

குடாநாட்டில் 95 ஆம் ஆண்டுக்குப்-பின்னர் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு தலா 15ஆயிரம் ரூபா மீளக்குடியமர்வு கொடுப்பனவாக வழங்கப்படவிருக்கிறது.

ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் குடாநாட்டுக்கு திரும்பியுள்ள குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இந்தக் கொடுப்பனவு தற்சமயம் வழங்கப்பட்டு வருவதாகவும் -

இதனைத் தொடர்ந்து ஏனையவர்களுக்கு இக்கொடுப்பனவு படிப்படியாக வழங்கப்படும் என்றும் - செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏற்கனவே மீளக்குடியமர்வு கொடுப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவன் உட்பட 14பேரும் நேற்று பிணையில் விடுவிப்பு

வடமராட்சி,டிசெ.14

நெல்லியடியில் ஈ.பி.டி.பி. முகாம் முன்பாக கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற மறியல் போராட்டத்தை அடுத்து பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஒரு சிறுவன் உட்பட 14 பேரையும் தலா 50-ஆயிரம் ரூபா பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்றம் அனுமதித்தது.

யாழ்.சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த 9பேரும் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவந்த ஐவரும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்றுமாலை ஆஜர் செய்யப்பட்டனர்.

பிரஸ்தாப நபர்களை பிணையில அனுமதிக்குமாறு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளான பொ. குமாரசாமி, ஏ.கே.நடராசா, கே.தங்கராசா, மு.சிவநேசன் ஆகியோர் பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசுவிடம் விண்ணப்பித்தனர்.

இவர்களை பிணையில் விடுவ

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுப் பிரமுகர்கள் தமிழ்ச்செல்வனுடன் பேச்சு

கிளிநொச்சி,டிசெ.14

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மேற் கொள்ளப்பட வேண்டிய புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணப் பணிகள் தொடர்பாக வெளிநாட்டுப் பிரமுகர்கள் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனுடன் நேற்று முற்பகல் கலந்துரையாடியுள்ளனர்.

ஆஸ்திரேலிய நாட்டின் முதன்மை நீதியரசர் மாக்ரஸ் என்பீல்ட் முதலில் தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடி வடக்கு - கிழக்கு நிலைமை, புலிகள் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டம் ஆகியன தொடர்பாகக் கேட்டறிந்தார்.

அதன்பின்னர் ஜேர்மன் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய பிரிவு அதிகாரி டாக்டர் முல்லர் தலைமையிலான ஜேர்மன் குழுவினர் தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடி வடக்கு - கிழக்கு புனர்நிர்மாணம் குறித்துக் கேட்டறிந்தனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகளும் மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரனும் தமிழ்ச்செல்வனைத் தனித்தனியாக நேற்றுச் சந்தித்தனர்.

(ஓ-3)



வெளிநாட்டுப் பிரமுகர்கள் நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுடன் நடத்திய சந்திப்புக்கள்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



# ஹக்கீமே தொடர்ந்து தலைவர் நீதிமன்றத் தீர்ப்பு உறுதி செய்தது

## எதிரணியினர் விடுத்த தடைக் கோரிக்கை தோல்வி

கொழும்பு,டிசெம்பர்14

**அமைச்சர் ரவூப் ஹக்கீம்தான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர். அவர் தொடர்ந்து தலைவராகப் பணியாற்றுவார். மேன் முறையீட்டு நீதிமன்றம் அதை நேற்று உறுதிசெய்தது.**

ரவூப் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் என்ற வகையில் செயற்படக் கூடாது என்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் கடந்த 3 ஆம் திகதி தடைவிதித்தது. அதே நீதிமன்றம் பின்னர் கடந்த 5 ஆம் திகதி அந்தத் தடையை நீக்கியது.

முஸ்லிம் காங்கிரஸின் அதாவுல்லா அணியினர் தடைநீக்கத்திற்கு ஆட்சேபம் தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு சமர்ப்பித்தனர். தடை நடைமுறையில் இருக்க உத்தரவிடுமாறு கோரினர்.

அந்தக் கோரிக்கை தோற்றது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான நிமல் காமினி அமரதுங்க மற்றும் பாலபட்டபெத்தி ஆகிய இருவரும் நேற்று மனுவை விசாரணைககு எடுத்தனர்.

ஹக்கீம் தலைவராகச் செயற்படக் கூடாது என்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் முதலில் விதித்த தடை, மனுதாரர்களை மட்டும் விசாரித்து விடுத்த (Exparte) தடை.

ஆனால், தடை நீக்கம் அப்படி அல்ல. மாவட்ட நீதிமன்றம் இரு தரப்பையும் விசாரித்துத்தான் தடையை நீக்கியது.

அப்படி விதிக்கப்பட்ட தடை நீக்கத்தை ரத்துசெய்து ஒரு பக்க விசாரணையுடன் முன்னர் விதிக்கப்பட்ட தடை நடைமுறையில் இருக்க வேண்டும் என்று உத்தரவிட மேன்முறையீட்டு நீதிமன்றம் விரும்பவில்லை.

அதனால், நீக்கப்பட்ட தடை நீக்கப்பட்டே இருக்கிறது. ரவூப் ஹக்கீம் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவராகச் செயற்படுவார்.

ஹக்கீமின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பரதலிங்கம் தலைமையில் 5 சட்டத்தரணிகள் ஆஜராகினர். (ஒ)

# எமது மக்களுக்கு சேவையாற்றவே கண்ணியகற்றும் குழுவில் சேர்ந்தேன்!

## இங்கு இப்பணியில் ஈடுபடும் முதற்பெண் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,டிசெ.14

குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள குழுவில் முதல்முறையாக இளம் யுவதி ஒருவரும் இணைந்துள்ளார்.

நாவற்குழியைச் சேர்ந்த நிரோஜா சிறீ ராஜகுமார்(வயது 19) என்ற இளம்யுவதியே இந்தக் குழுவில் இணைந்துள்ளார்.

யாழ்.செயலகத்தில் இயங்கும் ஒன்றிணைக்கப்பட்ட கண்ணி அகற்றும் அலுவலகத்தின் மேற்பார்வையில் இயங்கும் குழுவில் இவர் இணைந்துள்ளார்.

வவுனியாவில் செயற்படும் சுவிஸ் கண்ணி அகற்றும் நிறுவனத்தின் 24 நாள்கள் பயிற்சி பெற்ற பின்னர் இக் குழுவில் இணைந்துள்ள இவர் கண்ணிகள் அகற்றப்பட்டமையை உறுதிசெய்யும் குழுவில் இவர் இடம்பெறுகிறார்.

"வைத்தியராகி மக்களுக்கு சேவை செய்ய விரும்பினேன் அதற்கு சந்தர்ப்பம் கிட்டவில்லை இதனால் கண்ணி அகற்றும் பிரிவில் இணைந்து மக்களுக்கு சேவையாற்ற முடிவு செய்தேன்" என்று அவர் உதயனுக்குத் தெரிவித்தார். வெளிநாட்டு நிறுவனங்கள் கண்ணிவெடி அகற்றும் பணிக்கு தொண்டர்களை சேர்த்து அவர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றது. இந்தக்குழுவில் இணைந்த முதலாவது பெண் இவராவார். (ஒ-3)

# எழுதுநர் சேவை பரீட்சை இன்று; பலருக்கு அனுமதியட்டை இல்லை!

## பரீட்சார்த்திகள் ஏமாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.14

அரச எழுதுநர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்கும் ஆள் சேர்ப்புச் செய்வதற்காக இன்று நாடு முழுவதும் நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்த பலருக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் நேற்றுவரை கிடைக்கவில்லை. இதனால் பெரும் எண்ணிக்கையனோர் இப்பரீட்சையில் தோற்றமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

விண்ணப்பித்த பலருக்கும் அனுமதி அட்டைகள் கிடைக்காத நிலையில் நேற்று அவர்கள் யாழ். செயலகம், யாழ். கல்வி வலயம் மற்றும் யாழ். பிரதம தபாலகம் ஆகியவற் றுக்கு மாறிமாறிச் சென்று தமக்குரிய அனுமதி அட்டைகளை தேடியலைந்தனர். ஆயினும் இவர்களில் யாழ். செயலகத்தின் ஊடாக விண்ணப்பித்த சிலருக்கு செயலக அதிகாரிகள் கொழும்பிலிருந்து 'பக்ஸ்' மூலம் அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொடுத்தனர். பரீட்சார்த்திகளில் சிலர் கல்வி வலயத்தினால் வழங்கப்பட்ட பரீட்சைத் திணைக்களத்தின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொணடு தமது பிரச்சினை பற்றி தெரியப் படுத்தினார்கள்.

நேற்று மாலை வவுனியாவில் இருந்து எடுத்து வரப்பட்ட தபால் பொதிகளில் தமக்குரிய அனுமதி அட்டைகள் வருமென்றெண்ணி யாழ். பிரதம தபாலகத்தில் காத்திருந்த பலரும் ஏமாற்றத்துடன் திரும்பியதையும் காணக்கூடியதாக இருந்தது.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்களின் நிலைபற்றி யாழ். செயலகம் மற்றும் யாழ்.கல்வி வலயம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு கேட்டபொழுது அத்தகையோர் பரீட்சையில் தோற்றக் கூடிய சூழ்நிலை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

கடந்த காலங்களில் அனுமதி அட்டைகள் யாவும் இங்கு எடுத்து வரப்பட்டு அதன் பின்னரே பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் இப்பொழுது கொழும்பில் வைத்தே அவை உரிய முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுவதால் ஏற்படுகின்ற தவறுகளே இதற்குக் காரணம் என்றும் யாழ்கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

அனுமதி அட்டைகள் கிடைக்காத பரீட்சார்த்திகளின் நன்மை கருதி யாழ. மாவட்டத்தில் இந்தப் பரீட்சையை ஒத்தி வைக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

# அடியோடு சாய்ந்தது பனை கள் சீவியவர் படுகாயம்!

## கீழே நின்றவருக்கு கால் முறிந்தது

வலிகாமம்.வடக்கு,டிசெ.14

பனைமரம் ஒன்று அடியோடு சாய்ந்ததில் கள் சீவிக்கொண்டிருந்தவரும், தரையில் நின்றிருந்தவரும் படுகாயமடைந்தனர். தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைக்குக் கிழக்குப் பகுதியில் உள்ள சிந்தியம் புளியடியில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இப்பகுதியில் உள்ள வீடொன்றின் முற்றத்தில் இருந்த பனை மரத்தில் நேற்றுக்காலை இளையவன் இரத்தினம் (வயது 50) என்பவர் கள் சீவிக்கொண்டிருந்தார். இளையவன் சின்னப்பு (வயது 80) என்பவர் வீட்டு முற்றத்தில் இருந்து பல்தேய்த்துக் கொண்டிருந்தார்.

அவ்வேளையில் அப்பகுதியில் வேகமாகக் காற்று வீசியது. அதனால் பனைமரம் அடியோடு சாய்ந்தது.

இதில் மரத்தின் மீதிருந்த இளையவன் இரத்தினம் படுகாயமடைந்தார். இளையவன் சின்னப்புவுக்கு மரத்தின் அடியில் சிக்கி கால் முறிந்தது.

இவர்கள் இருவரும் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். (ஒ-86)

# கண்ணிகள் அகற்றிய பின் பாடசாலை நிர்வாகத்திடம்

யாழ்ப்பாணம்,டிசெ.14

அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதை அடுத்து இந்தப் பாடசாலை நேற்று பாடசாலை அதிபர் பிரபாகரராசாவிடம் வைபவ ரீதியாகக் கையளிக்கப்பட்டது.

கண்ணிவெடி அகற்றும் பணியை மேற்கொண்ட 'ஹலோரஸ்ட்' நிறுவனத்தின் யாழ்.அலுவலக அதிகாரி ஜெமி லெயன் பாடசாலையை அதிபரிடம் கையளித்தார்.

கண்ணிவெடிகளை அகற்றி பாடசாலையை மீள இயக்குவதற்கு உதவியாக 'ஹலோரஸ்ட்' நிறுவனத்துக்கு பாடசாலை சமூகத்தின் சார்பில் அதிபர் நன்றி தெரிவித்தார்.

பாடசாலை புனரமைக்கப்பட்டு எதிர்வரும் ஏப்ரலில் மீள இயங்க ஆரம்பிக்கும் என்று அதிபர் கூறினார்.

பாடசாலை ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ-3)



பாடசாலைக் கையளிப்பு நிகழ்வில்

## நெல்லியடி தாக்குதல் தொடர்பாக

# ஐந்து வர்த்தகர்கள் நேற்று வாக்குமூலம்

வடமராட்சி,டிசெ.14

நெல்லியடியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மறியற் போராட்டத்தை அடுத்து வர்த்தகர்கள் மீது பொலீஸார் நடத்திய தாகக் கூறப்படும் தாக்குதல் தொடர்பாக ஐந்து வர்த்தகர்கள் யாழ்.பொலீஸ் நிலையத்தில் நேற்று வாக்குமூலம் அளித்தனர்.

நேற்றுமுன்தினம் நெல்லியடிப் பொலீஸ் நிலையத்தில் பொலீஸாருக்கும் வர்த்தகர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் பயனாக இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை நேற்று யாழ்.பொலீஸ் தலைமையகத்தில் ஆரம்பமாகியது.

யாழ். உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஹெக்டர் தர்மசிறி முன்னிலையில் ஆரம்பமான இந்த விசாரணையில் நேற்று ஐந்து வர்த்தகர்கள் வாக்குமூலம் அளித்தனர்.

தொடர்ந்து விசாரணைகள் இடம் பெறவுள்ளன. (ஐ-3-173)

## பிரதமர் திங்களன்று மாலைதீவு விஜயம்

மாலைதீவு அரசின் அழைப்பின் பேரில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாளைமறுதினம் 16ஆம் திகதி ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு மாலைதீவு செல்கிறார்.

மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கையூம் உட்பட சிரேஷ்ட அமைச்சர்கள் பலருடன் பிரதமர் ரணில் பேச்சுக்களை நடத்துவார். (ஒ-12-4)

## ரி.ரி.என்னில் வாழ்த்து நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,டிசெ.14

ஐரோப்பாவில் ஒளிபரப்பாகும் தமிழ் தொலைக்காட்சி இணையம் (ரி.ரி.என்.) எதிர்வரும் புத்தாண்டு, தைப்பொங்கல் பண்டிகைகளை ஒட்டி புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ் மக்களுக்கு தாயகத்திலுள்ள அவர்களது உறவினர் வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் நிகழ்ச்சி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வெளிநாடுகளில் வாழும் தங்கள் உறவினர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்க விரும்புவோர் தமது பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறு தமிழ் தொலைக்காட்சி இணையத்தின் யாழ்.அலுவலகம் அறிவித்திருக்கிறது.

222 3919 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்பாக 'பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வடமராட்சியில் இயல்பு நிலை

வடமராட்சி,டிசெ.14

கடந்த இரு தினங்கள் இடைவெளிக்குப் பின்னர் நெல்லியடி உள்ளிட்ட வடமராட்சிப் பிரதேசம் நேற்று வழமை நிலைக்குத் திரும்பியது.

கடைகள், சந்தைகள் யாவும் திறக்கப்பட்டு நகரங்கள், பட்டினங்கள் இயல்பு நிலையில் காணப்பட்டன. அத்துடன் பஸ் சேவைகளும் முன்னரைப் போன்று வழமைபோல் நடைபெற்றன. (ஐ-173)

# திரைக்கதை உருவாக்கல் பயிற்சிக்கு தெரிவானோர்

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் 'ஸ்கிறிப்ற் நெற்' அமைப்பும் இணைந்து நடத்தும் திரைக்கதை உருவாக்கலுக்கான பயிற்சி முகாமில் பயிற்சியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஐந்து வள ஆளுநர்களால் நேற்று நடத்தப்பட்ட பயிற்சி முகாமில் தெரிவானவர்களின் பெயர்கள் வருமாறு:-

அ.நிஷாந்தன்(வவுனியா), செல்லத்துரை ஜமுனாராணி (அச்சுவேலி), சி.செல்வலிங்கம்(தொண்டமனாறு), ப.இந்திரகுமார்(பருத்தித்துறை), இரா. மாதவராசா(முல்லைத்தீவு), தவம் (திருநெல்வேலி), நா.விக்னேஸ்வரன் (திருநெல்வேலி), திலகன்(திருநெல்வேலி), ச.இராகவன்(கரவெட்டி), அ.யேசுராஜா (யாழ்ப்பாணம்), எஸ்.சுகந்தன் (யாழ்ப்பாணம்),

க.கௌதமன்(மானிப்பாய்), டயஸ் (திருநெல்வேலி), எஸ்.ஜீவா(கொழும்பு), குயிலின்(திருநெல்வேலி), எஸ். என்.ஜே.மரியாம்பிள்ளை (யாழ்ப்பாணம்), எஸ்.பிரணவன்(யாழ்ப்பாணம்), நிமலா(திருநெல்வேலி), பே.குகப்பிரியா (யாழ்), தியாஸ்கரன் (பருத்தித்துறை), ச.பிறேமினி(சாவகச்சேரி), க.பிரபா (யாழ்), த.செல்வகுமார்(ஏழாலை), சி. சுதந்திரராஜா(கொக்குவில்), ச.சாரங்கா (சாவகச்சேரி), பசுஞ்சியகாந் (மீசாலை), செ.உதயகலா (தெல்லிப்பழை). (ஒ-3-4-12)

# ஜனவரியில் அமைச்சரவை அரைநாள் 'மரதன்' கூட்டம்

ஜனவரி மாதத்தில் அரைநாள் அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்பட வேண்டுமென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார். கடந்த புதனன்று நடைபெற்ற பூர்வாங்க அமைச்சரவைக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசு இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள், எதிர்கால செயல் திட்டங்கள் ஆகியவை குறித்து விரிவாக ஆராயவே இக்கூட்டம் கூட்டப்பட வேண்டுமெனவும் பிரதமர் கூறியிருக்கிறார்.

அரசு ஆரம்பித்த சமாதான நடவடிக்கை, எதிர்காலத் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்குச் சரியான விளக்கத்தைப் பெற்றுக்கொடுகக 'மக்கள் சக்திப் போராட்டமும், மாவட்ட மட்டத்தில் பகிரங்க கலந்துரையாடல்களும் நடத்தப்படவேண்டும்' என்றும் பிரதமர் கூறியிருக்கிறார்.

இலங்கை வரலாற்றில் பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த ஓர் அரசும் அமைச்சரவையும் இதுதான் எனவும் பிரதமர் அக்கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார். (ஐ)

# நிகரகுவாவின் முன்னாள் அதிபர் நீதிமன்றினால் வீட்டுக் காவலில்!

நிகரகுவா நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஆர்னோல்ட் அலிமன் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக அந்த நாட்டு நீதிமன்றத்தால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவரது அரசியல் சகாக்கள் அவரைக கைகழுவி விட்ட சில மணி நேரத்தில் நீதிமன்றத்தின் இந்த உத்தரவு வந்துள்ளது.

அலிமன் மீதும் அவரது மேலும் சகாக்களான மேலும் இரு சட்டமன்ற உறுப்பினர்கள் மீதும் அரச நிதியில் ஊழல் செய்ததாகக் குற்றச்சாட்டப்பட்டுள்ளது.

1997ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டின் முன்பகுதி வரை அலிமன் நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார். அவர் தனது இரு சகாக்களுடனும் இணைந்து அரசுக்குச் சொந்தமான 10கோடி அமெரிக்க டொலர் பணத்தை ஊழல் மூலம் பெற்றுக்கொண்டார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டு.

அவர் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு வசதியாக, முன்னாள் அதிபர் என்ற ரீதியில் அவருக்கு இருந்த சட்டரீதியான பாதுகாப்பை நாட்டின் தேசிய சபை நேற்று நீக்கி, அவர் மீதான நீதிமன்ற விசாரணைகளுக்கு அனுமதி அளித்தது.

இந்த ஊழல் தொடர்பான விசாரணைகள் நீதியாக நடைபெறும் என்று தற்போதைய அதிபர் என்றிக்யு பொலனொஸ் உறுதியளித்துள்ளார். தேசிய சபையின் முடிவுக்குப் பின்னர் பேசிய அவர் "என் வரையில் இந்த விவகாரம் முடிந்துவிட்டது. ஆனால், பெரியளவில் நடந்த இந்த மோசடியை எமது நாடு வெளியேகொண்டு வரும் என்று நம்பலாம்" - என்று கூறினார். (ம)

# சின்னம்மை நோய்க்கான தடுப்புமருந்து உருவாக்கப்படும்

## அதிபர் புஷ் தெரிவிப்பு

வாஷிங்ரன்,டிசெ.14

அமெரிக்க மக்களுக்கு சேவை அடிப்படையில் வழங்கக்கூடிய வகையில் சின்னம்மை நோய்க்குரிய தடுப்பு மருந்துகளை அமெரிக்கா தயாரிக்கவுள்ளதாக அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

புதன்கிழமையன்று தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அப்போது அவர் "நான் நினைக்கின்றேன் இது ஓர் அவசியத் தேவைத் திட்டம் என்று.... இந்த முடிவை மக்கள் கட்டாயம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. தமது குடும்பத்துக்கு அது தேவை என்று நினைப்பவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்." என்றார் புஷ்.

இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதத் தாக்குதல் நடத்தப்பட்டால் அதிலிருந்து மக்களைக் காப்பதற்கான திட்டங்கள் குறித்த விவரத்தை அதிபர் புஷ் நேற்று வெளியிட்டார்.

உலகில் இருந்து 20 வருடங்களுக்கு முன்னர் சின்னம்மை நோய் முற்றுமுழுதாக ஒழிக்கப்பட்டுவிட்டது. ஆனால், அந்த நோயை ஏற்படுத்தக் கூடிய கிருமிகளை ஈராக் உட்பட நான்கு நாடுகள் சட்டவிரோதமாக வைத்திருப்பதாக புலனாய்வு நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

ஈராக்குடன் ஒரு போர் ஏற்பட்டால் அந்த நாடு தன்வசம் உள்ள உயிரியல் மற்றும் இரசாயன ஆயுதங்களை தனது நாட்டுக்கு எதிராகப் பயன்படுத்தக் கூடும் என்றும் அமெரிக்கா அஞ்சுகின்றது. இதனாலேயே அதற்குரிய எதிர்ப்பு நடவடிக்கைகளில் அது தீவிரமாக இறங்கியுள்ளது.



கடுப்பு மருந்து தொடர்பான ஆய்வுகூடப் பணியில் ஈடுபட்டிருக்கும் பெண் ஒருவர்

இந்த சின்னம்மை நோய்க்கு எதிரான தடைமருந்து அமெரிக்கப் படையிலுள்ள சுமார் 5லட்சம் பேருக்கு முதலில் வழங்கப்படவுள்ளது. பின்னர் அதேயளவான அவசர உதவிப் பணியாளர்களுக்கும் மருத்துவ ஊழியர்களுக்கும் தடுப்புமருந்து வழங்கப்படவுள்ளது.

அந்தத் தடைமருந்தைத் [illegible] மக்களுக்குச் செலுத்த[illegible]பானது என்று [illegible]தாக அதிபர் புஷ்ஷின் ம[illegible] லாரா புஷ் தெரிவித்துள்ளார்.

அனேகமாக இந்தத் தடைமருந்து உற்பத்தி அடுத்த வருட ஆரம்பத்திலேயே தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 2004 ஆம் ஆண்டளவில் கையிருப்பு இருக்கும் அளவுக்கு தடுப்புமருந்து உருவாக்கப்பட்டுவிடும். (ம)



புஷ்ஷின் மகள்மார்


# சீன விமானங்களில் பொலீஸ் பாதுகாப்பு

## அடுத்த ஆண்டு முதல் அமுல்

பீஜிங்,டிசெ.14

சீன விமானங்களில் அடுத்த ஆண்டு முதல் சிறப்பு பயிற்சி பெற்ற பொலீஸாரை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. விமானங்களில் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் அதிகரித்துவரும் நிலையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று சீன அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்புப் பணிக்காக விமானங்களில் பொலீஸார் பணியில் ஈடுபடுத்தப்படுவது இதுவே உலகில் முதலாவதாக இருக்கும். பயணிகள் விமானத்தில் அடுத்த ஆண்டின் முதல் ஆறுமாதத்துக்குள் பொலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடக்கூடும் என்று ஏயர் சீனா வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)



ஈராக்கில் ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்கள் தொடர்ந்து தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை ஆறு முக்கிய தளங்களில் தீவிர சோதனைகள் நடத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ஈராக் சமர்ப்பித்த தனது ஆயுத இருப்புப் பற்றிய அறிக்கையில் இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்கள் இருப்பதற்கான கணக்குகள் எவையும் காட்டப்படவில்லை என்று அந்த அறிக்கையை முதற்கட்டமாக ஆராய்ந்த அமெரிக்கா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அது தொடர்பு சாதனங்களுக்கான அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளது. - ஈராக்கில் ஐ.நா. சோதனையாளர்கள் பணியில் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம். அவர்களின் பின்னணியில் அதிபர் சதாமின் பெரிய அளவிலான உருவப்படம் வரையப்பட்டிருப்பதையும் காணலாம்

# வெனிசுலாவில் தொடரும் வேலைநிறுத்தத்தால் பொருளாதாரம் பெரும் பாதிப்படையும் அபாயம்

## ஓர் இணக்கத்துக்கு வர அரசு - எதிர்க்கட்சிகள் முடிவு

லண்டன்,டிசெ.14

வெனிசுலாவில் எதிர்க்கட்சிகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற வேலைநிறுத்தப் போராட்டம் நாட்டின் பொருளாதாரத்தைக் கடுமையாகப் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதை அடுத்து எதிர்க்கட்சிகளுடன் ஒரு சமரசத்துக்கு வருவதற்கு அரசு இணங்கியுள்ளதாகத் தோன்றுகின்றது.

இந்த இணக்கத்தின் அடிப்படையில் விரைவில் புதிய தேர்தல் ஒன்று நாட்டில் ஏற்படலாம் என்று தெரிகிறது. அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையில் தொடர்பாளர்களாகச் செயற்படுபவர்கள் பொதுத் தேர்தல்களை முன்னதாக நடத்துவதற்குரிய ஒரு நிகழ்ச்சி நிரல் குறித்துப் பேசி வருகின்றனர்.

வெனிசுலாவில் அரசைப் பதவியில் இருந்து அகற்றும் நோக்கத்துடன் எதிர்க்கட்சிகள் விடுத்த வேலைநிறுத்தப் போராட்டம் 9 நாள்களாகத் தொடர்ந்து வருகின்றது. பெற்றோலிய ஏற்றுமதியில் உலகின் ஐந்தாவது இடத்தை வகிக்கும் இந்த நாடு தொடரும் வேலைநிறுத்தத்தால் முழுமையாக முடங்கியுள்ளது. மசகு எண்ணெய் ஏற்றுமதி முழுமையாக ஸ்தம்பித்துள்ளது. இது நாட்டின் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கும் என்ற அச்சம் தற்போது தோன்றியுள்ளது.

வேலைநிறுத்தம் தொடர்வதை அடுத்து திங்களன்று தேசிய பாதுகாப்புப் படையினர் நாட்டில் உள்ள அனைத்து பெற்றோலிய ஏற்றுமதி நிலையங்களையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர்.

உலகின் பல விமானசேவை நிறுவனங்கள் வெனிசுலாவுக்கான தமது சேவைகளை நிறுத்தியுள்ளன. அங்கு தமது விமானங்களுக்குரிய எரிபொருள்களை மீள்நிரப்பல் செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளதாலேயே தாம் இந்த முடிவை எடுத்ததாக அந்த நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலைமைகளை அடுத்து எதிர்க்கட்சியுடன் ஒரு சமரச நிலையை ஏற்படுத்தும் நிலைக்கு அரசு இறங்கி வந்தது. அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் மூன்றாந்தரப்பாக ஒரு குழு செயற்பட்டு வருகின்றது. இந்த ஏற்பாட்டுக்குழுவின் மூலம் இருதரப்புக்களுக்கும் இடையிலான பேச்சுக்கள் கடந்த வாரக் கடைசியில் ஆரம்பிக்கப்பட்டன.

ஏற்பாட்டாளராகப் பணியாற்றும் 'அமெரிக்கன் ஸ்ரேட்ஸ்' அமைப்பின் செயலாளர் நாயகம் இருதரப்புக்களிடையிலான பேச்சுக்கள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போது, விரைவில் தேர்தலை நடத்துவதற்கான நிகழ்ச்சிநிரல் ஒன்றைத் தயாரிப்பதற்கு அரசு இணங்கியுள்ளதாகத் தெரிவித்தார். எதிர்த்தரப்பும் இந்த விடயத்தில் ஓர் இணக்கத்துக்கு வரும் போன்று தெரிவதாகவும் அவர் சொன்னார்.

முன்னதாக, நாட்டின் அதிபர் சவெஸ் பதவியை இராஜினாமாச் செய்யும்வரை வேலைநிறுத்தப் போராட்டம் தொடரும் என்று எதிர்க்கட்சியினர் தெரிவித்திருந்தனர். (ம)

## அமெரிக்கக் ஹெலி விபத்தில் ஐவர் பலி!

ஜெருசலேம்,டிசெ.14

ஹொன்டூரஸில் பயிற்சியில் ஈடுபட்ட அமெரிக்காவின் 'யு.எச-60 பிளக ஹக்' இராணுவ ஹெலி ஒன்று விபத்துக்குள்ளாகி வீழ்ந்து நொறுங்கியது. இந்த விபத்தில் அமெரிக்கப் படையினர் ஐவர் உயிரிழந்தனர்.

மேற்கு ஹொன்டூரஸின் மத்திய பகுதியில் இந்த ஹெலி வீழ்ந்து விபத்துக்குள்ளானது. உடனடியாக இரு ஹெலிகள் உதவிக்கு அனுப்பப்பட்ட போதும் மோசமான கால நிலை காரணமாக அந்த ஹெலிகள் தரையிறங்க முடியாமல் தளத்துக்கு திரும்பின.

மலைப் பகுதியில் இரவுநேர யுத்தத்தில் ஈடுபடுவது தொடர்பான பயிற்சியில் ஈடுபடும்போதே ஹெலி விபத்துக்குள்ளானதாக ஹொன்டூரஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)

## எரிபொருளுடன் பனாமா கப்பல் கவிழ்ந்தது!

வில்னியஸ்,டிசெ.14

லித்துவேனியாவில் கிளைபேடா துறைமுகத்தில் 50 ஆயிரம் தொன் எரிபொருளுடன் கப்பல் கவிழ்ந்தது. இக்கப்பல் பனாமாவில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. துறைமுகம் அருகே திரும்பும்போது கப்பல் புதன்கிழமை மாலை கவிழ்ந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)

# தென்கொரியர்கள் ஆட்சேபம்



தென்கொரியத் தலைநகர் சியோலில் அமெரிக்க அரசுக்கு எதிராகத் தாங்கள் புகைப்படக் கருவிகளுடன் கோஷமிடுகின்றனர் உள்ளூர்ப் பத்திரிகை, ரீ.வீ.நிறுவன புகைப்படக்காரர்கள். அமெரிக்க இராணுவ வீரர்கள் இருவர் சென்ற வாகனத்தில் அடிபட்டு 2பள்ளிச் சிறுமிகள் இறந்தனர். அதை விசாரித்த அமெரிக்க இராணுவ நீதிமன்றம் அவ்விருவரையும் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பளித்து சொந்த நாட்டுக்கே திருப்பி அனுப்பிவிட்டது. அதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம். (ம)

# வடகொரியா கண்டனம்

சியோல்,டிசெ.14

'ஸ்கட்' ஏவுகணைகளுடன் யேமனுக்குச் சென்றுகொண்டிருந்த வடகொரியக் கப்பலை அரேபியக் கடலில் அமெரிக்கா தடுத்துநிறுத்தியமை ஓர் உரிமை மீறிய செயல் என்று வடகொரியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

வடகொரியாவில் இருந்து 'ஸ்கட்' ஏவுகணைகளுடன் சென்றுகொண்டிருந்த சோ சான் என்ற அந்தக் கப்பலை ஸ்பெயின் கடற்படை அரேபியக் கடலில் வழிமறித்து தடுத்து நிறுத்தியமை தெரிந்ததே. பின்னர், அந்த ஏவுகணைகள் குறித்து யேமன் அளித்த விளக்கத்தை அடுத்து அமெரிக்கா அந்தக் கப்பலைத் தொடர்ந்து பயணிக்க அனுமதித்தது.

ஸ்பெயின் கடற்படை கப்பலைத் தடுத்து நிறுத்தியமைக்கு "இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தில் வரம்புமீறித் தலையிடும் ஒழுக்கக்கேடான செயல்" - என்று வடகொரிய வெளியுறவு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

56... தொடரிலக்கமுடைய LITE ACE 2C TOYATA எஞ்சின் பொருத்தப்பட்ட AC வளமுள்ள வான் மற்றும் 94 ஸ்ரீ யைக் கொண்ட CD 125 TWINமோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: நல்ல சமாரியன் காரியாலயம், கோண்டாவில் கிழக்கு. T.P.No.: 021-222 2488, 021-222 3820 (11660)

இரண்டு மாதம் வளர்ச்சியடைந்த சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் (100 நாளகளில் முட்டை இடக்கூடியவை) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மான்ஸ பாடசாலை வீதி, உடுவில். (11701)

16(பதினாறு) மாதங்கள் நிரம்பிய கறுப்பு அல்சேசன் பெண் நாயும் வெள்ளை, கறுப்பு பொம்மேரியன் குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நடராசா, செல்வநாயகம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, (பலாலி வீதி சந்திப் பிள்ளையார் கோயில் அருகில்) (11700)

பலவர்ண கலர் வளர்ப்பு மீன்கள், மீன்தொட்டிகள், மோட்டார்கள் அதற்குரிய அனைத்து அலங்காரப் பொருள்கள், குருவிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி (தட்டாதெருச் சந்தி). (11718)

நல்ல நிலையிலுள்ள 15 குதிரை வலு (H.P.) கொண்ட மீன்பிடி வள்ளத்துக்கான யமகா (Yamaha) வெளி இணைப்பு இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: சின்னமச்சான் தர்மன், 79, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம். (11711)

**Prima Broiler** மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தமசெய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். **Electronic** நிறுவை. தொடர்பு: 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11227)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள், கல்பேட்ஸ், முட்டை என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு (முடமாவடிச் சந்திக்கும் பூங்கனிச் சோலைக்கும் இடையில்). (11706)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

தரமான Prima Broiler குஞ்சுகள் 35/=, அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (11647)

## கோழி முட்டை விற்பனை

தரமான முட்டைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11648)

## வீடு விற்பனைக்கு

கந்தர்மடச் சந்தியை அண்டிய பகுதியில் இரண்டு கடையுடன் சேர்ந்த வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.204, அரசடி வீதி, கந்தர்மடம். (11378)

நாவலர் வீதியில் 6பரப்புக் காணியில் ஐந்து படுக்கையறைகளோடு சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **No.35, Chadacre Avenue, I Lford 1Gsoja U.K. T.P. 0208 551-9665** (தரகர் தேவையில்லை). (11638)

## கடை வாடகைக்கு

யாழ்வீதி, மானிப்பாயிலுள்ள கடை ஒன்று வாடகைக்கு உள்ளது. பான்ஸி, பார்மஸி, பலசரக்கு கடை தவிர்ந்த ஏனைய கடைகளுக்குக் கொடுக்கப்படும். தொடர்புக்கு: பிள்ளையார் களஞ்சியம், மானிப்பாய். (11656)

## இன்ரநெற்போன் வசதி

யாழ்ப்பாண தொலைத்தொடர்பு நிலைய உரிமையாளர்களே! இன்ரநெற் (**Internet**) போன் பெறவிரும்புவோர் எம்முடன் தொலைபேசியில் தொடர்புகொள்ளுங்கள். தொலைபேசி இல.01-719425. (11346)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1963, உத்திரட்டாதி, 2இல் செவ்வாய், சுவிஸில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. (ஸ்பொன்சர் உள்ளது) தொடர்பு: விள.இல.1720, மே/பா உதயன். (11680)

பல்கலைக்கழகத்தில் உயர் பதவியிலுள்ள, தீவகத்தைச் சேர்ந்த, இந்து கௌரவ குடும்ப மணமகனுக்கு ஏற்ற மணமகள் தேவை. மணமகன் வயது 28, உத்திரட்டாதி-4, செவ்வாய்க்குற்றமற்ற, கிரகபாவம் - 10 கொண்டவர். தொடர்பு: விளம்பர இலக்கம் 1721, C/o உதயன். (11704)

## A/L கணித வகுப்பு

A/L கணித மாணவர்களுக்கு தனியாகவோ அல்லது குழுவாகவோ இணைந்த கணிதம், **Engineering Graduate** ஆல் பிரத்தியேகமாக (**Personal**) கற்பிக்கப்படும். தொடர்பு: 0777-240541 (ந.நந்தன்) (11677)

## தவறிவிட்டது

383/26, நாவலர் ஒழுங்கை, நாவலர் வீதி, ஆனைப்பந்தியைச் சேர்ந்த க.கோபாலகிருஷ்ணனின் கைப்பை தேசிய அடையாள அட்டை (இல.731464138V), விசேட அடையாள அட்டை (இல.0902016307), விற்பனைச் சிட்டைகள், காசோலை, பணம் என்பவற்றுடன் 30-11-2002 அன்று மின்சார நிலைய வீதிக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் கொடுத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். தொலைபேசி இல. 2223276 (11688)

## ஒரு காதலின் கதை

இலங்கைத் தமிழர்கள் தங்கள் உரிமைகளைப் பெற சாத்வீகப் போராட்டம் நடத்திய கதையை இந்த நாவலில் வாசியுங்கள். எல்லா வகை இலக்கியங்களும் படைத்த கலாபூசணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இரண்டாவது நாவல். (11716)

## தவறிவிட்டது

49,தன்னார் ஒழுங்கை, நல்லூரைச சேர்ந்த **வே.கனகலிங்கம** என்பவரது ஒரு சோடி பவுண் காப்பு 12.12.2002 வியாழக்கிழமை முத்திரைச் சந்தையடி, குமாரவீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். அம்பாள் கபேயிலும் தொடர்பு கொள்ளலாம். (11717)

## விற்பனையாகின்றது!

**English Writing Skills by S.Theivathavapalan**

Suitable for Grades 8, 9, 10, 11, & 12

* ஆங்கிலம் எழுதுவதற்கு ஆரம்பம் முதல் பயிற்சி அளிக்கும் சிறந்த வழிகாட்டி.
* மிகக்கூடிய விளக்கப்படம் மூலம் மாணவர்களுக்கு, இலகுவில் ஆங்கிலம் எழுத சிறந்த பயிற்சி அளிக்கக்கூடியது.

பரீட்சையில் விசேட சித்திக்கு உத்தரவாதம்

**கிடைக்குமிடங்கள்:**

1) Sole Distributor SriLanka Book Depot - Jaffna
2) Sri Subramania Book Depot - Jaffna
3) Thurka Stationaries - Chunnakam
4) Nayagapalan Book Depot - Manipay
5) Poobalasingam Book Depot - Jaffna

(11331)

## நத்தாரையொட்டி முத்திரை வெளியீடு

பேருவளை,டிசெ.14

நத்தார் தினத்தை முன்னிட்டு தபால் திணைக்களம் நான்கு ரூபா ஐம்பது சதம் பெறுமதியான புதிய முத்திரையொன்றை நாளை ஞாயிற்றுக்கிழமை வெளியிடவுள்ளது.

நீர்கொழும்பு கத்தோலிக்க தேவாலயத்தில் அன்று மாலை இப்புதிய முத்திரை வெளியீட்டு வைபவம் இடம்பெறும்.

வெகுஜனத் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா, உள்துறை; கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க உட்படப் பல பிரமுகர்கள் இவ்வைபவத்தில் கலந்துகொள்வர். (ம)

## மோசமான நிலையில் கோப்பாய் வீதிகள்

கோப்பாய்,டிசெ.14

கோப்பாய் பகுதியில் உள்ள பிரதான வீதிகள் யாவும் பெய்துவரும் மழையினால் சேதமடைந்துள்ளன. இதனால் போக்குவரத்தில் சிரமம் ஏற்பட்டுள்ளது. குழிகளில் தேங்கி நிற்கும் வெள்ளம் வேகமாகச் செல்லும் வாகனங்களால் பாதசாரிகள் மீது வாரியடிக்கப்படுகிறது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் வீதிகளை சீர்படுத்தமுன்வரவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஓ-72)

## ஊரெழு கிழக்கில் கசிப்பு அழிப்பு

ஊரெழு கிழக்கு அம்மன் கோவிலடிப் பகுதியில் பற்றைகள் நிறைந்த பகுதியில் இயங்கிவந்த பெரும் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. அண்மையில் உரும்பிராய் சென் மைக்கல் சனசமூக நிலையத் தலைவர், இரு உறுப்பினர்கள் இணைந்து நடத்திய திடீர் பரிசோதனையின்போது 10 பரல் கசிப்பு, கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

சம்பவம் இடம்பெற்ற மறுநாளும் இதே பகுதியில் பிறிதோர் இடத்தில் அமைந்த உற்பத்தி நிலையத்தில் 800 லீற்றர் கோடா, 65 லீற்றர் கசிப்பு மற்றும் உபகரணங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டன. (எ-72)

## மனைப் பொருளியல் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,டிசெ.14

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்க மகளிர் அபிவிருத்திப் பிரிவினர் சங்க எல்லைக்குட்பட்ட பகுதிகளைச்சேர்ந்த யுவதிகளுக்கான இலவச மனைப்பொருளியல் அடிப்படை பயிற்சி வகுப்பினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள தனியார் கட்டடமொன்றில் இப்பயிற்சிகள் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

## வலி.தெற்கில் 125 குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகள்

வலி.தெற்கு,டிசெ.14

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர் கந்தரோடை, சுன்னாகம், அளவெட்டி பகுதி மக்களுக்கு நல்லின தென்னங்கன்றுகளை இலவசமாக வழங்கியுள்ளனர்.

கந்தரோடை கிராம மக்களுக்கு 50 தென்னங்கன்றுகளும், அளவெட்டி கிராம மக்களுக்கு 20 தென்னங்கன்றுகளும், சுன்னாகம் கிராம மக்களுக்கு 55 தென்னங்கன்றுகளும் இவ்வாறு விநியோகிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

கந்தரோடை கிராம சேவையாளர் லயன் க.திருநாவுக்கரசு, சுன்னாகம் லயன்ஸ் கழக தலைவர் லயன் எஸ். யோகானந்தராசா, வலயத் தலைவர் லயன் டாக்டர் வி.யோகேஸ்வரன் ஆகியோர் இது தொடர்பான நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். (எ-152)

## தேவை

எமது ஸ்தாபனத்துக்கு விற்பனையாளரும் பில் (சிட்டை) எழுதுபவரும் தேவை.

முன்அனுபவமுள்ளவர்கள் மட்டும் உடன் நேரில் வரவும்.

**அம்பாள் களஞ்சியம்**
இல.7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 5299

(11705)

சிவமயம்

## ஜோதிடம்

இந்திய பரம்பரை சாஸ்திரியார் **அருள்வாக்கு அம்பிகா அம்மா** அவர்கள் முதல்முறையாக யாழ்.மாநகருக்கு வருகை தந்துள்ளார்கள். கைரேகை, ஜாதகம் தெளிவாகப் பார்த்துக் கூறப்படும். ஜாதகம் எழுதிக்கொடுக்கப்படும். எந்தப் பிரச்சினைகளானாலும் ஜோதிட ரீதியாகச் சரிசெய்து கொடுக்கப்படும்.

அம்மாவிடம் வாக்குக்கேட்டு நன்மை அடைந்தோர் கொழும்பு மாநகரிலும் வவுனியா நகரிலும் பல்லாயிரக்கணக்கானோர். நீங்களும் நன்மையடைந்து, உங்கள் வாழ்வை சீரும் சிறப்புமாக்க இன்றே அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில் சந்திக்கவும்.

*சந்திக்கும் இடம்:* **அருள்வாக்கு அம்பிகா அம்மா, மடோனா லொட்ஜ் (லிங்கன் கிறீம் ஹவுஸ் அருகில்) 121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

குறிப்பு: *ஒவ்வொரு நாளும் காலை 8 மணி தொடக்கம் பகல் ஒரு மணிவரை. மேலும் பி.ப.2.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை பார்க்கப்படும்.* (11715)

## நாய்க்குட்டிகள் விற்பனை

Pedigreed Harliquin Great Dane
X Pedigreed Dobermann Pincher

அழகான பல நிறங்களில் 8 கிழமை நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:

**Nallur Farm Centre**

*(நல்லூர் வீடியோ சென்ரர்)*

19, முருகேசர் ஒழுங்கை,முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11712)

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம். சாவகச்சேரி.

## கூறுவிலைகள் கோரல்

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஏற்கனவே பாவனையில் இருந்த சுத்திகரிப்பு நிலையத்தை மீளப் புனரமைப்புச் செய்யும் வகையில் பின்வருமாறான இயந்திரசாதனப் பொருள்களை வழங்குவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

01. Hydraulic Hoist. OI..No.08 Ten imported from India.
02. Air Compressor.OI.No.7.5.KW imported from India.
03. Washing Pump. OI.No.22Bar 3HP. imported from India.
04. Grease Pump. OI.No.40KG imported from India.
05. Installation Charges for above. Including Oil and Material.
06. Generator. OI.No.10KW. (UK Form)

கூறுவிலைகளை 21.12.2002ஆம் திகதிக்கு முன்பு *"பொது முகாமையாளர், சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி"* என்ற முகவரிக்குச் சேர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விவரங்களைச் சங்கத்தின் தலைமைப் பணிமனையில் அறிந்துகொள்ளலாம்.

**க.துரைராசா**
பொது முகாமையாளருக்காக

(C/25375)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

### நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 01 - 12 - 1936



விண்ணில் 14 - 11 - 2002

### அமரர் சின்னக்குட்டி சண்முகராசா (சந்திரபோஸ்)

*(காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன கல்நெரிக்கும் பகுதி இயக்குநர்)*

**மேகங் கறுக்கவில்லை மின்னலிடி எழவுமில்லை**
**காகங் கரையவில்லை கனவில்லை - தேகந்தான்**
**தளர்ந்து படுக்கவில்லை தயவில்லாதோர் வயிற்று வலியினால்**
**வளர்ந்தனையோ வல்லவனே நீ?**

14.11.2002 அன்று இறைபதமடைந்த *சின்னக்குட்டி. சண்முகராசா* அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச்செய்திகளை நேரிலும வேறு வழிகளிலும் தெரிவித்தவர்களுக்கும் இறுதியாத்திரையில் மயானம்வரை அனைத்து உதவிகளையும் நல்கியவர்களுக்கும் எமது துன்பத்தில் பங்குகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் மரணக் கிரியைகளை நடத்திய அந்தணப் பெருமக்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (14.12.2002) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"சண்முக பவனம்",*
*இளவாலை வடக்கு, இளவாலை.*
*(மெய்கண்டான் பாடசாலை அருகில்)* (11690)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

யாழ்ப்பாணம்.



உதயன்

## இந்தியத் தூதரகம் நீதி செய்யுமா?

வருடந்தோறும் ஆயிரத்துக்கு மேற்பட்ட இலங்கை மாணவர்களுக்கு இந்தியா புலமைப் பரிசில் வழங்கி வருகின்றது.

கொழும்புக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென இத்தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட 'வெளிநாட்டு மாணவர் தினம்' நிகழ்வில் உரையாற்றும்போதே தூதுவர் சென் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

இந்தியாவினால் வழங்கப்படும் இந்தச் சந்தர்ப்பத்தை இலங்கை மாணவர்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும் அவர் கோரியிருக்கின்றார்.

சந்தர்ப்பத்தைச் சரிவரப் பயன்படுத்த வேண்டும் என்ற வழிகாட்டல் ஒருபுறமிருக்க, மறுபுறம் சந்தர்ப்பம் சரியாக வழங்கப்படுகின்றதா என்ற ஆதங்கம் இலங்கை மக்களில் - மாணவர்களில் - ஒரு பகுதியினருக்கு இருப்பதைக் குறிப்பிட்டேயாகவேண்டும்.

இலங்கைத் தமிழர்களும் இந்தியத் தமிழர்களும் தாம் வாழும் நாட்டினால் வேறுபட்டாலும் கலாசாரம், பண்பாடு, சரித்திரப் பிணைப்பு, வாழ்க்கைமுறை, மொழி போன்றவற்றால் பெரிதும் இணைக்கப்பட்டவர்கள். அவர்களின் தொடர்பு தொப்புள் கொடி உறவு போன்றது.

மலையகத்தில் பெரும் எண்ணிக்கையில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கும் தமிழகத் தமிழர்களுக்கும் உள்ள தொடர்பு போன்றதே வடக்கு-கிழக்குத் தமிழர்களுக்கும் இடையிலான தொடர்பும்.

1980களுக்கு முன்னர் கல்வித்துறையில் இந்தியக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களினால் பெரிதும் நன்மையடைந்தவர்களின் வரிசையில் முன்னணி இடம் வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்கே உரியது என்றால் அது மிகையாகாது.

ஆனால், 1990களுக்குப் பிறகு நிலைமை முற்றிலும் மாறிவிட்டது.

இந்திய அமைதிப் படையின் இலங்கை வருகையன் பின்னர் நிலைமையில் தலைகீழ் மாற்றம்.

இந்தியப் படை வடக்கு - கிழக்கில் நிலைகொண்டிருந்த ஆரம்ப காலத்தில்கூட வடக்கு - கிழக்கு மாணவர்களுக்கு கணிசமான அளவு புலமைப் பரிசில்கள் இந்தியாவினால் வழங்கப்பட்டதை வடக்கு - கிழக்கு கல்வியாளர்கள் நன்றியுடன் நினைவு கூருகின்றார்கள்.

இப்போதுகூட கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகமும் இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவும் இந்தியப் புலமைப் பரிசில்களுக்கு பத்திரிகையில் விளம்பரங்கள் கோரி, விண்ணப்பங்களைச் சேகரித்து, நேர்முகப் பரீட்சைகளை வைத்து மாணவர்களைத் தேர்ந்தெடுக்கின்றன. அதனை யாரும் மறுக்கவில்லை.

ஆனால், அந்த வகையில் தெரிவாகும் வடக்கு-கிழக்கு தமிழர்களின் எண்ணிக்கை கணிசமாக வீழ்ந்து விட்டது என்ற கவலை அவர்களுக்கு உள்ளது. யுத்தத்தினால் பாதிப்புற்ற படையினரின் பிள்ளைகள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கு அதிக சந்தர்ப்பம் வழங்கப்படுவதாக ஒரு பேச்சு அடிபடுகிறது.

அதேவேளை, தங்களன் முந்திய தலைமுறைககு வழங்கிய அதே உயர்ந்த வசதி, வாய்ப்புக்களை இப்போது தங்களுக்குத் தரமாட்டார்களா? - என்ற எதிர்பார்ப்பும் ஆவலும் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு உண்டு என்பதை இந்தியாவுக்கும் இந்தியத் தூதரகத்திற்கும் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது.

அதற்காக இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியா முழுக் கதவடைப்புச் செய்துள்ளது என்று குற்றம் சுமத்துவது பொருத்தமற்றது; உண்மைக்கு மாறானது.

'நீதி நிலைநாட்டப்படுவதோடு நிலை நாட்டப்படுவதுபோலக் காட்டப்படவும் வேண்டும்' (Justice should not only be done but also appear to be done) அது நடைபெறவில்லை. அதுதான் துரதிர்ஷ்டம்.

யுத்தத்தினால் கல்வி உட்பட பல்வேறு துறைகளில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு - கிழக்கு தமிழர்கள். அவர்களுக்கும் நீதி வழங்கப்படுகிறது; நியாயம் செய்யப்படுகிறது என்பதை உணர்த்த வேண்டிய கடமை இந்தியத் தூதரகத்துக்கு உள்ளது.

அரசியல் உறவுகள், நிலைமைகள் எவ்வாறு இருந்தாலும் அவை கல்வித் துறை வசதி, வாய்ப்பில் நியாயம் செய்யப்படுவதை பாதிக்க அனுமதிக்கப்படமாட்டாது என்பதைப் புள்ளிவிவரங்களுடன் தெளிவுபடுத்துவது - உறுதிசெய்வது - தூதரகத்தின் பொறுப்பாகின்றது.

கடந்த இரண்டு, மூன்று தசாப்தங்களாக வழங்கப்பட்ட புலமைப் பரிசில்களின் இன, பிரதேச ரீதியான புள்ளிவிவரங்களை அம்பலப்படுத்துவது நியாயத் தன்மையை நிரூபிக்க உதவக்கூடும்.

# உவரான நிலங்களைச் சீர்ப்படுத்தி பயிர்ச்செய்கைக்கு உட்படுத்த திட்டம்

## ஆராய அரச அதிபரால் குழு நியமனம்

வலி.மேற்கு,டிசெ.14

யாழ்.மாவட்டத்தில் உவர்நிலமாக மாறியுள்ள காணிகளை மீண்டும் பயன்பாட்டுக்குரியவையாக மாற்றும் திட்டம் ஒன்றை யாழ்.செயலகம் மேற்கொண்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக மேற்படி திட்டம் தொடர்பாக ஆராய்வதற்கென யாழ்.அரச அதிபரினால் குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்.அரச அதிபர் பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் பயிர் செய்யக்கூடியதாகக் கணிப்பிடப்பட்டுள்ள காணியில் 3 ஆயிரத்து 83 ஹெக்டேயர் நிலப்பரப்பு உவர்நிலமாக மாற்றம் பெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் மேற்படி நிலத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளமுடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்கள் தமது பிரதேசத்தில் உவர் நீரினால் பாதிக்கப்பட்டுள்ள இடங்கள், உவர்நீர் பாதிப்புக்கான காரணம், பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் முதலிய சகல விவரங்களையும் இது தொடர்பாக நியமனம் செய்யப்பட்ட குழுவுக்கு அனுப்பிவைக்கவேண்டும் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் நியாப் திட்டத்தின்கீழ் நீண்டகால அடிப்படையில் உவர்நிலப்பரப்பை மீளப் பயன்பாட்டுக்குள் கொண்டு வரத் திட்டமிடப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-175)

# ஆயிரத்துக்கும் அதிக இலங்கை மாணவருக்கு வருடந்தோறும் இந்தியாவில் புலமைப் பரிசில்

கொழும்பு,டிசெ.14

வருடந்தோறும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்களுக்கு இந்தியா புலமைப் பரிசில் வழங்கி வருகின்றது. வெளிநாட்டு மாணவர்களுக்கான கல்வித் திட்டங்களின்கீழ் வருடந்தோறும் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த சுமார் 12 ஆயிரம் மாணவர்கள் இந்தியாவில் கல்விகற்று வெளியேறுகின்றார்கள்.

கொழும்புக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென் இவ்வாறு கூறினார்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் 'வெளிநாட்டு மாணவர்கள் தினம்' கடந்த புதன்கிழமை கொழும்பு ஹோட்டல் தாஜ் சமுத்திராவில் கொண்டாடப்பட்டது.

அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே தூதுவர் சென் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவின் முதலாவது கல்வி அமைச்சர் அமரர் மௌலானா அப்துல் கலாம் அஸாத். அவரின் பிறந்தநாளை வருடந்தோறும் 'வெளிநாட்டு மாணவர்கள் தினமாக' அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த புதன்கிழமை நடந்த இந்த நிகழ்வில் தூதுவர் சென் மேலும் கூறியதாவது:-

இந்தியாவின் சிறந்த கல்வித் திட்டங்களை அறிமுகப்படுத்தியதில் முதன்மையானவராகத் திகழ்ந்தவர் அப்துல் கலாம்.

இவர் இந்தியாவின் இறைமைக்கும் ஐக்கியத்திற்கும் மிகவும் கரிசனையுடன் செயற்பட்டவர். இந்தியா என்ற நாடு பிரிந்து போய்விடக்கூடாது என்பதற்காகப் போராடியவர்; சிம்லா ஒப்பந்தம் கைச்சாத்திடக் காரணமாக இருந்தவர்.

அவர் வகுத்த கல்விக் கொள்கை காரணமாக வெளிநாட்டு மாணவர்கள் இந்தியாவில் கல்விகற்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு, கணனித் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் இந்தியா முன்னணி வகிக்கின்றது.

வழங்கப்படும் இச்சந்தர்ப்பத்தை இலங்கை மாணவர்கள் சரியாகப் பயன்படுத்தி முன்னேறவேண்டும்.

இந்தோனேசியாவுக்கு அடுத்த கட்டமாக 15 கோடி முஸ்லிம்கள் இந்தியாவில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் இந்தியாவின் ஐக்கியத்திற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் இந்தியன் என்ற எண்ணத்துடன் உழைத்துவருகின்றனர்.

பல்வேறு சமூகங்களையும் பல்வேறு மொழிகளையும் கொண்ட மாபெரும் ஜனநாயக நாடான இந்தியாவின் முன்னேற்றத்திற்காகப் பல முஸ்லிம் பெரியார்கள் முன்னின்று உழைத்தார்கள். பாகிஸ்தான் பிரிந்துவிடக்கூடாது என்பதற்காக மகாத்மாகாந்தியுடன் கைகோர்த்து பல முஸ்லிம் தலைவர்கள் போராடினார்கள். அந்த வரிசையில் அப்துல் கலாம் அஸாத்தும் முன்னிலை வகிக்கின்றார் - என்றார் தூதுவர் சென்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா கூறியதாவது:-

இந்தியா அறிமுகப்படுத்திய கல்வித் திட்டத்தால் வெளிநாட்டு மாணவர்கள் அங்கு கல்விகற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

இலங்கையில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இதற்கு மூலகாரணமாகக் கருதப்படக்கூடியவர் அப்துல் கலாம் அஸாத் என்ற மாமனிதராவார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நெருக்கமான சமூக, கலாசார உறவுகள் உள்ளன.

அதைப்போல இரு நாடுகளுக்கும் இடையில் சுமுகமான இராஜதந்திர உறவுகள் நீண்டகாலமாக நிலவிவருகின்றன. சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் இதற்கு முன்னுதாரணமாகும்.

இந்தியாவின் சிறந்த அணுகுமுறையும், இராஜதந்திரமும் அந்த நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் ஒன்றாகும். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அந்த நாட்டின் முஸ்லிம் தலைவர்கள் முன்னின்று உழைத்தார்கள். அந்த வரிசையில் அப்துல் கலாம் அஸாத் முதன்மையானவர்.

இந்தியா பல மொழிகளையும் பல இனக் குழுக்களையும் கொண்ட ஒரு பெரிய ஜனநாயக நாடாகும்.

தொழில்நுட்பத்துறையில் உலகின் வல்லரசுகளுடன் போட்டியிடும் நிலைமையில் இந்தியா இருக்கின்றது.

தம்மை 'இந்தியர்' என்றே அங்கு வாழும் மக்கள் அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். தமது இனத்தை முன்னிலைப்படுத்தி அவர்கள் செயற்படுவதில்லை. இந்தியாவின் ஐக்கியம்தான் அந்த நாட்டின் பலம். அதுதான் அந்த நாட்டின் முன்னேற்றத்துக்கும் காரணம்.

இந்தியா என்றுமே சமதர்மத்தை வலியுறுத்தி வரும் நாடு. அதன் தலைவர்களும் அதே கொள்கையையே வலியுறுத்தி வருகின்றனர்.

சிறந்த விஞ்ஞானிகளையும் சிறந்த தலைவர்களையும் ஆன்மீகவாதிகளையும் உலகுக்குத்தந்த பேறும் இந்தியாவையே சாரும் என்றார்.

தொடர்ந்து உரை நிகழ்த்திய மூன்றாம் நிலை கல்வி அமைச்சர் கபீர் ஹாசிம் கூறியதாவது:-

இந்தியாவின் தொழில்நுட்பத்திறனைக் கண்டு முழு உலகுமே வியந்து நிற்கிறது. தகவல் தொழில்நுட்பத்தில் இந்தியா வரலாறு படைத்துள்ளது. உலகின் வல்லரசான அமெரிக்காவின் இளம் சமுதாயங்கூட இந்தியாவிற்கே வந்து அங்கு கல்வி கற்றுவருகின்றது.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளின் ஆயிரக்கணக்கான மாணவர்கள் இந்தியாவில் கல்வி கற்று வருகின்றனர்.

பல சிறந்த பல்கலைக்கழகங்கள், பல சிறந்த கல்லூரிகள் - சர்வதேச தரத்துடன் இந்தியாவில் இயங்கிவருகின்றன. பல ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர்கள் அந்த நாட்டில் கல்வி கற்றுவருவது அந்த நாட்டின் முன்னேற்றத்தைக் காட்டுகிறது.

இந்தியாவின் கல்விக் கொள்கைகளை வகுத்த அப்துல் கலாம் அஸாத், அந்த நாட்டின் சிறந்த தலைவராவார். அவர் 1940ஆம் ஆண்டு இந்திய காங்கிரஸின் தலைவராக இருந்தார்.

பல இனங்களைக்கொண்ட - பாரிய நிலப்பரப்புடன்கூடிய நாடாக இருந்தபோதும், அங்கு வாழும் நூறு கோடி மக்களும் ஏகோபித்து ஒரு குரலில் - ஒன்றாகச் செயற்படுகின்றனர். அத்தகைய பெருமை உலகின் வேறு எந்த நாட்டுக்கும் கிடையாது.

இதனால், சகலதுறைகளிலும் ஏனைய நாடுகளுக்கு நிகராகத் திகழக்கூடிய வல்லரசாக அது திகழ்கிறது - என்றார் அமைச்சர் காசிம். (ம)

# கொழும்புத்துறை மேற்கில் படையினரின் புதிய முகாம்

## மீளக்குடியமர்ந்தோர் மத்தியில் பீதி

அரியாலை,டிசெ.14

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதியில் - சிவன் கோயில் அமைந்திருக்கும் பகுதியில் இராணுவத்தினர் புதிதாக முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இந்த ஆலயத்திற்குச் சொந்தமான வீட்டிலும், அதனை அண்டிய மக்களின் குடிமனைகளையும் உள்ளடக்கியதாக படையினர் இந்த முகாமை அமைத்து அதனைப் பலப்படுத்தி வருகின்றனர் என பொதுமக்கள் தரப்பில் கூறப்பட்டது.

மேற்படி முகாம் அமைக்கப்பட்டதையடுத்து அப்பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்கள் மத்தியில் பீதி நிலவுவதாகவும் கூறப்பட்டது. (எ-12)

### நாளை

கார்த்திகை 29
ஞாயிற்றுக்கிழமை
(15.12.2002)
திதி : ஏகாதசி
முன்னிரவு 7.23வரை.
நட்சத்திரம்: அச்சுவினி
முன்னிரவு 11.16வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 9.21 - 10.31
ராகுகாலம் : 4.51 - 3.21
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

வாழ்க்கை என்பது இனிய கதையோட்டமுள்ள நாவலன்று; படிப்பதையே திருப்பித் திருப்பிப் படிக்க வேண்டிய கணக்குப் புத்தகம்.

# விவசாய நிலங்களில் மீண்டும் 'பாதீனியம்'

## உரிய நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.14

தற்போது தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையை அடுத்து 'பாதீனியம்' களையின் பெருக்கம் குடாநாட்டின் விவசாயப் பகுதிகளில் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக தோட்டநிலங்களிலும் மற்றும் பொது இடங்களிலும் 'பாதீனியம்' கிடுகிடுவென பெருகிவருவதாக சம்பந்தப்பட்ட பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

குறிப்பாக நீர்வேலி முருகமூர்த்தி கோயிலடி, வெள்ளவாய்க்காலடி பகுதிகளிலும் வலிகாமம் தெற்கு, வலிகாமம் மேற்கு விவசாய நிலங்களிலும் இதன்தாக்கம் அதிகரித்துள்ளதாகக் கூறப்பட்டது.

மேற்படி பகுதிகளில் பெருகிவரும் பாதீனியக் களைகளை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-17-152)

உ
சிவமயம்

# வட இந்திய காசி பத்ரிநாத், கேதார்நாத்,அமர்நாத் யாத்திரை

பூரி, புவனேஸ்வர், கோனராக், காசி, சாரணாத், கயா, புத்தகயா, கல்கத்தா, ஜெய்ப்பூர், அலகாபாத் (திரிவேனிசங்கமம் கங்கா, ஜமுனா, சரஸ்வதி) அயோத்தி, மதுரா, ஹரித்துவார், ரிஷிகேஸ், பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்திரி, ஜமுனோத்திரி, டெல்லி, ஆக்ரா (தாஜ் மஹால்), அமர்நாத், வைஸ்ணவிதேவி, சென்னை, இராமேஸ்வரம், திருச்செந்தூர், சுசீந்திரம், கன்னியாகுமரி, மதுரை, திருச்சி, சிதம்பரம், சென்னை, 35 நாள்கள். ஆண்கள் 75 வயதுக்குள், பெண்கள் 45 வயதிற்கு மேல் 70 வயதுக்குள் ஆரோக்கியமானவர்கள் மட்டும். விருப்பமுடையவர்கள் 31.03.2003இற்கு பிந்தாமல் தங்கள் பாஸ்போட் பிரதி 2, அடையாள அட்டை பிரதி 2 அத்துடன் ரூபா 1000/- முற்பணம் செலுத்தி முன்பதிவு செய்துகொள்ளவும்.

இந்த யாத்திரைகள் 2000ஆம் ஆண்டு காலமான என் மனைவியின் நினைவாக சேவை நலங்கொண்டு குறைந்த செலவில் நடத்தும் யாத்திரை.

மேலும் விவரங்களுக்கு: T.ஸ்ரீரெங்கநாதன்.
தொ.இல.: 0777-680102
(சி-25333) (25 பேர் மட்டுமே)


# வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம்,நவ.14

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் சுதேஷித சில்வா என்பவர் இயக்கிய தொலைக்காட்சி நாடகமான 'சமனல வியாபய' (வண்ணத்துப் பூச்சிகளின் விசும்பல்) நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புவியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படும்.

இந்தத் தொலைக்காட்சி நாடகம் தமிழ், சிங்களம் இரு மொழிகளிலும் அமைந்ததென்பது குறிப்பிடத்தக்கது. ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

# எரிபொருள் விற்பனை நிலையம் புனரமைப்பு

அரியாலை,டிசெ.14

வேலணை பல நோ.கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையம் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையம் சங்கத்தின் நிதி மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை - இந்த எரிபொருள் விற்பனை நிலையத்தின் தேவைக்கென மூன்று மின்சார மீற்றர் பம்பிகளை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய அலுவலகம் வழங்கியுள்ளது. (எ-17)

# குழுக்கன் குளத்தை புனரமைக்கக் கோரிக்கை

அராலி, டிசெ.14

அராலி மத்தியில் உள்ள குழுக்கன் குளத்தைப் புனரமைக்கும்படி அப்பகுதி மக்கள் கோருகின்றனர்.

இக்குளத்தின் கரைக்கட்டு அல்லது அணை அற்ற நிலையிலேயே உள்ளது. இதனால் மழைகாலங்களில் குளம் நிரம்பி வீதிக்கும் குளத்துக்கும் வித்தியாசமின்றி உள்ளது.

இதனால் சிறுவர்கள் உட்பட பலரும் குளத்தினுள் விழ நேரிடுகிறது.

குளம் பெருக்கெடுக்கும் வேளைகளில் குடியிருப்புக்கள் பாதிப்படைகின்றன. இவற்றை சுட்டிக்காட்டியே மக்கள் குளத்தை புனரமைக்குமாறு கோருகின்றனர். (ஒ-ரி)


# தனியார் சுத்திகரிப்புச் சேவை

யாழ்.போதனா வைத்தியசாலையில் சுத்திகரிப்புச் சேவையை 2003ஆம் ஆண்டுக்கு மேற்கொள்ளத் தனியார் சுத்திகரிப்புச் சேவை நிலையங்களிலிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. 01.01.2003 - 31.12.2003 வரையும் வைத்தியசாலை விடுதிகள், மலசல கூடங்கள், விடுதிகள், கான்கள் போன்றவற்றை சுத்திகரிப்புச் செய்தல்வேண்டும். விண்ணப்ப முடிவு திகதி 26.12.2002. தேவையான ஊழியரின் எண்ணிக்கை - 23, மேற்பார்வையாளர்கள் -02. விண்ணப்பங்கள் 26.12.2002 வரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் கேள்விகள் திறக்கப்படும். தகுதியுடைய தனியார் சுத்திகரிப்பு நிறுவனங்கள் விண்ணப்பங்களை நேரிலோ அல்லது தபால்மூலமோ *பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(விண்ணப்ப முடிவுதிகதி: 26.12.2002 நேரம் காலை 10 மணி)

பதில் பணிப்பாளர்,
வைத்திய கலாநிதி எஸ்.சிவசுப்பிரமணியம்
(C/25377) போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 05 | | 25 |
| - |  | - |
| 09 | | 11 |
| - | | - |
| 1933 | | 2001 |

## அமரர் நமசிவாயம் திருநாவுக்கரசு

*(மண்கும்பான் 4ஆம் வட்டாரம்)*

திதி: 14.12.2002

*எங்கள் இதயத்தில் நிறைந்திருக்கும்*
*எம் இனிய ஐயாவே! நீங்கள்*
*இவ்வுலகை விட்டோராண்டு ஆனாலும்*
*மாறிடுமோ எம்துயரம்! மறைந்திடுமோ உங்கள் முகம்?*
*கண்ணின் கருமணி போல்*
*எமை வளர்த்த தெய்வமே!*
*இன்றுங்கள் அன்பும் அரவணைப்பும்*
*எங்குதான் போனதையா?*
*வழிந்தோடும் விழி நீரில்*
*எங்கள் விழிதேடும் உங்கள் முகம்*
*விழிதேடும் இடமெல்லாம்*
*விம்பமாய் தோன்றுதையா!*
*உயிருள்ளவரை என்றும்*
*உங்கள் நினைவிருக்கும்*
*அந்த இனிய நினைவதில்*
*உங்கள் அன்பு முகம் என்றும் நிலைத்திருக்கும்!*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*கொக்குவில் மேற்கு,* உங்கள் நினைவில் வாழ்ந்துவரும்:
*கொக்குவில்.* (11640) - குடும்பத்தினர்.


# செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபை

## வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்

செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபையின் எட்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் பின்வரும் தினம் குறிப்பிட்ட இடத்தில் நடைபெறவுள்ளது.

தினம்: 29.12.2002 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணி.

இடம்: செம்மணி மயான கட்டடத்திலுள்ள மண்டபத்தில்.

பிரேரணைகள் 25.12.2002ஆம் நாளுக்கு முன் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

சகல உறுப்பினர்களையும் மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி கோருகிறோம்.

கு.கயிலாயபதி, தலைவர். லயன் வ.பரமசிவம் ஜே.பி. கௌரவ செயலாளர்.
இ.தணிகைநாதன் பொருளாளர்.
(11582)



# கேள்வி அறிவித்தல்

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

யாழ்.போதனா வைத்தியசாலை தாதிய பாடசாலைத் தேவைகளுக்காக கீழ்வரும் தளபாட வகைகள் வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

1. இரும்புக் கட்டில்கள்
2. சாப்பாட்டு மேசைகள்
3. சாப்பாட்டு மேசைக் கதிரைகள்
4. மர அலுமாரிகள் (கண்ணாடிக் கதவுடன்)
5. மர அலுமாரிகள்
6. ரவல் ராக்கைகள்

1. மாதிரிப் பொருள்களை 21.12.2002 காலை 11 மணிவரை அலுவலக நேரத்தில் இப்பணிமனையில் பார்வையிடலாம்.
2. விண்ணப்பங்கள் யாவும் இப்பணிமனையால் வழங்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தில் மாத்திரம் அனுப்பிவைக்கப்படவேண்டும். விண்ணப்பப்படிவத்தையும் பொருள்களின் மாதிரி வரைபடத்தையும் பெறுவதற்காக ரூபா 50ஐ இப்பணிமனையில் மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் பொருள்களை குறிப்பிட்ட தினத்தில் 31.12.2002 அல்லது அதற்கு முன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.
4. விண்ணப்பங்கள் யாவும் 9"X 4" தபாலுறையில் இடப்பட்டு *தலைவர், கேள்விச்சபை, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால்மூலமோ 23.12.2002 காலை 11 மணிக்கு பிந்தாமல் அனுப்பிவைக்கப்படவேண்டும். கேள்விப்பெட்டி உடனடியாகத் திறக்கப்பட்டு கேள்விகள் வாசிக்கப்படும் அதேநேரத்தில் கேள்விதாரரோ அல்லது அவரால் நியமிக்கப்படும் முகவரோ சமுகமளிக்கலாம்.

வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகம்
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். (C/25376)
11.12.2002.



மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

ஒருமுறை விஜயம் செய்யுங்கள் | உண்மை புரியும்

கிறிஸ்மஸ் புதுவருடத்தை முன்னிட்டு

# மெக்ஸ் புடைவை மாளிகை

நிறுவனத்தாரின் அதிரடி மலிவு விற்பனை 06.12.2002முதல் 31.12.2002வரை

* சுபமுகூர்த்தப் பட்டுப்புடைவைகள் உட்பட இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன சாறி வகைகளும் பிளவுஸ் துணிகளும்.
* நங்கையர் விரும்பும் ஸ்கேட் அன் பிளவுஸ், புறொக்ஸ், பினபோம், சல்வார்கமிஸ்.
* ஆடவர் விரும்பும் சேட், Tசேட், ஜீன்ஸ், சூட்டிங்.
* சிறுவர், சிறுமியர்களுக்கான நவீன ஆடைத் தெரிவுகளுக்கும் இன்றே நாடுங்கள்:



மெக்ஸ் புடைவை மாளிகை
*இல.34, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
(11460)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணுலகில் | | விண்ணுலகில் |
|---|---|---|
| 1924 | | 2001 |
| - |  | - |
| 03 | | 11 |
| - | | - |
| 16 | | 25 |


## அமரர் அப்பாக்குட்டி தம்பையா

திதி: 2002-12-14 சனிக்கிழமை

என்றும் உங்கள் நீங்காத நினைவுடன்
உங்கள் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

*73, இராமநாதன் வீதி,* மனைவி,
*நாயன்மார்கட்டு,* பிள்ளைகள், மருமக்கள்,
*யாழ்ப்பாணம்* (C/25360) பேரப்பிள்ளைகள்.

# மூன்றாவது ஆண்டு நினைவுகளில்.....



அமரர்
## செல்லையா சிவபாலன்

பிறப்பு 07.02.1946 | திதி 14.12.2002 | இறப்பு 18.11.1999

உணர்வுக்குள் உன் நினைவெரிய
நெஞ்சோடு நீளமாய் ஒரு மாரி.

நேற்றுப் போல...
காற்றோடு வந்தொரு சேதி
காதைச் சுட்டதுவும்
கொட்டுமொரு மழையில் உன்
கட்டுடலை சிதையில் இட்டதுவும்
அது ஜீவனைச் சுட்டதுவும்
நேற்றுப் போல...
ஆயிற்று மூன்றாண்டு
ஆறவில்லை மனதின் ரணங்கள்.

உயிர்வேரில் உறவாகி இருந்தவனே!
நெஞ்சத்தில் நினைவாகி கலந்தவனே!
நாள்கள் இருக்கும்வரை...
நாங்கள் இருக்கும் வரை...
நெஞ்சோடு நிஜமாகி நீயிருப்பாய்.

குடும்பத்தினர்.

*சங்கரப்பிள்ளை வீதி,*
*ஆனைக்கோட்டை.*
(11623)

## முஸ்லிம் காங்கிரஸில் மாற்றுத் தலைமையை ஏற்கமுடியாது

# ஹக்கீம்தான் தேசியத் தலைவர் அம்பாறை மாவட்டம் அங்கீகாரம்

### நிந்தவூர் மசூறா கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம்

நிந்தவூர்,டிசெ.14

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு மாற்றுத் தலைமை எதையும் ஏற்றுக் கொள்ளமுடியாது. ரவூப் ஹக்கீம்தான தேசியத் தலைவர் என்று அம்பாறை மாவட்டம் அங்கீகாரம் அளித்து அவரை அரவணைத்துக் கொண்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமங்களையும் சேர்ந்த முக்கியஸ்தர்கள் மற்றும் போராளிகள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில இது சம்பந்தமாக தீமானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டம் நிந்தவூர் முஸ்லிம் காங்கிரஸ் மசூறா சபையின் ஏற்பாட்டில் சபைத் தலைவரும் தொழில் அதிபருமான அல்ஹாஜ் வை.எல்.ஹபீப் முகம்மது தலைமையில் நிந்தவூர் பொது நூலக கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை மாலை நடைபெற்றது.

கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீமானத்தின் வாசகம் வருமாறு:-

'ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம்தான். அவருடைய தலைமைத்துவத்தைக் கேள்விக்கு உட்படுத்துவதையும் மாற்றுத் தலைமைதுவம் என்பதையும் ஒருபோதும் ஏற்க முடியாது. அதனை (மாற்றுத் தலைமைத்துவத்தை) முற்றாக நிராகரிக்கிறோம்' இதுதான் தீர்மானம்.

முஸ்லிம் காங்கிரஸ் இப்போது இரண்டாக பிளவுபட்டு இருக்கிறது. அமைச்சர் அதாவுல்லா வழிநடத்தி வரும் அணியும் முஸ்லிம் காங்கிரஸ் என்ற பெயரில் இயங்கிவருகிறது. அமைச்சர் அதாவுல்லா அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர், அமைச்சர் ஹக்கீம் கண்டியைச் சேர்ந்தவர்.

அம்பாறை மாவட்டத்தை அடித்தளமாகக் கொண்டு மறைந்த தலைவர் அஷ்ரப்பினால் ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸுக்கு அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரே தலைவராக இருக்க வேண்டும். இப்படி வற்புறுத்தி வந்த அம்பாறை மாவட்ட முஸ்லிம் சமூகம், இப்போது ரவூப் ஹக்கீமின் அறிவு, ஆற்றல், அரசியல் சாணக்கியம் ஆகியவற்றிற்கு மதிப்பளித்து அவரின் சேவை தனக்குத் தேவை என்று உணரத் தலைப்பட்டுவிட்டது.

அதன் பிரதிபலிப்புத்தான் நிந்தவூரில், மாற்றுத் தலைமையை ஏற்க முடியாது, ரவூப் ஹக்கீம்தான் தேசியத் தலைவர் என்று நிந்தவூர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீமானம் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றார்கள்.

(ஐ)




உடுவில் இந்து இளைஞர் மன்றம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் முதலாம்திகதி தி.தியாகச்சந்திரன் தலைமையில் நாவலர் விழாவினைக் கொண்டாடியது. இவ்விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கௌரவவிருந்தினர்களுக்கு பொன்னாடை போர்த்து கேடயம் வழங்கி கௌரவித்தார். யாழ். நாவலர் சபைத் தலைவரும், சைவபரிபாலனசபை பரீட்சைச் செயலாளருமான சைவப்புலவர் வ.கந்தசாமிக்கு துணைவேந்தர் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்திற்காணலாம்.

*(படம்: வலி.தெற்கு செய்தியாளர்)*

## நாரந்தனை தாக்குதல் வழக்கு:

# டக்ளஸும் மன்றில் ஆஜராகி சாட்சியம் அளிக்கவேண்டும்!

### மாவை சேனாதிராஜா நீதிவானிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.14

நாரந்தனை தாக்குதல் வழக்கில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சந்தேக நபர்களாக இருப்பதால் அந்த அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் நீதிமன்றில் ஆஜராகி சாட்சியமளிக்கவேண்டும்.

- இப்படி கோரிக்கை முன்வைத்தார் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

கடந்த தேர்தல் காலத்தில் பிரசாரப் பணிக்காக தீவகம் சென்ற கூட்டமைப்புத் தலைவர்கள், ஆதரவாளர்கள் நாரந்தனையில் வைத்து தாக்கப்பட்டதில் இருவர் உயிரிழக்க, பலர் காயமடைந்திருந்தமை தெரிந்ததே.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாட்சியமளிக்கையிலேயே மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு நீதிவானிடம் தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:-

முன்னால் சென்றுகொண்டிருந்த எமது ஆதரவாளர்களை கும்பல் ஒன்று தாக்கிக்கொண்டிருந்தவேளையில் அவர்களுடன் கதைப்பதற்கு சென்ற என்னையும் அக்கும்பல் இரும்புக் கம்பியினால் தாக்கியது.

தலையில் தாக்கியதால் இரத்தம் வெளியேறிய நிலையில் திரும்பவும் அவர்கள் என்னைத் தாக்கமுற்பட்டனர். அவற்றைக் கைகளால் தடுத்த போது கைகளிலும் காயமேற்பட்டது. இந்த நேரத்தில் எமது ஆதரவாளர் பேரம்பலமும் காயமடைந்த நிலையில் இருப்பதைக் கண்டேன். என்னைத் தாக்கியவர்களை அடையாளம் காட்ட முடியும்.

இந்தச் சம்பவமும் இது தொடர்பான வழக்கும் மக்கள் மத்தியில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் நீதிமன்றம் உண்மையை நிலைநாட்டவேண்டும். எதிர்காலத்தில் இப்படியான சம்பவங்கள் இடம்பெறுவதற்கு நீதிமன்று இடமளிக்கக் கூடாது.

ஈ.பி.டி.பியின் தீவகப் பகுதி இராணுவப் பொறுப்பாளரான நெப்போலியன் நீதிமன்றினால் பிணையில் விடப்பட்ட பின்பு தலைமறைவாகியுள்ளார். எனவே, அக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நெப்போலியனை மன்றில் முற்படுத்த வேண்டும்.

அத்துடன் ஈ.பி.டி.பியினர் இச்சம்பவத்தில் ஈடுபடவில்லை; தீவக மக்களே இதனைச் செய்தார்கள் என்று பத்திரிகைகளில் தெரிவித்துவரும் டக்ளஸ் தேவானந்தா, இப்பொழுது ஈ.பி.டி.பியினரே இவ்வழக்கில் சந்தேக நபர்களாக இருப்பதால் தானும் மன்றுக்கு வந்து சாட்சியமளிக்கவேண்டும் - என்றார் அவர்.

சந்தேக நபர்களான ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.மதனராஜா, வேலணை பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகர குருமூர்த்தி, உறுப்பினரான ஜீவன் ஆகியோர் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

விசாரணை அடுத்தமாதம் 16ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(ம-10)

## மீளக்குடியமர்ந்த மாணவர்கள்

# பாடசாலை இலவச சீருடைக்கு ஒருவாரத்துள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.14

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களிலுள்ள பாடசாலை மாணவர்கள் இதுவரை இலவச சீருடைக்கு விண்ணப்பிக்காதுவிட்டால் இன்னும் ஒரு வாரகாலத்துக்குள் தற்சமயம் வதியும் பிரதேச செயலர் அலுவலகங்களில் பதிவுகளை மேற்கொள்ளும்படி யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் கேட்டுள்ளார்.

வெளிமாவட்டங்களில் இருந்து திரும்பிவந்து தற்சமயம் குடாநாட்டில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களின் பிள்ளைகளுக்கு இலவச சீருடையை வழங்க வசதியாக, முன்னர் அவர்கள் வசித்த பிரதேச செயலகத்தில் விவரங்களைப் பெறுவோம் என்றும் -

ஏற்கனவே பதிவு எதையும் செய்யாதவர்கள் தற்சமயம் வதியும் பிரதேச செயலகங்களில் ஒருவார காலத்துக்குள் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் - அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு பதிவுசெய்யத் தவறுபவர்கள் அடுத்த வருடத்துக்கான சீருடையைப் பெறமுடியாது எனவும் அரச அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-3)

# ஷெல் காஸ் விலை மீண்டும் அதிகரிக்கும்

எல்.பி.காஸ் விலை இம்மாத இறுதிக்குள் மீண்டும் அதிகரிக்கப்பட இருப்பதாக காஸ் நிறுவனப் பேச்சாளர் ஒருவர் தெரிவிக்கிறார். உலகச் சந்தையில் ஒரு மெற்றிக் தொன் காஸின் விலை 330 டொலர்களாக அதிகரித்திருப்பதே இதற்கான காரணம் என்று கூறப்படுகிறது.

காஸ் நிறுவனம் அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கமைய இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை காஸ் விலையை அதிகரிக்கமுடியும் எனவும் காஸ் சிலிண்டர் ஒன்றின் விலை 70 ரூபா தொடக்கம் 90 ரூபா வரை அதிகரிக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கடந்த ஒக்டோபர் மாதம் ஷெல் காஸின் விலை 39 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. தற்போது காஸ் சிலிண்டர் ஒன்றின் விலை கொழும்பில் 567 ரூபாவாகும்.

எவ்வாறாயினும், அடுத்த ஆண்டு பெப்ரவரியில் காஸ் விலை குறைய முடியும் என்றும் அப்பேச்சாளர் கூறியிருக்கிறார். முண்டா காஸ் சிலிண்டர் ஒன்று 340 ரூபாவுக்கு வழங்கப்படும் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இன்றைய நிலைப்படி ஏனைய காஸ் சிலிண்டர்களின் விலையை விட 100 ரூபா குறைவாகவே முண்டா காஸை இப்பொழுது வழங்கமுடியும் என்று அந்த நிறுவனத் தலைவர் தெரிவிக்கிறார். இதற்கமைய முண்டா காஸ் சிலிண்டர் ஒன்றின் விலை 400 ரூபாவைத் தாண்டும் எனத் தெரியவருகிறது. (ஐ)

# சுகாதார ஊழியர் பிரச்சினை தீர்க்க ஐந்து அமைச்சர்கள் குழு நியமனம்

கொழும்பு, டிசெ.14

சுகாதார ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்காக ஐந்து அமைச்சர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் கருஜயசூரிய இக் குழுவுக்குத் தலைமை வகிப்பார்.

அமைச்சர்களான பி.தயாரத்ன, ராஜித சேனாரத்ன, வஜிர அபேரத்ன, அலிக் அலுவிகார ஆகியோர் இக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

இக்குழு சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள், சுகாதார அமைச்சின் செயலாளரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவிருக்கின்றது.

இதற்கிடையே, துணை மருத்துவ ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது. வைத்தியசாலை மருந்துக் களஞ்சிய அறைகளின் பூட்டுகள் உடைக்கப்பட்டு மருந்துகள் பெறப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்து அநுராதபுரம், பொலனறுவை, பதுளை, எல்பிட்டிய ஆகிய வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைகளில் ஈடுபடுவதையும் அவர்கள் நிறுத்தியுள்ளனர்.

(ஐ)

## பிரிட்டிஷ் நிபுணர்கள் மேற்கொள்ளும்

# அண்ண, உதட்டு பிளவுகள் சத்திரசிகிச்சை பேராதனையில்

### நோயாளர்களை அழைத்துச்செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.14

விரைவில் கொழும்புக்கு வருகை தரவிருக்கும் பிரிட்டிஷ் மருத்துவக் குழுவினால் அண்ணப்பிளவு மற்றும் உதட்டுப்பிளவு போன்றவற்றுக்கான சத்திரசிகிச்சைகள் பேராதனை பல் வைத்தியசாலையில் வழங்கப்படவுள்ளன.

சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படுபவர்கள் பேராதனைக்குச சென்று திரும்புவதற்கான போக்குவரத்து மற்றும் தங்குமிடவசதிகள் என்பவற்றை சுகாதார அமைச்சு மேற்கொள்ளும் என்றும் -

சத்திரசிகிச்சை வழங்கப்படவேண்டுமெனக் கருதுபவர்கள் யாழ். போதனா வைத்தியசாலைப் பற்சிகிச்சை நிலையத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் - என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்பவர்கள் பல் வைத்திய நிபுணர் குழுவினால் பரிசோதிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட்ட பின்னர் சிகிச்சை பெற அனுமதிக்கப்படுவர்.

இதற்கான ஏற்பாடுகளை சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி உ. சிவபாதசுந்தரம் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ஆகியோர் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். (எ-9)

# வடக்கு - கிழக்கு நிவாரணம் வழங்க மூன்று கோடி டொலர் கடன் உதவி

## உலக வங்கியுடன் மாகாணசபை உடன்படிக்கை

திருகோணமலை,டிசெ.14

இலங்கையில் மிகவும் வறிய நிலையிலுள்ள மக்களுக்கு உதவி வழங்க நாம் முன்வந்துள்ளோம். வறுமையைக் குறைக்கும் உலக வங்கியின் அடிப்படை இலட்சியத்தை மையமாகக்கொண்டே நாம் இதனை மேற்கொள்கின்றோம்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கேட்போர்கூடத்தில் உலக வங்கிக்கும் மாகாண சபைக்கும் இடையிலான உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் ஹரல் தெரிவித்தார்.

மாகாணத்திற்குத் தேவையான அத்தியாவசிய, அவசர மற்றும் புனர்நிர்மாணப் பணிகளுக்கு நிதி உதவியைப் பெறும் பொருட்டு உலக வங்கியுடன் இந்த உடன்பாட்டை மாகாண சபை செய்திருக்கிறது. மாகாண சபையின் தலைமைச் செயலாளர் எஸ். ரங்கராஜா, உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் ஹரல் ஆகியோர் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

இந்நிகழ்வில் உலக வங்கியின் மற்றொரு உயரதிகாரியான திருமதி ஸ்பெல்வின், அரச திணைக்களங்களின் தலைவர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், நியாப் மற்றும் நிக்கோட் நிறுவனங்களின் திட்டப் பணிப்பாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பீற்றர் ஹரல் தொடர்ந்து பேசுகையில்: உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்திச் சங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக சுகாதார ஸ்தாபனம் ஆகியவற்றுடன் இணைந்து அரசாங்கம் மேற்கொண்ட உடனடித் தேவைகள் ஆய்வை அடிப்படையாக வைத்தே அவசர புனர்நிர்மாண திட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. அவ்வாறே நிவாரணம், புனர்வாழ்வு இணக்கப்பாடு என்பவற்றின் அடிப்படையில் தொடர்ந்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இன்றைய உடன்படிக்கையின்கீழ் வழங்கப்படும் 3 கோடியே 10 லட்சம் அமெரிக்க டொலர் சமாதான சூழல் ஏற்படாதிருந்தால் ரத்துச் செய்யப்பட்டிருக்கும். இந்த நிதி வடக்கு - கிழக்குக்கு முன்னர் வழங்கப்பட இருந்தபோதிலும் யுத்த நிலைமை காரணமாக வழங்கப்படவில்லை என்றார்.

வடக்கு - கிழக்கு மாகாணசபை தலைமைச் செயலாளர் எஸ்.ரங்கராஜா உரையாற்றுகையில்:-

மீள்குடியேறிய, குடியேறப்படவிருக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 15,000 ரூபா இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படவிருக்கின்றது என்று கூறினார். (ஐ)

| | | | |
|---|---|---|---|
| | சந். | சனி ரா. | |
| | இராசிச் சக்கரம் | | வியா. |
| புத. | சூரி.▲ கேது | செவ். வெள். | |

# இந்த வார இராசி பலன்

## 15.12.2002 ~ 21.12.2002

**மாற்றம்:**

**15.12.2002இல் அச்சுவினி - மேடம் இராசியில் சந்திரன் நிற்கும்.**

**அரசியல் பேச்சுக்கள் வலுப்பெறும். தெற்கில் அரசியல்வாதிகள் தடுமாறிக் குழபபுவார்கள். இந்தியா தருணம் பார்த்திருக்கும். சுயாட்சியை நடைமுறைப்படுத்துவதில் விடுதலைப் புலிகள் மிகுந்த கவனமாக இருப்பார்கள். இந்தியாவில் தீவிரவாதச் செயல்கள் வடக்கில் தீவிரமாகும். மத்தியகிழக்கில் யுத்த மேகம் கருக்கூடும். எந்த நேரமும் அழிவுகள்; ஈராக் பலஸ்தீனம், இஸ்ரேல், ஈரான், குவைத் போன்ற இடங்களில் ஏற்படலாம். இந்து சமுத்திர, பசுபிக் பிராந்திய, அரபிய நாடுகளில் இயற்கையால் காற்றமுத்தம் - மழை, கொந்தளிப்பு, வெள்ளப் பெருக்கு ஏற்படலாம் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.**

### மேடம்

பெற்றோர் சொல் கேட்டு நடக்காத இளம் சந்ததிகளால் பெற்றோருக்கு எவ்வளவு துன்பம் ஏற்படுகின்றது? அறிவு, ஆற்றல், அனுபவம் இலேசில் வரமுடியுமா? எத்தனை போராட்டத்தின் பின்னர் ஏற்படுகின்றது. தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் கண்டிப்பு இருக்கும். குடும்பத்தில் சகோதரங்களின் அலுவலுக்காக ஓடியாடித்திரிவீர்கள். புத்திரருக்குச் சிறப்புவரும். தூரத்துச் செய்திகளால் மகிழ்ச்சி ஏற்படும். பணவரவு இருக்கும். சளி, நாரிநோ, வயிற்றுப் பொருமல் என்பன ஏற்படும். மாணவர்களுக்குச் சித்திகள் கிடைக்கும். கடல்துறை, வாகனத்துறை, புடைவைத்துறை, அரசியல் துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன, வெள்ளி.*

### இடபம்

ஒரு நாட்டின் நிர்வாக இயக்கத்திற்கு, நடைமுறைகளுக்கு சட்டம், சம்பிரதாயம் கட்டாயம் வேண்டும். அல்லது கட்டுக்கோப்பற்ற அதாவது 'பிறேக்' இல்லாத வாகனம் போன்று மனிதவாழ்வு மாறிவிடும். தொழில் ஸ்தானத்தில் குரோதங்கள் மலியும். வீடு, வாகனத்தால் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் விரோத மனப்பான்மை அதிகரிக்கும். தொடை வருத்தம், கை, கால் விறைப்பு, களைப்பு, உரசல் காயம் என்பன வரலாம். தூரதேசம் செல்ல முயற்சிக்க வேண்டாம். மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். பெரியவர்கள் உதவி செய்வார்கள். செய்தித் துறை, புடைவைத் துறை, நகைத்துறை, இசைத்துறை, மருந்துத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.*

### மிதுனம்

வீட்டுத் தலைவன், தலைவியின் நடசத்திரத்திற்குப் பொருத்தமான சுபமுகூர்த்தத் தினங்களில் வீட்டிற்கு அத்திபாரமோ, சுபகருமங்களோ செய்யலாம். தொழில்ஸ்தானத்தில் பல நன்மைகள் ஏற்படும். மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். எதிர்ப்பாளரால் வீண் வதந்தி பரப்பப்படும். சகோதரங்களுக்கு நன்மைகள் ஏற்படும். நண்பர்களுடன் கருத்து மோதல் இடைக்கிடை வரும். அரசியல்வாதிகளின் நட்பு, உதவி என்பன கிடைக்கும். சளி வருத்தம், தலைப்பாரம், உஷ்ண பீடைகள், வாய்வுத் தொல்லைகள் என்பன வரும். போக்குவரத்துத்துறை, குருத்துறை, பல்பொருள் வியாபாரம் போன்றவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.*

### கடகம்

சொந்த பந்தத்துடன் சேர்ந்திருந்து ஒருவருக்கு ஒருவர் துணையாக இருந்தால் பொருள் சேர்க்கவேண்டும் என்பதில் ஆவல்கொள்ளத் தேவையில்லை. ஆனால், தொழில் ஸ்தானத்தில் பொருளுக்காக பல பிரயத்தனங்கள் ஏற்படும். குடும்பத்தில் கருத்து வேற்றுமை வரும். நகை, ஆடை வர இடம் உண்டு. எதிர்ப்பாலார்களின் உதவிகள் கிடைக்கும். ஆனால், சிலரின் சந்தேகக் கண்கள் நோக்கும். வயிற்றுநோ, சலவருத்தம், சளி, வாய்வு என்பன கொடுக்கும். அரசியல்துறை, பாதுகாப்பு, சட்டத்துறை போன்றவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.*

### சிங்கம்

தொழில்ஸ்தானத்தில் பலமாற்றங்கள் ஏற்படும். புதிய நண்பர்கள் உதவி செய்வர். குடும்பத்தினருக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்படும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். சளித் தொல்லை, கைகால் சோர்வு என்பன கொடுக்க இடமுண்டு. பிரயாணத்துறை, பாதுகாப்புத்துறை, மருந்துத் துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். மாணவர்களுக்கு சித்திகள் கிடைக்கும். பெரியவர்கள் உதவிகள் செய்து தருவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன், வெள்ளி.*

### கன்னி

ஒருவன் நல்லவனாக இருக்க வேண்டும். ஆனால் தீயவர்களின் கொடுமைகளிலிருந்து தப்பிக்கொளள, பிறரைத் தப்பவைக்கக்கூடிய வல்லவனாக இருக்கவேண்டும். தொழிலஸ்தானத்தில் போட்டி, பொறாமையால் பாதிப்பு வரும். ஆனால், எதிர்கொண்டு சமாளித்து வருவீர்கள். இடமாற்றங்கள் சகஜம். தூரத்துச் செய்திகள் மன ஆறுதலைத் தரும். பொருள் கஷ்டம், கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவையாகும். அயலவர்களின் புறுபுறுப்பு வரலாம். இனஜன உதவிகள் கிடைக்கும். சளித்தொல்லை, வாத, வாய்வு, தலை வருத்தம், மந்த நிலை, தொண்டை வருத்தம் என்டன வரும். பிரயாணத்துறை, குருத்துறை, சந்தைத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் கிடைக்கும். மாணவர்களுக்கு இடமாற்றங்கள் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன், வெள்ளி.*

### துலாம்

சட்டத்தைக் காக்கவேண்டியவர்களே சட்டத்தை மீறினால் - மக்களைக் காக்கவேண்டியவர்களே மக்கள் மீது வன்முறைகளைப் பிரயோகித்தால் - மக்கள் என்ன செய்வது? தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி மனக்கிலேசம், இனஜனங்களால் புகைச்சல், மன வெறுப்பு என்பன ஏற்படும். எதிரிகளிடம் மிக அவதானமாக இருக்கவும். தாய்வழி, சகோதர வழியினருடன் கருத்து மோதல்கள் வரலாம். வீடு, வாகன சுகம் கிடைக்கும். அரசியல்வாதிகள், தொழில் இடத்து மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். சனி வருத்தும், தலை நோ, குடல் வருத்தம், நாரி நோ, முதுகு நோ, கழுத்து உளைவு, யோசனை என்பன வரும். ஓய்வு முக்கியமாகும். மாணவர்கள் நன்மை, சோதனைச் சித்தியடைவார்கள். சட்டத்துறை, குருத்துறை, வியாபாரத்துறை, அரசியல்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, புதன், வெள்ளி.*

### விருச்சிகம்

அரசியலில் உலகெங்கும் வன்முறைகள் வலுவடைந்து வருகின்றது. ஈராக்கைத் தாக்க அமெரிக்கா திட்டமிடுகின்றது. பயங்கரவாதத்தைத் தடுக்க சட்டவலுவை - நியாயப் படுத்தப்படுகின்றது. இதனால் இரு திசையிலும் பயங்கரவாதம் பிரயோகப்படுத்தப்பட்டு அப்பாவிகளின் உயிர் அழிக்கப்படுவது விதியின் முடிவுபோல் தெரிகின்றது. தர்மத்தைக் காக்க எத்தனை செயற்பாடு. உங்கள் தொழில்ஸ்தானத்திலும் வன்முறைப்

## மகாதேவா ஜோதிடம்

பிரயோகங்களை மேலுள்ளவர்கள் கீழுள்ளவர்களை நசுக்கச் சந்தர்ப்பம் ஏற்படும். களவு போகும். பணத்தட்டுப்பாடு, வெளியிலிருந்து வரும் செய்திகள் தடுக்கப்படலாம். மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். நெஞ்சு, தொண்டை, நாரி வருத்தங்கள் வரும். சளித் தொல்லை வரலாம். வியாபாரத் துறை, சட்டத்துறை, குருத்துறை, இரும்புத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, புதன், வெள்ளி.*

### தனுசு

சொந்த வீட்டில் படுத்து உறங்குவது போன்ற நிம்மதி எதுவுமில்லை. வாடகை வீட்டில் இருந்து எத்தனை துன்பம்? எத்தனை கட்டுப்பாடு? நாம் எம்மை வலுப்படுத்துவது எமது கையிலேயே இருக்கின்றது எனச் சிந்திப்பீர்கள். தொழில்ஸ்தானத்தில் அடித்து அணைப்பீர்கள்.

சண்டைக்கும் சமாதானத்துக்கும் இடையில் நின்று போராடும் மனோபாவம் உங்களுக்கு மேலிடும். குடும்பத்தினரின் தேவைக்காகப் போராடுவீர்கள். விகடமாகப் பேசி எல்லோரையும் சிந்திக்க சிரிக்க வைத்துக் கலகலப்பாக இருப்பீர்கள். வாகனச் செலவு - பணவரவு என்டன ஏற்படும். குடல்வருத்தம், சல, மல வருத்தம், வயிற்றுநோ, கால் வருத்தம், சளித் தொல்லை வரலாம். செய்தித்துறை, எண்ணெய்த்துறை, வியாபாரத்துறை, புத்தகத்துறை, கடல்துறை, போக்குவரத்துத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் ஏற்படும். மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, புதன், வெள்ளி.*

### மகரம்

பட்டமரம் தளிர்க்காது; பச்சை மரம்படாது தளிர்க்கும். மெல்ல மெல்ல உருவாக்கங்கள் படிப்படியாக வரும். தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புக்கள் வர இடமுண்டு. பணவரவு இருக்கும். இடமாற்றங்கள் சகஜமாகும். வீட்டில் தாயார் அல்லது உறவினர்களின் கொந்தளிப்பு - போராட்ட உணர்வலை வலுப்பெறும். மாணவர்களுக்கு பெரியவர்களின் உதவி, ஆசிரியர்களின் ஆதரவு இருக்கும். தூரத்துச் செய்திகளால் மனக்கிலேசம் வரலாம். மூட்டு வலி, கால்வருத்தம், நரம்புச் சோர்வு, சளித்தொல்லை என்பன வரும். எண்ணெய்த்துறை, பாதுகாப்புத்துறை, குருத்துறை, சந்தைத்துறை, போக்குவரத்துத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன்.*

### கும்பம்

ஊருக்குத் தொண்டுசெய்து உங்கள் உடம்பைக் கெடுத்துக் கொள்வதனால் எதுவும் நடக்காது. அங்கும் இங்கும் ஓடியாடித்திரிவீர்கள். தொழில் ஸ்தானத்தில் மிகுந்த பிரயாசைகள், புதிய பொறுப்புக்கள் மேலிடும். இடமாற்றங்கள் நன்மை தரும். தூரத்திலிருந்து வரும் புதிய செய்திகள் மன உற்சாகத்தைத் தரும். பொருள் களவு போகலாம் கவனம். சில அலுவல்களில் தீவிர, கடும் போக்குடன் நடந்து பிறரின் குறைகளைக் கேட்பீர்கள். பிரயாணங்களைத் தவிர்க்கவும் அல்லது வீண் செலவுகள் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புக்கள் அதிகரிக்கும். கால் வருத்தம், தொண்டை வருத்தம், சளித்தொல்லை என்பன கொடுக்கும். பிரயாணத்துறை, செய்தித்துறை, குருத்துறை, வியாபாரத்துறை, தோட்டத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள் திங்கள், வியாழன்*

### மீனம்

நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டுப் பலர் கலங்குவதைப் பார்த்திருக்கிறீர்களா? பிரயாணங்களில் கவனம். பொருள் இழப்பு கொடுக்கலாம். தொழில் ஸ்தானத்தில் கலகலப்பு ஏற்படும். புதிய திட்டங்களால் நன்மைகள் கிடைக்கும். குடும்பத்தினரின் நன்மைகளுக்காக பொருள் செலவு, ஓடியாடித் திரிவீர்கள். புதிய செய்திகள் உற்சாகம் கொடுக்கும். பொருள் கொடுக்கல் வாங்கலில் அவதானம். காயங்கள் வரலாம். சளித்தொல்லை, வாய்வுத்தொல்லை, கால் வருத்தங்கள் என்பன கொடுக்கும். மாணவர்களுக்கு மாற்றங்கள், நன்மைகள் ஏற்படும். பிரயாணத்துறை, மருந்துத்துறை, கடல்துறை, சந்தை வியாபாரத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள். வியாழன்.*

---

## நெல்லியடி தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.14

சமாதானம் மலர்ந்துவரும் வேளையிலும், மனித உரிமைகள் தினமான கடந்த 10ஆம் திகதி நெல்லியடியில் அப்பாவிப் பொதுமக்கள், வர்த்தகர்கள் மீது பொலிஸாரும், ஈ.பி.டி.பி. ஆயுதக் குழுவினரும் இணைந்து மேற்கொண்ட தாக்குதலினை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

- இவ்வாறு உயர் தொழில்நுட்ப மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது 3ஆம் சுற்றுப் பேச்சுக்கள் முடிவடைந்து சகஜ நிலைக்கு தேசம் திரும்பிக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில், ஆயுததாரிகளாகவும், தேசவிரோத சக்திகளாகவும் மக்களால் இனம் காணப்பட்ட ஈ.பி.டி.பியினர் சமாதானத்தினைக் குழப்புவதனூடாகத் தமது தேசவிரோதச் செயற்பாடுகளை மீண்டும் யாழ்.குடாநாட்டில் தொடர்ந்தும் ஆற்றும் முகமாக தனது செயற்பாடுகளை கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். இதன் ஓர் அங்கமாக கடற்படையினரின் அனுசரணையுடன் நெடுந்தீவில் இரவோடு இரவாக தரையிறக்கப்பட்ட நடவடிக்கையினைக் குறிப்பிடலாம்.

மக்கள் சமாதானத்தை வேண்டி நிற்கின்ற வேளையில் சமாதான முயற்சியை குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஈ.பி.டி.பியினரை வெளியேறக் கோரி மக்கள் பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். இவ்வாறு நியாயமாக ஆர்ப்பாட்டம் நடத்திவரும் மக்கள் மீது ஈ.பி.டி.பி. குழுவினரும், பொலிஸாரும் நெல்லியடியில் நடத்திய கொடூரமான தாக்குதலினை வன்மையாகக் கண்டிக்கின்றோம். (ம)

## பரீட்சை மண்டபம் இடம்மாற்றம்

பருத்தித்துறை,டிசெ.14

பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் அமையவிருந்த எழுதுநர்சேவை ஆள் சேர்ப்புப் பரீட்சைக்கான மண்டபம் III சென் தோமஸ் மகளிர் வித்தியாலய மண்டபத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (எ-118)

### அதியுச்சப் பாதுகாப்பு வலயத்தினுள்

## அடையாளம் காணமுடியாத நிலையில் இருப்பிடங்கள்

### தென்மராட்சி கிழக்குப் பகுதி மக்கள் அதிர்ச்சி

தென்மராட்சி,டிசெ.14

இரண்டரை வருடங்களுக்குப் பின்னர் அதியுச்சப் பாதுகாப்பு வலயத்தில் உள்ள தமது இருப்பிடங்களைப் பார்வையிடச் சென்ற தென்மராட்சி கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தங்களது இருப்பிடங்கள் இருந்த இடத்தைக் கூட அடையாளம் காணமுடியாத நிலையைக் கண்டு பேரதிர்ச்சிக்கு உள்ளானார்கள்.

தென்மராட்சி கிழக்குப் பகுதிகளான எழுமட்டுவாழ் வடக்கு, சுராம்பகம், ஒட்டுவெளி, கிளாலி போன்ற இடங்களுக்கு கடந்த வாரம் சென்ற மக்களுக்கே இந்த அனுபவம் ஏற்பட்டது.

தமது காணிகளில் இருந்த வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டும் கிணறுகள் தூர்க்கப்பட்டும், தென்னை மரங்கள் உட்பட பயன்தரு மரங்கள் அனைத்தும் அழிக்கப்படும் அப்பிரதேசங்கள் வெட்ட வெளிகளாகக் காணப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பகுதி பகுதியாக கிராம அலுவலர் வ.வேல்முருகுவின் தலைமையில் தமது இருப்பிடங்களைப் பார்வையிடச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## சுயதொழில் முயற்சிக் கடன்

தென்மராட்சி,டிசெ.14

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் சுயதொழில் முயற்சி மற்றும் விவசாய நடவடிக்கையில் ஈடுபடவுள்ள சங்க அங்கத்தவர்களுக்கு குறுகிய காலக் கடன்களை சங்க கிராமிய வங்கியூடாக வழங்கவுள்ளனர்.

சுய தொழில் முயற்சிக் கடனாக 10 ஆயிரம் ரூபாவும் விவசாய முயற்சிக் கடனாக 2 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

கடன்பெற விரும்பும் சங்க அங்கத்தவர்கள் தத்தமது பிரிவுக் கிளை முகாமையாளரிடம் தமது விண்ணப்பங்களை நாளை ஞாயிற்றுக் கிழமை வரை ஒப்படைக்கலாம் எனவும் -

கடன்களுக்கு ஓர் அரச ஊழியர், ஒரு கூட்டுறவுப் பணியாளர் ஆகிய இருவர் பிணையாளராக இருத்தல் வேண்டும் என சங்க முகாமையாளர் சி.தேவராசா அறிவித்துள்ளார்.(ம-117)

# சுகாதாரத்தைப் பேண அறிவுறுத்து!

தற்போது ஆரம்பித்துள்ள கால நிலை மாற்றத்தால் மழை தொடர்ச்சியாக பெய்துவருகிறது. இதனால் அனைவரும் சுகாதாரமாக இருக்க வேண்டியது அவசியமாகும். ஏனெனில், தொற்றுநோய்களின் தாக்கம் கூடுதலாகக் காணப்படுவதால் கீழ் குறிப்பிடுவனவற்றைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்குமாறு தமிழீழ சுகாதார சேவைகள் அமைப்புக் கேட்டுள்ளது.

❖ தண்ணீரை நன்கு கொதிக்க வைத்துக் குடியுங்கள். தற்போது கிணறுகளுக்குக் குளோரின் இடுவது பெரிதும் பயனளிக்காது.

❖ வீதியோரங்களில் வைத்து விற்கும் உணவுப் பொருள்களை வாங்கி உண்ணாதீர்கள்.

❖ சமைக்கமுன், பரிமாறமுன், உண்ணமுன், முக்கியமாகக் குழந்தைகளுக்கு உணவூட்டமுன், மலம் கழித்தபின், குழந்தைகள் விளையாடியபின் கைகளுக்குச் சவர்க்காரம் இட்டு நன்கு கழுவவேண்டும்.

❖ தேங்கும் மழை நீரில் குழந்தைகளை விளையாட விடாதீர்கள்.

❖ ஒவ்வொரு வேளையும் சூடான உணவு, பானங்களைப் பாவியுங்கள்.

❖ பாதுகாப்பான முறையில் மலம் கழியுங்கள்.

❖ சுற்றாடலை எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள்.

❖ நோய்க்காவி, கிருமிபெருக்க இடங்களைக் கண்டுபிடித்து அழியுங்கள்.

❖ உங்களில் அசாதாரண அறிகுறிகள் காணப்படின் அலட்சியப்படுத்தாது விரைவாக உரிய வைத்தியரின் ஆலோசனைப்படி பூரண சிகிச்சை பெறுங்கள்.

❖ நோய்களில் இருந்து நம்மை நாமே பாதுகாக்க என்றும் சுகாதாரமாக இருப்போம். (ம)



ஸ்ரீலங்கா தேசிய நூலகம் ஆவண ஆக்கல் சேவைகள் சபை, வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவப் பயிற்சித் திணைக்களம் ஆகியன இணைந்து வடமாகாணப் பொது நூலகர்களுக்கு யாழ். பொது நூலகத்தில் நடத்திய வதிவிடப் பயிற்சிநெறிச் சான்றிதழ் வழங்கும் விழாவில் யாழ்.மாநகர பொதுநூலக பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். யாழ். பயிற்சி இணைப்பாளர் எஸ்.மகேஸ்வரன், யாழ்.பிரதேச செயலாளர் செந்தில்நந்தன், யாழ். மேயர் செல்லன் கந்தையன், யாழ்.பல்கலைக்கழக பிரதம நூலகர் திருமதி எஸ்.பரராஜசிங்கம், தேசிய நூலக ஆவண ஆக்கல் சபை சிரேஷ்ட நூலகர் செல்வி கே.கமலாம்பிகை ஆகியோர் அமர்ந்துள்ளனர். *(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

# நியமனம் வழங்க ஏற்பாடு

களுவாஞ்சிக்குடி,டிசெ.14

வவுனியா கல்வியியற் கல்லூரியில் உடற்கல்வி பாடநெறியைப் பூர்த்திசெய்தும் ஆசிரியர் பயிலுநர்களுக்கான நியமனம் வழங்கப்படாதிருந்த 18 பேருக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கல்வியியற் கல்லூரி ஆணையாளர் இப்ராஹிம் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இவர்களுடன் பயிற்சி பெற்ற ஏனைய துறைசார்ந்த ஆசிரிய பயிலுநர்கள் அனைவருக்கும் ஏற்கனவே நியமனம் வழங்கப்பட்டுவிட்டது. அதனை நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளை சுட்டிக்காட்டி, தேசிய கல்வி நிறுவனப் பணிப்பாளர் நாயகம் குணவர்த்தன, கல்வியியற் கல்லூரிப் பணிப்பாளர் நடராஜா, ஆணையாளர் இப்ராஹிம் ஆகியோருக்கு முறைப்பாடு செய்திருந்தார். இந்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே தற்போது நியமனம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## முதுகலைமாணி பட்டநெறி ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.14

யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் முதுகலைமாணி பட்டநெறி ஆரம்ப நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி சி.க.சிற்றம்பலம் மற்றும் துறைத் தலைவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். ம-9)

# ஆயுத முனையில் கொள்ளை! வாகனங்களும் கடத்தல்!!

கொழும்பு,டிசெ.14

சப்புகஸ்கந்தைப் பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் கடந்த செவ்வாயன்று பட்டப்பகலில் ஐந்தரை லட்சம் ரூபா ஆயுத முனையில் கொள்ளையிடப்பட்டது.

ஆடைத் தொழிற்சாலையில் வேலைசெய்யும் ஊழியர்களின் சம்பளப் பணமே இப்படி அபகரிக்கப்பட்டுள்ளது.

திடீரென ஆயுதங்களுடன் உட்புகுந்த கொள்ளைக்கோஷ்டியினர் அங்கு கடமையிலிருந்த பாதுகாப்பு ஊழியர்களை அறையொன்றில் பூட்டி வைத்துவிட்டு துணிகரமாகக் கொள்ளையை மேற்கொண்டுள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலைக்குச் சொந்தமான வான் ஒன்றையும் அவர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

அதேதினத்தன்று, தெஹிவளைப் பகுதியில் இரண்டு வான்களை இனந்தெரியாத நபர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

பொரளைப் பகுதியில் ஓட்டோ ஒன்றும் ஆயுத முனையில் கடத்திச் செல்லப்பட்டது. ஓட்டோ சாரதியிடம் இருந்த தங்கச் சங்கிலியும் அபகரிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம)

# நாடாளுமன்றத்தின் அமர்வுகள் இனிமேல் இலத்திரனியல் ஊடகங்களில் ஒளிபரப்பு

## சபையில் பிரதமர் வெளியிட்ட தகவல்

அடுத்த வருடத்தில் இருந்து நாடாளுமன்ற அமர்வுகள் இலத்திரனியல் ஊடகங்களின்மூலம் மக்களுக்கு ஒலிபரப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு அதிக செலவுகள் ஏற்படுமாயின் தெரிவுசெய்யப்பட்ட அமர்வுகளாயினும் ஒளிபரப்புச்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதனன்று சபையில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த வருடத்திற்கான கடைசி நாடாளுமன்ற அமர்வு புதனன்று இடம்பெற்றது. அமர்வு முடிவுறும போது உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

நாடாளுமன்றத்தை வலுப்படுத்தும வகையில் அனைத்து கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டும். இதனை எதிர்வரும் காலங்களில் சிறப் பாகச் செய்ய நடவடிக்கைகள் எடுக் கப்படும்.

அதேவேளை - கடந்துபோகும் ஆண்டு சரித்திரம் படைத்துள்ளது. ஒரே ஆண்டில் இரண்டு வரவு - செலவுத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. நாட்டிற்குத் தேவையான பல முக்கிய சட்டமூலங்கள் இங்கு அங்கீகரிக்கப்பட்டன என்றார் பிரதமர்.

சபாநாயகர், சபை முதல்வர், கட்சித் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும அவர் நத்தார் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.




எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:-

சுகவீனத்திற்கு மத்தியிலும் சபாநாயகர் பக்கச் சார்பின்றி நேர்மையாக நடந்து கொண்டுள்ளார். அதற்கு அவருக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன் அதேவேளை, மலரும் புத்தாண்டில் ஆளுங்கட்சியினர் மேலும் நெகிழ்வுடன் நடந்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் - என்றார் அவர்.

ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் அனைவருக்கும் அவர் நன்றி கூறி வாழ்த்தும் தெரிவித்தார்.

சபை முதல்வர் வி.ஜே.மு. லொக்கு பண்டார கூறுகையில்:-

நாடாளுமன்றத்தின் கீர்த்தியை பேணும் வகையில் சபாநாயகர் நடந்துகொள்கிறார். இந்த பிராந்தியத்தைப் பொறுத்தவரையில் எமது நாடாளுமன்றம் சிறந்து விளங்குகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அடுத்த வருடத்தில் மேலும் சிறந்த சேவையை மக்களுக்கு வழங்க வேண்டும் - என்றார். (ஓ)

# வெள்ளம் வழிந்தோடுவதற்கென வீதிகளில் புதிதாக வாய்க்கால்கள்; வாகன சாரதிகள் பெரும் அவதி

வலிகாமம் தெற்கு,டிசெ.14

வயல்கள் மற்றும் வளவுகளில் தேங்கி நின்ற மழை வெள்ளத்தை வழிந்தோடச் செய்வதற்காக வீதிகளில் வெட்டப்பட்ட வாய்க்கால்களினால் வாகனப் போக்குவத்துக்குப் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையை அடுத்து மானிப்பாய், கட்டுடை, நவாலி, சங்கரத்தை போன்ற பகுதிகளில் இவ்வாறு பல இடங்களில் உள்ள வீதிகளில் தற்காலிகமாக வாய்க்கால்கள் வெட்டப்பட்டுள்ளன.

குறிப்பாக மானிப்பாய் இடிகுண்டுப் பகுதியில் இருந்து சங்கரத்தை வரை செல்லும் வீதியில் இருபது இடங்களுக்குமேல் இவ்வாறு வாய்க்கால்கள் வெட்டப்பட்டு வெள்ளம் பாய விடப்பட்டுள்ளது. சுமார் மூன்று கிலோமீற்றர் வரையிலான இவ்வீதி இதனால் பாதிப்படைந்துள்ளது. (எ-152)

## திறந்த நிலையில் விற்பனையாகும்

# உணவுப் பண்டங்கள், பழங்களை கொள்வனவு செய்யாதீர்கள்!

## மாநகர வைத்திய அதிகாரி கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.14

மூடிவைக்காது விற்பனை செய்யப்படும் பழவகைகள், உணவுப் பண்டங்களைக் கொள்வனவு செய்வதை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனக் கோரி யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவுறுத்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் வாந்திபேதி, தொடர்ச்சியான வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் பரவி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே, தொற்றுநோய்கள் பரவுவதைத் தவிர்க்கும் பொருட்டு நடைபாதைகளில் விற்பனை செய்யப்படும் மூடிவைக்கப்படாத காலாவதியான - பழுதடைந்த தின்பண்டங்கள் மற்றும் அழுகிய நிலையிலுள்ள பழவகைகள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதையோ, உண்பதையோ தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-ரி)

# எதிர்க்கட்சி எம்.பிக்கள் சபையின் மத்தியில் அமர்ந்து கோஷங்கள்!

## இரண்டு தடவைகள் நடவடிக்கைகள் ஒத்திவைப்பு

நாடாளுமன்றம் புதனன்று முற்பகல் இரண்டு தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டது.

முதலீட்டுச் சபை சட்டமூலம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டபொழுது, எதிர்க்கட்சியினர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையைத் தொடர்ந்து சபையில் அமைதியின்மை ஏற்பட்டதாலேயே சபையை ஒத்திவைக்க நேர்ந்தது.

சட்டமூலத்தைச் சபையில் சமர்ப்பிக்கப் பின்பற்றப்பட்ட ஒழுங்கு முறையை ஆட்சேபித்து ஜே.வி.பி. உறுப்பினர் விஜித ஹேரத் முதலில் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி வாதிட்டார். இதனை அரசுத் தரப்பினர் ஏற்கவில்லை.

எதிர்க்கட்சியினரின் ஆட்சேபனைகளுக்கும் எதிர்ப்புக் குரல்களுக்கும் மத்தியில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சட்டமூலத்தைச் சமர்ப்பித்து உரையாற்றலாமென சபைக்குத் தலைமை தாங்கிய குழுக்களின் பிரதித் தலைவர் சிறி அந்திரா ஹென்னதி அனுமதியளித்தார்.

சட்டமூலத்தைச் சமர்ப்பித்து அமைச்சர் உரையாற்றத் தொடங்கிய போதிலும் எதிர்க்கட்சியினர் மீண்டும் ஆட்சேபனைக் குரல் எழுப்பினர். இந்நிலையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே எம்.பி. சபையின் மையப் பகுதிக்குச் சென்று தரையில் அமர்ந்தார்.

சபையில் இருதரப்பிலிருந்தும் கூச்சல்கள் எழுந்தன. பெர்னாண்டோபுள்ளேயைத் தொடர்ந்து, ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸ எம்.பி., ம.ஐ. முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன எம்.பி. ஆகியோரும் சபையின் மையப் பகுதிக்குச் சென்று தரையில் அமர்ந்தனர். வேறு பல எதிர்க்கட்சி எம்.பிக்களும் அங்கு சென்று அமர்ந்தனர். அனைவரும் அமைச்சரை உரையாற்றவிடாது கோஷங்களை எழுப்பினர்.

இறுதியில் முற்பகல் 10.50 மணியளவில் சபை ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் 11 மணிக்கு சபை கூடிய பொழுது அமைச்சரை உரையாற்றுமாறு குழுக்களின் பிரதித் தலைவர் கேட்டுக்கொண்டார். எதிர்க்கட்சியினர் அதனை எதிர்த்து மீண்டும் கூச்சலிடத் தொடங்கினர்.

இக்கூட்டத்தில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டத் தீர்மானிக்கலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ யோசனை கூறியதை ஏற்றுக்கொண்ட குழுக்களின் பிரதித் தலைவர் முற்பகல் 11.10 மணியளவில் சபையை இரண்டாவது தடவையாக ஒத்திவைத்தார்.

கட்சித் தலைவர்களின் கூட்டத்தையடுத்து நண்பகல் 12.10 மணியளவில் சபை மீண்டும் கூடியது. சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமை தாங்கினார். எதிர்க்கட்சியினர் அப்பொழுதும் ஆட்சேபம் தெரிவித்தனர். முதலீட்டுச் சபை சட்டமூலத்தைப் பிறிதொரு தினத்தில் விவாதிக்கக் கோரினர். ஆயினும், அவர்களின் ஆட்சேபங்களை நிராகரித்த சபாநாயகர் உரையாற்றுமாறு அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

# வட்டுக்கோட்டை மருந்தகத்துக்கு நிரந்தரமாக டாக்டரை நியமிக்குக

## சுகாதாரப் பணிப்பாளரிடம் கோரிக்கை

சண்டிலிப்பாய்,டிசெ.14

வட்டுக்கோட்டை மாவடி சந்திக்கு அருகில் தனியார் வீடு ஒன்றில் இயங்கி வரும் வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்தகத்துக்கு நிரந்தர வைத்திய அதிகாரி எவரும் இதுவரை நியமனம் செய்யப்படவில்லை.

இதனால், இந்த மருந்தகத்தில் பிற்பகல் வேளைகளிலேயே நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

வட்டுக்கோட்டை, கோட்டைக்காடு அரசினர் கிராமிய வைத்தியசாலை பொறுப்பதிகாரியான டாக்டரே பிற்பகலில் இங்குவந்து நோயாளர்களைப் பார்வையிட்டு சிகிச்சையளித்து வருகின்றார்.

இதற்கிடையில் - இந்த மருந்தகத்திற்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை விரைவில் நியமித்து உதவுமாறு இப்பகுதி மக்கள் யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரைக் கடிதம்மூலம் கேட்டுள்ளனர்.

கடந்த எட்டு வருட காலமாக இங்கு நிரந்தரமாக டாக்டர் எவரும் நியமிக்கப்படவில்லை.

இதனால் பிற்பகலில் மட்டும் மேற்படி மருந்தகம் இயங்குவதால் மூளாய், சங்கரத்தை, மாவடி, வட்டுக்கோட்டை கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நோயாளர்கள் இந்நிலையத்துக்கு சிகிச்சைபெற வருகைதர முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளதாகவும் - அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-135)

## யாழ்ப்பாணம் மாநகரசபை
# முக்கிய அறிவித்தல்

தற்போது நாட்டின் சூழ்நிலை வழமைக்கு திரும்பியுள்ள நிலையில் யாழ்ப்பாண நகரில் சன நெருக்கடி அதிகம் ஏற்பட்டு வருவதால் நகரின் வீதியோரங்களில் பொருள்களை வைத்து விற்பனை செய்வது பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கின்ற செயலாகும். இதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே வீதியோரங்களில் பொருள்கள், பழங்கள் என்பவற்றை வைத்து விற்பனை செய்யவேண்டாம் என யாழ்ப்பாணம் மாநகரசபை இத்தால் கேட்டுக்கொள்கின்றது.

தவறின் வீதியோரங்களில் தொல்லை ஏற்படுத்துபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை வருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

*மாநகரசபை,*
*யாழ்ப்பாணம்.*
*13.12.2002* (C/25397)

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

## ஊர்காவற்றுறை பிரதேச சபை
### டிராக்டர் நீர்த்தாங்கி, லாண்ட் மாஸ்டர் பெட்டி செய்து வழங்குவதற்கான
# கூறுவிலை கோரல்

எமது சபைக்கு தேவையாகவுள்ள டிராக்டர் நீர்த்தாங்கி மற்றும் லாண்ட் மாஸ்ரர் பெட்டி செய்து வழங்குவதற்கான கூறுவிலைகள் என்னால் கோரப்படுகின்றன.

1. கூறுவிலைகள் 18.12.2002 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் தலைவர், பிரதேச சபை, ஊர்காவற்றுறை, என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

2. இவற்றுக்கான மாதிரிகள் மற்றும் விவரங்களை அலுவலக நேரங்களில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*ஊர்காவற்றுறை பிரதேச சபை*
*அலுவலகம், ஊர்காவற்றுறை,*
*13.12.2002* (C/25402)

ஆ.அனிரனிராசா.
தலைவர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை

# 21ஆவது நாள் நினைவஞ்சலி

மலர்வு 05 - 04 - 1944



உதிர்வு 24 - 11 - 2002

## அமரர் பொன்னுச்சாமி சச்சிதானந்தம்
### (தங்கவடிவேல்)

அன்புக்கோர் அணிகலமாய் பண்புக்கோர் இருப்பிடமாய்
அவனியிலே வாழ்ந்த அன்புத் தெய்வமே! அப்பாவே!
உங்கள் ஆத்மசாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*காளிகோயிலடி,*
*மல்லாகம்.* (11741)

குடும்பத்தினர்.

## கிறிஸ்மஸ் குடில்களுக்கு பரிசுத்திட்டம்

குருநகர்,டிசெ.14

குருநகர் பகுதியில் உள்ள மக்கள் கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு தமது வீடுகளில் அமைக்கவுள்ள கிறிஸ்மஸ் குடில்களில் சிறப்பான குடில்கள் தெரிவுசெய்யப்பட்டு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தால் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வணபிதா அ.பி.ஜெயசேகரம் அடிகள் அறிவித்துள்ளார்.

குருநகர் மக்கள் தமது வீடுகளில் அமைக்கப்படும் கிறிஸ்மஸ் குடில்களை குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்கினர் இம்மாதம் 23ஆம் திகதி பார்வையிட்டு சிறந்த முறையில் கிறிஸ்மஸ் குடில்களை அமைத்த மூவருக்கு எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ள குருநகர் புனித யாகப்பர் ஆலய ஒளிவிழாவின் போது பரிசில் வழங்கப்படும் எனவும் பங்குத்தந்தை மேலும் தெரிவித்தார்.

(ஒ-51)

## அதிபர்கள் சங்க ஒன்று கூடல்

யாழ்ப்பாணம்,டிசெ.14

வடமாகாண அதிபர்கள் சங்க வருடாந்த ஒன்றுகூடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின உறுப்பினர்கள் அனைவரையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ)

## ஜி.சீ.ஈ சாதாரண தர இரண்டாவது தொகுதி விடைத்தாள் கொழும்புக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.14

நேற்றுடன் நடைபெற்று முடிந்த ஜி.சி.ஈ சாதாரணதரப் பரீட்சையின் இரண்டாவதும், இறுதியுமான தொகுதி விடைத்தாள்கள் இன்று கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

ஏற்கனவே ஒரு தொகுதி விடைத்தாள்கள் இவ்வாறு கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(எ-10)


## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஒஸ்ரின் கேம்பிறிஜ் FLOUR FORD கியர் கார் A60 மொடல் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
1220/5, பூநாறிலேன்,
கொக்குவில்.
T.P. : 222 2074 (11738)



# வைத்திய ஆலோசனையும் சத்திர சிகிச்சைகளும்

1. கண் சத்திர சிகிச்சை (CATARACT)
2. காது, மூக்கு, தொண்டை சத்திர சிகிச்சை
3. மகப்பேற்றுச் சத்திர சிகிச்சை
   அ) பெண்ணியல் சத்திர சிகிச்சை
   ஆ) கர்ப்பத்தடை சத்திர சிகிச்சை
   இ) D&C சத்திர சிகிச்சை (வயிறு கழுவுதல்)
4. பொதுச் சத்திர சிகிச்சைகள்
   அ) கேணியா சத்திர சிகிச்சை (குடல் இறக்கம்)
   ஆ) அப்பென்டிசைட் சத்திர சிகிச்சை
   இ) மூலச் சத்திர சிகிச்சை

*குறிப்பு:* மேற்காணும் நோய் உள்ளவர்களுக்கு ஒவ்வொரு நாளும் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரபல வைத்திய நிபுணர்களால் வைத்திய ஆலோசனைகள் வழங்கிச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும்.

## E.N.T. மெடிக்கல் கிளினிக்

**யாழ்.வைத்தியசாலை**
284, பலாலி வீதி,
கந்தர்மடம்.
☎ 2223533

22, 24, முனீஸ்வரன் வீதி,
(யாழ்.பஸ்நிலைய முன் ஒழுங்கை,
H.N.B.இற்கு அருகில்) யாழ்ப்பாணம்.
☎ 2225489

(11742)


# 'Selection of Building Contractors'

**'GTZ - International Services Asia,**
on behalf of the donor agency, the EU,
gives hereby notice for pre - selecting
**Building Contractors**
For the
**'Rehabilitation of Schools in Jaffna'**

The presumed number of construction objects is around 50 to 60 for the entire program. Their locations are distributed in all five educational zones. The budget line per object will vary from 300,000 LKR to maximum 1,5 Mill LKR Under the pre - condition of the donor, a very short time frame is given. Detailed 'project Informations' are available from the 'project office' at 521/11 Point Pedro Road, Nallur, Jaffna.

Reputed and experienced 'Building Contractors' with professional Key - management, with substantial financial capacity, with a good and adequate skilled and unskilled labour force on hand, with the ability to mobilize and construct fast, are herewith invited to register with the GTZ - IS at the given office address. Latest registration date shall be one week from date of publication.

***Project Manager***
**GTZ - International Services Asia**
2002 . 12 .13

# அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகரசபை
### மாநகரசபைக்கு சொந்தமான கடைகளின் வாடகைக் குடியிருப்பாளர்கள் கவனத்திற்கு

யாழ்ப்பாணம் மாநகரசபையுடன் வாடகைக் குடியிருப்பாளர்கள் செய்துகொண்ட உடன்படிக்கையின் 13ஆவது விதியின் பிரகாரம் மாதாந்த வாடகைக் கட்டணத்தை அந்த மாதம் 10ஆம் திகதிக்கு முன் செலுத்த வேண்டும் எனவும் தவறின் 10% தண்டம் அறிவிடப்படும் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.

*மாநகரசபை,*
*யாழ்ப்பாணம்.*
*11.12.2002.* (C/25393)

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

# துயர்பகிர்வு நன்றி!
## அமரர் கந்தையா வேலுப்பிள்ளை
(இளைப்பாறிய கனிஷ்ட பாடசாலை அதிபர், டிரேக் கல்லூரி, சாவகச்சேரி )

எங்கள் அன்பின் உருவமே அருமைத் தெய்வமே, எங்கள் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும், வழிகாட்டிய தெய்வத்தின் வடிவமே எம்மை ஆறாத் துயரில் மூழ்கவிட்டு எங்கு சென்றீர்கள்? எமது நெஞ்சம் வேதனை மிகுதியால் விம்மி வெடித்தும் ஆறுதல் கிடைக்காமல் ஏங்கி நிற்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மரணச் சடங்கில், உறுதுணையாயிருந்தும், எமது துயரினைப் பகிர்ந்துகொண்டும், மலர்வளையம் அஞ்சலியுடன் உதவி புரிந்தும் மற்றும் அஞ்சல், தொலைபேசி, தந்தி ஆகிய ஊடகங்கள் மூலம் ஆறுதல் வார்த்தைகளைத் தெரிவித்துக்கொண்ட அன்புள்ளங்களுக்கு எமது மனம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

Mrs. K. Velupillai,
14, Minora Road,
Dalkeith,
WA.6009, Australia
T.P. 0061-8-9386 - 7493 (11735)

அன்பு மனைவி (வே.கமலாம்பாள்)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

உ

# துயர் பகிர்கின்றோம்

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் அதிபரின் சகோதரன்


## வேலுப்பிள்ளை செந்தில்நாயகம்

அவர்களின் இயற்கையெய்தியதைவிட்டு அவரது குடும்பத்தினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை
ஆசிரியர்கள்.

(11730)

உ



# 80ஆவது ஜயந்தீதின விழா அழைப்பு

இலங்கையின் முதலாவது இந்துமத குருபீடாதிபதி
## அருள்ஜோதி சிவஸ்ரீ கலாநிதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்
அவர்களின்

80ஆவது ஜயந்தி தின விழா கடந்த 06.08.2002 அன்று திருவாதிரை தினத்தன்று கொழும்பு, கொட்டாஞ்சேனை ஜங்கரன் மண்டபத்தில் - தமிழ்நாடு காஞ்சிபுரம் "சைவ சித்தாந்த சாகரம்" சிவஸ்ரீ K.ராஜப்பாக் குருக்கள் தலைமையில் மகவும் சிறப்பாக நடைபெற்றது. அத்துடன் 24.11.2002இல் கனடா - ரொறன்ரோ, நல்லூர் கந்தசுவாமி கோயில் கல்யாண மண்டபத்தில் "வியாகரண சிரோன்மணி" சிவஸ்ரீ பூரண.தியாகராஜக் குருக்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திலும் இந்த ஜயந்தி தின விழா சிறப்புற நிகழத் திருவருள் கைகூடியுள்ளது.

| | | |
|---|---|---|
| காலம் | : | நாளை(15.12.2002) ஞாயிறு பிற்பகல் 2.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை. |
| இடம் | : | நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் |
| தலைவர் | : | மஹாராஜஸ்ரீ து.ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள் (மாவை ஆதீன கர்த்தா) |

### நிகழ்ச்சி நிரல்

விழாவில் ஜயந்திமலர் வெளியீடும் சாம்ப சிவதாசன் சிவஸ்ரீ சாம்பசிவ ஜெகதீஸ்வர சிவாச்சாரியார் அவர்களின் உருவாக்கத்தில் மிளிர்ந்த ஆத்ம பஞ்சகம் CD இலங்கையில் முதன்முதலாக CD வெளியீடு - ஒலி இறுவட்டு வெளியீடும் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| அருளாசியுரை | : | ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் நல்லை ஆதீன குரு முதல்வர் |
| வரவேற்புரை | : | சிவஸ்ரீ சிவ.நித்தியானந்தக் குருக்கள் (சங்கானை) |
| தலைமையுரை | : | |
| மதிப்புரை | : | சகலாகம சங்கிரசன் சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் |
| பாராட்டுரை | : | 1.சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தினர் |
| | | 2. நியந்தி - பிரம்மஸ்ரீ ந.சதாசிவ ஐயர் அவர்கள் |
| சிறப்புரை | : | 1. பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் |
| | | 2. பேராசிரியர் பிரம்மஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா அவர்கள் |
| | | 3. திருவாளர் சி.சச்சிதானந்தன் - இந்து சமயப் பேரவை |
| | | 4. சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் |
| ஆசியுரை | : | வித்யாசாகரம் மு.பரமசாமிக் குருக்கள் - வடகோவை (கோப்பாய்) |
| | | இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ கு.மகேஸ்வரக் குருக்கள் |
| | | வைதிக சிரோமணி சுப்பிரமணியக் குருக்கள் (அரியாலை) |
| நன்றியுரை | : | கலாநிதி சாம்.ஷண்முகநாதக் குருக்கள் (லண்டன்) |

☛ இந்த விழாவில் குருபீடாதிபதியின் ஜயந்திதின நினைவாக சமய, கலை, சமூக சேவைகள் செய்து வளர்ந்துவரும் சிவாச்சாரியர்கள், கலைஞர்கள், சமூக சேவையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஆர்வலர்கள் அனைவரும் வருகைதந்து குருவருள் பெற்று இந்த விழாவுக்கு ஆதரவை நல்கும்படி அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (11729)

- கலாநிதி சாம்.ஷண்முகநாதக் குருக்கள் (லண்டன்)
ஸ்ரீமதி செல்லம்மா சாம்பசிவக் குருக்கள் குடும்பத்தினர்.

**BITSMANS** கல்வி நிறுவனம் மானிப்பாய்

A/L 2004 INORGANIC

அசேதன இரசாயனம் ஆசிரியர் : N.மகேஸ்வரன்

ஆரம்பம் : 15.12.2002 ஞாயிறு 4.30 ப.நே.

A/L 2003 CHE. PAPER CLASS

ஆரம்பம் : 21.12.2002 சனி 4.30 p.m.

(விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவுசெய்யவும்)

(11723)



## கலண்டர், டயறி விற்பனைக்கு

2003ஆம் ஆண்டிற்கான அழகிய வர்ணப்படக் கலண்டர்கள் (03 அளவுகளில்) மனேச்மென்ற், டெஸ்க் டயறிகள் விற்பனைக்கு உண்டு. கொள்வனவு தொகைக்கு எற்ப விசேட கழிவுகள் வழங்கப்படும். எமது காட்சியறைக்கு விஜயம் செய்து உங்களுக்குத் தேவையான வடிவங்களில் கலண்டர், டயறிகளைக் கொள்வனவு செய்து கொள்ளுங்கள்.

**சிவா நறுமணப் பூங்கா**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சத்திரச்சந்திக்கு அண்மையில்)

தொ.பே.இல. 2222567

(11752)


## அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை
## அடிக்கல் நாட்டு விழா

**இடம்** :- முத்துமாரி அம்மன் கோவிலடி, திருநெல்வேலி

**காலம்** :- 15.12.2002 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.30 - 12.05 மணி(ப.நே.)

**தலைவர்** :- சிவஸ்ரீ க.கிருபானந்தக்குருக்கள் (மேற்படி சபைத்தலைவர்)

பிரதம விருந்தினர்களாகக் கலந்து அடிக்கல் நாட்டுபவர்கள்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,**

கௌரவ அமைச்சர் **திரு.தி.மகேஸ்வரன்**

*(இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு)*

எமது சபையால் நடத்தப்பட்டுவரும் குருகுலமாகிய சைவக்குருமார் பயிற்சிக் கல்லூரிக்கும், அதனுடன் இணைந்த சிவலோகநாதக்குருக்கள் நூலகத்திற்குமான நிரந்தரக்கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெறவுள்ளது. அவ்விழாவில் அனைவரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

*பதிவு இல: HA/4/J/123*
*முத்துமாரி அம்மன் கோவிலடி.*
*திருநெல்வேலி.*

(11745)

இங்ஙனம்
**செயலாளர்**
அ.இ.சை.கு.அ.சபை.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர் திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம் அவர்களின் அன்புச் சகோதரர்

### வேலுப்பிள்ளை செந்தில்நாயகம்

அவர்கள் காலமாகியதையிட்டு எமது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C/25403)

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/வேம்படி மகளிர் கல்லூரி

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சகுந்தலாதேவி சிவரட்ணம்

சித்திரமேளி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் முருகமூர்த்தி வீதி. வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலாதேவி சிவரட்ணம் நேற்று (13.12.2002) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சீனிவாசகம் - காலஞ்சென்ற சின்னத்தங்கம் தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - பார்வதி தம்பதிகளின் மருமகளும் சிவரட்ணம் (சிவா) (முகாமையாளர் - சிவன் ஸ்ரோர்ஸ், பரமேஸ்வராச்சந்தி) அன்பு மனைவியும் நிசாந்தன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), தேவகுமரன் (யா/இந்து ஆரம்ப பாடசாலை), சசிரூபன் (யா/இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நாகரட்ணம் (கிராம உத்தியோகத்தர் - வட்டு.தெற்கு), பரமேஸ்வரி (லீலா) ஆகியோரின் சகோதரியும் சிவலோகநாதனின் மைத்துனியும் கிரிதரன் (லண்டன்), கீதா, குமுதினி ஆகியோரின் மாமியும் முரளிதரன், பாலதரன் ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (14.12.2002) சனிக்கிழமை காலை 10 மணிக்கு கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
*07, முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

(11750)

அ.சிவரட்ணம் (கணவர்),
சீ.நாகரட்ணம் (சகோதரர்)
(கிராமசேவையாளர், வட்டு.தெற்கு)

## முருகர் ஐயம்பிள்ளை

**(காரைநகர் கசூர்னாயீச் தென்னிந்திய திருச்சபை முகாம் பொறுப்பாளர்)**

காரைநகர் கசூர்னாபீச்சை வசிப்பிடமாகக் கொண்ட முருகர் ஐயம்பிள்ளை நேற்று (13.12.2002) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

இவர் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் டில்லிராணி, காலஞ்சென்ற சிவராசா மற்றும் ஸ்ரீஸ்கந்தராசா, புஸ்பராணி (அதிபர் யா/மெய்கண்டான் வித்தியாசாலை, காரைநகர்), சிவராணி, கிருபானந்தராசா, ஜெயராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் கதிரவேலு, வனஜா, சந்திரராசா, தேவராசா, நூரில் இதாயா, குணசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2002) பிற்பகல் 3 மணியளவில் கோவளம் வீதி, அறுகம்புலம் மகள் புஸ்பராணி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோவளம் வீதி,*
*அறுகம்புலம், காரைநகர்.*

(C/25405)

தகவல்
சிவக்கொழுந்து (மனைவி)

## அமெ. இணை அமைச்சர் வியாழனன்று வருகிறார்

கொழும்பு,டிசெ.14

அமெரிக்காவின் வர்த்தகத்துறை இணைஅமைச்சர் வில்லியம் எச் லாஸ் எதிர்வரும் வியாழக்கிழமை இரண்டு நாள்கள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார்.

இவர் இருதரப்பு வர்த்தக உறவுகள், இலங்கையில் முதலீடு செய்வதற்கான சூழ்நிலை என்பன பற்றி ஆராய்வார்.

(ஒ-12-4)

## கைக்கடிகாரம் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.14

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வித் துறை மாணவர்களால் பிறவுண் வீதிப் பகுதியில் இருந்து பெண்கள் கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு உடற்கல்வித்துறை இணைப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் -

உரியவர்கள் அதனை ஆதாரங்காட்டிப் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் -

தெரிவிக்கப்பட்டது. (ம-9)


**எமது புதிய வெளியீடு**
ரகுமான் நடித்த
**போர் முழக்கம்**
**வீடியோ சிந்து**
உரும்பிராய் சந்தி
(C-25389)

எமது நேற்றைய புதிய வீடியோ CD வெளியீடு
ரம்யா கிருஸ்ணனின் **ஜெயா**
(பிரதிகள் உடன் பெறலாம்)
**ITN** பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி.
(C/25404)

**இனியும் தவறவிடாதீர்கள்!**
புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை 2003
(18) ஆவது பரீட்சை நாளை நடைபெறுகிறது.
(தரம் 5 பாடத்திட்டத்தின் ஆரம்ப பகுதி)
**BOND** யாழ்ப்பாணம்
(C/25400)

வெளிவந்துவிட்டது!
"அஷ்டலக்ஷ்மி" தினத்தாள்
கலண்டருடன் 12 இராசிகளுக்குமான 2003ஆம் ஆண்டு புத்தாண்டு பலன் புத்தகம் இலவசம்!
**கலண்டர் விலை ரூபா 170/-**
✦ மேசை தினக்குறிப்பு
✦ Pocket Diary
} தமிழில்
என்பனவும் கிடைக்கும்.
**அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்**
கண்டி வீதி, கைதடி.

**லக்ஷ்மி** இணுவில்.
இன்றுமுதல்
சூர்யா, லைலா, ஸ்நேகா நடித்த
**உன்னை நினைத்து**
(ரீலீஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30
(11740)

**ராஜா** யாழ்ப்பாணம்.
சில தினங்கள் மட்டும்
அஜித் (இருவேடங்களில்), மீனா நடித்த
**வில்லன்**
(ரீலீஸ்)
கா.நே.: 10.30, 2.30, 6.30





**நிறைஞ்சனாஸ்** சங்கானை
முரளி, பிரதியுக்ஷா, மனோஜ், உமா நடித்த
"**சுடரும் நதி**"
17 ஆம் திகதி முதல்
AIR FORSE ONE
காட்சி நேரம்: 11.00, 3.45, 6.00, (ப.நே)
(C/25291)

**நாகம்ஸ்** சுன்னாகம்
ஷாலினி, கனகா, விவேக் நடித்த
**செந்தூர தேவி**
காட்சிகள்: 11.00, 3.00 (ரீலீஸ்)
விசேட காட்சிகள்: வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (ப.நே.)
18ஆம் திகதிமுதல் "நேருக்கு நேர்"
(11724)


# இறுதிக்கிரியை பிற்போடப்பட்டுள்ளது

## கந்தையா இராமையா

**(புங்குடுதீவு - 10)**

காலஞ்சென்ற கந்தையா இராமையா அவர்களின் 13.12.2002 வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த இறுதிக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளன. அன்னாரின் பூதவுடல் இன்று (14.12.2002) சனிக்கிழமை காலையில் யாழ். இல்லத்திலிருந்து புங்குடுதீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2002) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மணற்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புங்குடுதீவு - 10*

(11744)

தகவல்:
இ.கண்ணையா
(மகன்)

# மரண அறிவித்தல்கள்

## கனகன் சின்னக்குட்டி

**(புத்தூர் வடக்கு வளர்மதி ச.ச.நிலைய முன்னாள் தலைவர்)**

புத்தூர்கிழக்கைப் பிறப்பிடமாகவும், புத்தூர் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகன் சின்னக்குட்டி நேற்று (13.12.2002) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகன் - முத்தாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் பரஞ்சோதிராசா (லண்டன்), ரதீஸ்வரி (அம்மன் - ஆவரங்கால் மகாஜன வித்தியாலய ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்றவர்களான கணபதி - நல்லம்மாவின் அன்பு மருமகனும் சின்னம்மா, காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி, அரியகுட்டி ஆகியோரின் சகோதரரும் இராசதுரை, சிவபாக்கியம், முருகுப்பிள்ளை, காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் பசுமதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அப்பையா, காலஞ்சென்ற திரவியம் ஆகியோரின் சகலனும் யோகேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் பெரியதகப்பனும் விஜயதர்சினி, செந்தூர்க்குமரன் (லண்டன்), பிரியதர்சினி (ஜேர்மனி), இன்பதர்சினி, ஐங்கரநேசன், பிரசாந்தன், கருணாநிதி, திருஞானேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் துவாரகா, தூயவன், கோசலன், திலக்ஷா, விதுஷா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2002) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கிந்து சிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புத்தூர் வடக்கு,*
*மருதடி.*

(11749)

தகவல்:
ரதீஸ்வரி
(அம்மன் - மகள்)

## மார்கண்டு கந்தையா பூபாலசிங்கம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்கண்டு கந்தையா பூபாலசிங்கம் அவர்கள் 12.12.2002 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவகுல வீதி,*
*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.*

(C-25399)

தகவல்:
பூ.கண்மணி
(மனைவி)

## கணபதி சின்னப்பிள்ளை

கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி சின்னப்பிள்ளை நேற்று (13.12.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரன் கணபதியின் (கடவுள்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, சின்னப்பு ஆகியோரின் அன்புச் சகோதரியும் கணேசமூர்த்தியின் பாசமிகு தாயாரும் கனகசபாபதி, தயாநிதி அவர்களின் வளர்ப்பு அன்னையும் தேவிகாவின் (எழுதுவினைஞர் - தாதியர் பயிற்சி நிலையம், யாழ்.போதனா வைத்தியசாலை) அன்பு மாமியாரும் தர்ஷிகன் (யா/சென்றல் மாணவன்), பிரதிகா, பிரியதர்ஷினி, பிரணவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2002) சனிக்கிழமை 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.*

(11748)

தகவல்:
க.கணேசமூர்த்தி
(மகன்)

## தனுக்கோடி புண்ணியமூர்த்தி

**(ஓய்வுபெற்ற அரச மருந்தாளர்)**

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் அரியாலை மலர்மகள் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தனுக்கோடி புண்ணியமூர்த்தி அவர்கள் நேற்று (13.12.2002) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தனுக்கோடி - வள்ளியம்மையின் புதல்வரும் நாகமணி - சின்னத்தங்கச்சியின் மருமகனும் சேதுப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, முருகேசு, கதிரவேலு, அமராவதி மற்றும் குணரட்ணம் (ஓய்வுபெற்ற கணக்காய்வாளர், யாழ்.மாநகரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் பண்டிதர் கந்தையா, நடராசா (ஓய்வுபெற்ற கணக்காளர், பருத்தி M.P.C.S), காலஞ்சென்ற மார்க்கண்டு (நில அளவை யாளர்) ஆகியோரின் மைத்துனரும் சண்முகதாசன் (விரிவுரையாளர், தொழில்நுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணம்), கிருஸ்ணதாசன் (அமெரிக்கா), யோகரட்ணம் (ஜேர்மனி), குமாரரெட்ணம் (கனடா), கோமதி (நோர்வே), கிருபாகரன்(நோர்வே), தேவகரன் (எழுதுவினைஞர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீதேவி (ஆசிரியை நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை), லலிதினி, தங்கராணி, சந்திரவதனி, குணபாலா, சுரேகா ஆகியோரின் மாமனாரும் கிரிசாளினி, சர்மிலன், கௌசிகா, திரேசியா, டினேசியா, சஜீதா, சஜிதன், லம்போதரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*19/1, மலர்மகள் வீதி,*
*அரியாலை.*

(117[illegible])

தகவல்:
மனைவி, மக்கள்,
பு.சண்முகதாசன்(மகன்)
(விரிவுரையாளர்-தொழில்நுட்பக் கல்லூரி)
பு.தேவகரன் (மகன்)
(எழுதுநர், D.P.D.H.S)

# கடற்படையைப் பலப்படுத்துவதற்கு ஏழு ராடார் கருவிகள் கொள்வனவு

## அமைச்சரவை அனுமதி வழங்கியது

கொழும்பு,டிசெ.14

இலங்கைக் கடற்படையைப் பலப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

இதன்படி, கடலின் மேற்பரப்பில் அவதானிப்பை மேற்கொள்ளக்கூடிய ஏழு ராடார் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கு நேற்றுமுன்தினம் அமைச்சரவை அனுமதி வழங்கியது.

இந்த ராடார் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கான அனுமதியை அமைச்சரவை முன்னரும் வழங்கியிருந்தது. ஆயினும், அக்கருவிகளைக் கொள்வனவு செய்வதை தாமதித்தால் ஒரு தொகைப் பணத்தை மீதப்படுத்த முடியும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சுட்டிக் காட்டப்பட்டதால் அப்பொழுது அவை கொள்வனவு செய்யப்படவில்லை.

தாமதித்து இப்பொழுது அந்த ராடார் கருவிகளைக் கொள்வனவு செய்வதில் 22 லட்சம் ரூபாவை மீதப்படுத்தக்கூடியதாகவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# சிங்களவர் உரிமைகளைக் காக்க தேரர் தலைமையில் புதிய கட்சி

கங்கொடவில சோமதேரரின் தலைமையில் புதிய அரசியல் கட்சி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. சிங்கள பௌத்த மக்களின் உரிமைகளுக்காக நடவடிக்கை மேற்கொள்வது தமது கட்சியின் குறிக்கோள் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

'ஜனவிஜய சங்கல்பய' (மக்கள் வெற்றி கோட்பாட்டுக் கட்சி) என்று புதிய கட்சிக்கு பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

சிங்கள பௌத்த மக்களின் உரிமைகளைக் காக்க எந்த ஓர் அரசியல்வாதியும் நடவடிக்கை எடுக்காததால் இக்கட்சியை அமைத்ததாக சோமதேரர் கூறுகிறார்.

"தேர்தலில் போட்டியிடுவதாக இருந்தால் ஜனாதிபதி பதவிக்கு மட்டுமே போட்டியிடுவேன் அவ்வாறானால் தான் எமது கட்சியின் கொள்கையைச் சரிவர நடைமுறைப்படுத்த முடியும்" எனவும் கூறும் அவர், போரை முடிவுக்குக் கொண்டுவர முன்வைக்கப்பட்டிருக்கும் சமஷ்டி முறை ஒரு மாயை எனவும் தெரிவித்திருக்கிறார்.

கட்சியை பதிவுசெய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சோமதேரர் கூறுகிறார்.

## பிரதமர் ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது இலங்கையில் சுயாட்சி மலர்வதற்கு ஒஸ்லோ பேச்சில் ஒப்புதல் தரப்பட்டுள்ளது. புலிகளும் தனிநாட்டுக் கோரிக்கையைவலியுறுத்தாமல் அமைதிக்கான சூழலை அங்கு ஏற்படுத்தியுள்ளனர்.

இதற்காக ஒருகாலத்தில் தமிழகத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளில் தி.மு.கவுக்கும்பெரும் பங்கு உண்டு.

இடையிடையே ஏற்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட நிகழ்வுகளை எதிர்கொண்டு தி.மு.க. எத்தனை தியாகம் செய்துள்ளது என்பதையும் பேரணிகள், மாநாடுகள் மூலம் இலங்கைத் தமிழர்களிடையே அமைதியான வாழ்வு பூத்துக்குலுங்க வேண்டுமென்று விரும்பி தி.மு.க. செயற்பட்டது என்பதையும் அறியாதவர்களோ தெரியாதவர்களோ இருக்கமுடியாது.

கடந்த 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியில் இருந்த போது இலங்கையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நீங்கள் என்னை வந்து சந்தித்தீர்கள். அப்போதே இலங்கை இனப் பிரச்சினை சுமூகமாகத் தீரவேண்டும் என்பதில் நீங்கள் அதிக அக்கறை கொண்டிருந்தீர்கள் என்பது எனக்குத் தெரிந்துவிட்டது.

எதிர்க்கட்சியாக இருந்தால் ஒரு பேச்சு, ஆட்சிக்கு வந்துவிட்டால் ஒரு பேச்சு என்று மாறுபட்ட நிலைகளை எடுக்காமல் ஒன்றுபட்ட கருத்து உருவாகி அதன் மூலம் அமைதி விடியல் ஏற்படுவதற்கு ஒத்துழைப்பு அளித்துள்ளீர்கள். இதற்காக உங்களுக்கு நன்றிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு கடிதத்தில் தெரிவித்துள்ளார் கருணாநிதி.

## தீவுப் பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்களுக்குத் தலைமை வகிப்பர். புலிகளின் வடமுனை கட்டளைத் தளபதி கேணல் தீபன், இராணுவ மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, பொலீஸ்மா அதிபர் ரீ.ஈ. ஆனந்தராஜா ஆகியோரும் புலிகளின் மாவட்ட பொறுப்பாளர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வர்.

பாதுகாப்பு உப குழுவின் இந்தக் கூட்டம் இன்று ஓமந்தை சூனியப் பிரதேசத்திலேயே நடைபெறுவதாக இருந்தது. எனினும் அது பின்னர் முகமாலைக்கு இடம் மாற்றப்பட்டிருக்கிறது. (ஐ-3)

## மீளக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பனவாக 5 ஆயிரம் ரூபா பெற்றவர்களுக்கு அத்தொகையைக் கழித்தே இக்கொடுப்பனவு வழங்கப்படும்.

சம்பந்தப்பட்டவர்களின் வங்கிக் கணக்கு ஊடாக இக்கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவை வழங்க 57 கோடி 50 லட்சம் ரூபா தேவைப்படுகிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. உலக வங்கியின் நிதி உதவியுடன் இக்கொடுப்பனவு வழங்கப்படுகிறது. மக்களின் சகஜவாழ்க்கைக்கு உதவிடவே இக்கொடுப்பனவு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஓ-3-8)

## விடுதலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர் சிபால் கூறியிருக்கிறார். 'ரேடியோ நெதர்லண்ட் மீடியா நெட்வேக்' செய்திச் சேவையிடம் அவர் இவற்றைத் தெரிவித்திருக்கிறார். தடைசெய்யப்பட்ட ஓர் இயக்கம் இவ்வாறு சர்வதேச ஒலிபரப்புக்களை மேற்கொள்வதை அனுமதிக்க முடியாது என்றே இந்திய அதிகாரிகள் கூறுகின்றனர்.

## சிறுவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு பொலீஸ் தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்படாததை அடுத்து சகலரையும் நிபந்தனையில் கீழ் பிணையில் செல்ல பதில் நீதிவான் அனுமதித்தார்.

சந்தேகநபர்கள் வன்முறைகளிலோ, ஆர்ப்பாட்டங்களிலோ ஈடுபடாது அமைதியைப் பேண வேண்டும் அத்துடன் பிரதி திங்கள், வெள்ளிக்கிழமைகளில் பருத்தித்துறை நீதிமன்றப் பதிவாளரிடம் சென்று கையொப்பம் இட வேண்டும் - என்று அவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் குடாநாட்டை விட்டு வெளியேறக்கூடாது என்றும் பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

நீதிமன்றத்தின் இந்த உத்தரவை மீறுபவர்களின் பிணை இரத்துச் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிணை அனுமதிக்கப்பட்டவர்களில் ஐவர் தமது சிறைக் காவலர்களின் பாதுகாப்புடன் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகின்றனர் என்றும் -

அவர்களுக்கான சிறைக் காவலர் பாதுகாப்பை விலக்க அனுமதிக்க வேண்டும் என்றும் -

சிறைச்சாலை ஆணையாளர் ஏ. சிவசுந்தரம் நீதவானிடம் கோரினார்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு சிறைக் காவலரின் பாதுகாப்புத் தேவையில்லை என்றும் அவர்கள் தாமாகவே ஆஸ்பத்திரியில் அனுமதிபெற்று சிகிச்சை பெறலாம் என்றும் - நீதிவான் உத்தரவிட்டார்.

வழக்கு விசாரணையை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு நீதிவான் ஒத்திவைத்தார். (ஐ-3-173)


வேகமாக விற்பனையாகின்றது

நடந்து முடிந்த

O/L ENGLISH

வினாத்தாள் விடைகளுடன்
சகல புத்தகசாலைகளிலும்

தொகுப்பு: த.தனேந்திரன்
B.Com.(Hons), M.M.Spl.(Mal.),
H.N.Dip.in Acc.(Cey.)
T.P. 0777 686718


## மரண அறிவித்தல்

### கந்தையா துரைராஜா

சாவகச்சேரி, கோவில் குடியிருப்பைச் சேர்ந்த கந்தையா துரைராஜா அவர்கள் நேற்று (13.12.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் மீனாட்சி அம்மாவின் அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரன் (அரசாங்க ஒப்பந்தகாரர் - சாவகச்சேரி), காலஞ்சென்ற சர்வேஸ்வரன் மற்றும் ஜெகதீஸ்வரி (கனடா), நகுலேஸ்வரன் (கனடா), ராமேஸ்வரன் (சுவிஸ்), சர்வேஸ்வரி, நகுலேஸ்வரி (கனடா), சங்கர்ஈஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சற்குணவதி, ரஞ்சன்சிவகுமார் (கனடா), ஜெசிந்தா (கனடா), மிலேனிசாந்தி (சுவிஸ்), பஞ்சாட்சரம் (ராசம் மில், சாவகச்சேரி), சிவகுமார் (கனடா), பிறேமினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெசிபன், சஜீபன், பிரசன்னா, கஸ்சனா, சாரங்கன், துளசி, ஜெசிந்தா, ஜோன், டயானா, ஷாலினி, பிரபாலினி, ஹரிசன், நிஸானி, மிதுனா, அபினா, நினுஜன், நிலக்ஷன், நிதுரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் திரவியம், காந்திமதி, பவளராணி, ராமச்சந்திரன், செல்வராசா ஆகியோரின் ஆசை அண்ணரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
து.ஜெகதீஸ்வரன் (மகன்)
(பெரியராசா)

*தாமோதரம்பிள்ளை வீதி,*
*சாவகச்சேரி.*

(11753)


JAFFNA TECHNICAL INSTITUTE.
JAFFNA SRI LANKA.

சிறுவர்களுக்கான இலவச கணனிப் பயிற்சி - 2003

CHILDREN'S PROGRAM

*இவ் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அல்லது சுயமாக தயாரித்து நேரடியாகவோ அல்லது தபால்மூலமாகவே கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.*

பதிவாளர்
இல. 07 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.

பயிற்சி ஆரம்பம்
21.12.2002 (3.00pm)
28.12.2002 (3.00pm)

சிறுவர்களுக்கான கணனிப் பயிற்சி நெறி - 2003
விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் ..............
முகவரி ..............
பிறந்த திகதி ..............

மேலே தரப்பட்ட விபரம் உண்மையெனவும் J.T.I விதிமுறைகளுக்கு ஏற்ப நடப்பேன் எனவும் இத்தால் கைவொப்பம் இடுகின்றேன்

திகதி ........ விண்ணப்பதாரரின் கையொப்பம் ........

Head Office
No. 11/1-08, Stanly road.
Jaffna.

Branch
No. 07. Palaly Road
Jaffna.

2002 ஆம் ஆண்டு O/L பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

Duration 3 Months

Course Contents
- Introduction
- Word XP
- Excel XP
- Power Point XP
- Encyclopedia
- Games & Drawings



DECEMBER (O/L) MEGA BATCH ஆரம்பம் 15-12-2002

O/L 2002 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் தமது A/L படிப்பைத் தொடங்க முன்பதாக A/L க்குரிய General Information Technology (GIT) பாடத்தின் முழுமையான பாடவிதானத்தையும் MS Office ஐயும் உள்ளடக்கிய Diploma in Business Application (DBA) உள்ளடங்கலாக அனைத்துக் கற்கை நெறிகளும் தலைமையகத்திலும் அனைத்துக் கிளைகளிலும் ஆரம்பமாகின்றது.

Get your first certification before you start your A/L

Why IBMS?

Is it gives you the right courses? YES!
Diploma in Business Application
Diploma in Information Technology
Advanced Programming Specialist
Higher Diploma in Software Engineering
Diploma in Java Programming
Diploma in Desktop Publishing
BIT

Is it recognised? YES!
Government of Sri Lanka approved Tertiary Vocational Education Commission Reg.No.: P25/0010
Accredited to CINTEC
Member of ACTOS
ACTOS recommended centre for SLCDL

Is the institute well staffed? YES!
Panel of University or Professionally qualified Lecturers supported by a dedicated team of Administrative Staff.

Do they have the necessary equipments? YES!
Latest computers and other equipments continuously updated and well maintained

Are the fees are reasonable? YES?
You could have decide better.

IBMS
Jaffna
Nelliyady
Chankanai
Chavakachcheri
Tel.: 021-222-3165
E Mail: ibms@sltnet.lk
Web: www.itlanka.org

இலங்கையில் தகவல் தொழில்நுட்பத்துறையில் தரநிர்ணயத்தை உத்தரவாதப்படுத்தும் அமைப்புக்கள் யாவை?

1. Council of Information Technology (CINTEC)
2. Tertiory & Vocational Education Commission (TVEC)
3. Association of Computer Tranning Organizations (ACTOS)
4. Federation of The Information Technology Industry, Sri lanka (FITIS)

தகவல் தொழில்நுட்பத்துறையில் நீங்கள் பெறும் சான்றிதழ் உங்கள் எதிர்காலத்தை உத்தரவாதப்படுத்துகின்றதா?

IBMS இன் சான்றிதழ் இந்நிறுவனங்கள் அனைத்தினதும் அங்கீகாரத்தை உங்களுக்கு வழங்கி உங்கள் எதிர்காலத்தை உத்தரவாதப்படுத்துகின்றது.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.12.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.



# ஆயுதப் போராட்டத்தை புலிகள் கைவிடுவது நியாயமாகுமா?

**தற்போதைய அரசியல் நகர்வுகளைப் புதிய கோணத்தில் சிந்திக்கிறார். சிறந்த சிந்தனையாளரும் பத்திரிகையாளருமான சுனந்த தேசப்பிரிய. "ராவய" வார இதழில் வெளியான அவரது கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

கடந்த மாதம் 25ஆம் திகதி ஒஸ்லோவில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது அமெரிக்க பிரதி ராஜாங்கச் செயலர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தார். அதாவது வன்முறைகளைக் கைவிடுவதாக விடுதலைப் செய்தியை வெளியிட்ட றொயிட்டர் செய்தி நிறுவனத்தின் அறிக்கைக்கு இந்நாட்டு ஊடகங்கள் முக்கிய இடமளித்தன.

ஒஸ்லோ பேச்சுக்கள் முடிவுற்ற மறுநாள் கொழும்பில் சமாதான எதிர்ப்புப் பேரணியை ஜே.வி.பியும், ஸ்ரீ.ல.சு. கட்சியும் இணைந்து நடத்தின.

## நிலைமையை ஆராய்கிறார் சுனந்த தேசப்பிரிய

புலிகள் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்பதே அந்த வேண்டுகோளாகும்.

ரிச்சர்ட் ஆர்மிடேஜ் பேச்சில் மேலும் பல விடயங்கள் அடங்கியிருந்தன. குறிப்பாக, சமாதான முயற்சிகள் இவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்ததற்கு அவர் திருப்தி தெரிவித்திருந்தார். ஆனால், வழமைபோலவே முதலாளித்துவ ஊடகங்கள், ஆர்மிடேஜ் விடுதலைப் புலிகளுக்கு விடுத்த கோரிக்கைக்கே முன்னுரிமை வழங்கிச் செய்திகளை வெளியிட்டன.

ஆர்மிடேஜின் பேச்சையடுத்து, அதற்குப் பதிலளிக்கும் முகமாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தமது கருத்தை வெளியிட்டார். யுத்தநிறுத்த உடன்பாடு காணப்பட்டுள்ளது; அதன் ஜே.வி.பி. உறுப்பினர்களின் 'விசில்' மற்றும் கைதட்டல் ஓசையிடையே பேசிய அனுரா பண்டாரநாயக்கா, இன்னும் 8 நாள்களில் அரசைக் கலைக்கும் அதிகாரம் தனது சகோதரியான சந்திரிகாவுக்குக் கிடைத்துவிடும் என அங்கு தெரிவித்தார். டிசெம்பர் 5ஆம் திகதிக்குப் பின்னர் ஜே.வி.பியுடன் பேச்சுக்களை மேற்கொண்டு பொருத்தமானவேளையில், அரசைக் கலைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அனுரா கூறினார். அனுரா பண்டாரநாயக்கா மாத்திரமன்றி ஸ்ரீ.ல.சு. கட்சியைச் சேர்ந்த வேறு சிலரும் இவ்வாறான கருத்தை நாட்டில் பரப்பி வருகின்றனர். ஸ்ரீ.ல.சு. கட்சி ஜே.வி.பியுடன் இணைந்து இதற்கு முன்னரும அரசை அமைத்துள்ளதால் இதை நடைபெறமுடியாத சம்பவம் எனக் கூற

## மாற்றார் தோட்டத்திலிருந்து...

மூலம் வன்முறை நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளன. மீண்டும் வன்முறைகளையோ யுத்தத்தையோ ஆரம்பிக்கும் எண்ணம் எமக்கில்லை. ஆனால், கொள்கை ரீதியாக தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை வெறும் வன்முறைச் செயற்பாடுகள் எனக்கருதக்கூடாது. ஆயுதப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதற்குக் காரணங்கள் உள்ளன. அந்தக் காரணங்களுக்குத் தீர்வுகாணப்படும்போது ஆயுதப்போராட்டம் - வன்முறைச் - சம்பவங்கள் நின்றுவிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் அவற்றை மட்டும் தெரிவிக்கவில்லை. இருப்பினும் வழமைபோலவே வன்முறைகளையும் ஆயுதப்போராட்டத்தையும் முற்றிலுமாகக் கைவிடுவதாக கொள்கையளவில் வாக்குறுதியளிக்க பாலசிங்கம் விரும்பவில்லை என சிங்கள, ஆங்கில செய்தி ஊடகங்கள் முக்கிய தலைப்பிட்டு செய்தி வெளியிட்டன. அவ்வாறு தவறான முடியாது. சிலசமயம் முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ஒரு பிரிவினரும் இவர்களுடன் இணையக்கூடும்.

ஜே.வி.பியுடன் இணைந்து ஸ்ரீ.ல.சு. கட்சி ஆட்சி அமைத்தபோது தகுதிகாண் அரசு தொடர்பாக முக்கியமான நிபந்தனை ஒன்று விதிக்கப்பட்டது. அதாவது தகுதிகாண் அரசு ஆட்சியில் இருக்கும் காலவரையறைக்குள் விடுதலைப் புலிகளுடன் எந்தவொரு பேச்சுக்களையும் மேற்கொள்ளக்கூடாது என்பதே அந்த நிபந்தனையாகும்.

இன்று நிலைமை அன்றைய நிலையிலிருந்து மாறுபட்டுள்ளது. மங்கள சமரவீர மற்றும் சரத் அமுனுகம உட்பட ஸ்ரீ.ல.சு.கட்சித் தலைவர்கள் விடுதலைப் புலிகளை யுத்த ரீதியாகத் தோற்கடிக்கவேண்டும் எனக் கோடிட்டுக் கூறிவருகின்றனர். ஜே.வி.பியின் அரசியல் அணுகுமுறைகளின் படியும் அவர்கள் புரிந்துகொணடுள்ள விதத்தின்படியும் அவர்கள் கொண்டுள்ள முடிவானது தீவிர யுத்தத்தின் மூலம் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படவேண்டும் என்பதேயாகும். ஸ்ரீ.ல.சு.கட்சி மற்றும் ஜே.வி.பி. என்பன இணைந்து ஆட்சி அமைத்தால்







அவர்கள் கட்டாயமாகப் பெரும் எடுப்பில் யுத்தத்தை மீண்டும் ஆரம்பிப்பார்கள் என்பதை அரசியல் புரிந்துணர்வுள்ள எந்த ஒருவராலும் புரிந்துகொள்ளமுடியும். சமாதானத்தை எதிர்க்கும் அதாவுல்லா - முஸ்லிம் யுத்தவாதிகள் - இந்தக் கூட்டுடன் இணையும்போது யுத்தநிறுத்த உடன்பாடு

**தமிழில்: கஜனி**

மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியனவற்றை கிழித்தெறிவதைவிட வேறு மாற்றுவழி ஏதும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இருக்கமாட்டாது.

யுத்த ரீதியான தீர்வுக்கு இடம் இல்லை என்பதையும் புரிந்துகொண்ட பின்னரே விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை மேற்கொள்ளும் பயணத்தை ஐ.தே.முன்னணி அரசு ஆரம்பித்தது. 1994இல் இதையே சந்திரிகா கூறினார். 1995இல் இருந்து 2000ஆம் ஆண்டுவரை தீவிர யுத்தத்தில் ஈடுபட்ட பின்னர் ஜனாதிபதி இதையே புரிந்துகொண்டார். தற்போது ஜனாதிபதியாலேயே மீண்டும் பரிசீலிக்கப்படவேண்டும் எனக் கூறப்படும் 1997 மற்றும் 2000ஆண்டு அரசமைப்புச் சீர்திருத்தத்தினூடாக அதிகாரங்களைப் பகிர்வதற்கு ஸ்ரீலங்கா அரசு விரும்பியதற்குக் காரணம் யுத்தத்தின்மூலம் தீர்வுகாண முடியாது என்பதேயாகும்.

1987இல் இலங்கை - இந்திய உடன்பாட்டின்மூலம் அதிகாரங்களைப் பகிர்வதற்கு ஜே.ஆர்.ஜயவர்த்தனா விரும்பியதற்கும் இதுவே காரணம். கடந்த 20 ஆண்டுகளாக தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தை நடத்தியிராவிடின் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கவேண்டும் என்ற எண்ணம் சிங்கள ஆளும் வர்க்கத்திற்கு ஏற்பட்டிருக்க வாய்ப்புக்கள் இருந்திருக்கமாட்டா. விடுதலைப்புலிகள் அமைப்பிடம் அரசியல் குறைபாடுகள் காணப்பட்டாலும் தமிழ்மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க மேற்கொண்ட போராட்டங்கள் வரலாற்றில் இடம்பிடித்ததற்கு இதுவே காரணமாகும். விடுதலைப் புலிகள் அமைப்பு என ஓர் அமைப்பு இருந்திருக்காவிடின் இன்று தமிழ் மக்களுக்குத் தன்னாட்சியைப் பெற்றுக்கொடுப்பதற்கான பேச்சுகள் இவ்வளவு தூரத்திற்கு பாரதூரமாய் அமையாமல் விடுவதற்கு வாய்ப்புக்கள் இருந்தன.

தற்போதுள்ள பிரச்சினை இதுவே. ஸ்ரீ.ல.சு.கட்சி - ஜே.வி.பி (தற்போது அதாவுல்லாவும் சேர்ந்து) கூட்டு அரசொன்றை அமைத்து, மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதாக இனப்பிரச்சினை தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் அனுரா பண்டாரநாயகா பகிரங்கமாக எச்சரிக்கை விடுக்கும் வேளையில், ஆயுதப்போராட்டத்தை முற்றாகக் கைவிடுவதாக விடுதலைப் புலிகள் அறிவித்தால் அதன் கருத்து என்ன? அது வேறொன்றாகவும் இருக்காது. நிச்சயமாக அது தற்கொலை முயற்சியாகவே இருக்கும். ஸ்ரீ.ல.சு. கட்சி - ஜே.வி.பி. கூட்டின் முன்னிலையில் தங்கள் உயிரை விருப்பத்துடன் அர்ப்பணிப்பதாக அது அமையும். அதன் பயனாக இந்த நாட்டில் தமிழ்மக்களின் உரிமைகளுக்கான போராட்டம் பாரிய பின்னடைவுகளைச சந்திக்கும்.

சமாதான முயற்சிகளுக்கு உலகின் ஒத்துழைப்பு உள்ளதால் இத்தகைய நடவடிக்கைகளை ஸ்ரீ.ல.சு. கட்சி - ஜே.வி.பி. கூட்டு அரசுக்கு (அவ்வாறு அமைக்கப்பட்டால்) மேற்கொள்ளமுடியாமற்போகும் என ஒரு சிலர் வாதிடலாம். இருப்பினும் இந்தக் குழுவினர் உலக சமூகத்திற்கும் எதிராகப் போர்க்கொடி தூக்கத் தயாராய் உள்ளனர் என்பதை ஜனாதிபதியின் பேச்சுக்களும் ஜே.வி.பியின் அறிக்கைகளும் தெளிவாக்குகின்றன. ஜே.வி.பியின் அரசியலின்படி இது ஏகாதிபத்திய அரசியலைத் தோற்கடிப்பதாகும். எனவே, உலக சமூகத்துடன் மோதுவது என்பது ஜே.வி.பியினருக்குப் பேச்சளவில் பெரிய விடயமல்ல. உண்மையில் ஜே.வி.பியின் நோக்கமும் அதுவே ஆகும். இந்தக் கூட்டணி ஆட்சிக்கு வந்தால், இந்த நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள யுத்தநிறுத்தத்தை உலக சமூகத்தினாலும் பாதுகாக்கமுடியாதநிலை ஏற்படலாம்.

மேலும் தொலைநோக்குடன் கூடிய தர்க்கத்தின் அடிப்படையிலேயே இனப் போராட்டங்கள் நடைபெறுவதில்லை என்பதை நாம் நினைவில் வைத்திருத்தல்வேண்டும். எனவே, இனப்போராட்டங்களில் அரசியல் ரீதியாகக் காணக்கூடிய ஒரு பயங்கரநிலைமை என்னவெனில், தர்க்கரீதியாகத் தெளிவாக்க முடியாத சுய அழிவுப் பாதையை நோக்கி இழுத்துச் செல்லப்படும் மூட நம்பிக்கையாகும்.

சிறிலங்காவின் எதிர்காலம் தொடர்பாகச் சிந்திக்கும்போது இன்று ஜே.வி.பி., ஸ்ரீ.ல.சு.கட்சி - அதாவுல்லா ஆகிய யுத்தக் கூட்டணி தர்க்கத்திற்கு அப்பாற்பட்ட அவ்வாறான கருத்தையே கொண்டிருப்பதை அவதானிக்கமுடிகிறது.

பிரச்சினை அது அல்ல. தெற்கில் இவ்வாறான யுத்தப்போக்கு வளர்ந்து வருவதற்கான வாய்ப்புக்கள் அடிக்கடி தோன்றிக் கொண்டிருக்கும் வேளையில், முற்றிலுமாக யுத்தத்தைத் தவிர்ப்பதாக விடுதலைப் புலிகள் வாக்குறுதி அளித்திருப்பது நியாயமானதா? என்பதேயாகும். விடுதலைப் புலிகள் அமைப்பை ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொள்ளச் செய்வதாயின் வலுவான தன்னாட்சி வழங்கப்படுவது மாத்திரமன்றி அந்தத் தன்னாட்சியைப் பாதுகாக்கும் விதத்தில் அரசமைப்பு ரீதியாக மட்டுமல்லாமல் பலம்மிக்க சர்வதேச அர்ப்பணிப்புகளும் அவசியமாகும். இதற்குக் காரணம் இவ்வாறான அரசியல் கூட்டு ஆட்சிக்கு வந்து மீண்டும் வரலாற்றுச் சக்கரத்தை திருப்பிச் சுற்றுவதற்கு அதிக அளவில் வாய்ப்புகள் இருப்பதேயாகும். மேலும் ஆர்மிடேஜின் கோரிக்கைக்கு இதைவிட சிறந்த பதிலை பாலசிங்கத்தால் அளிக்கமுடியாது. காரணம் இந்தக் கருத்துப் பரிமாற்றத்தில் தனியே ஆர்மிடேஜும் பாலசிங்கமும் மாத்திரம் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. இது அனுரா பண்டாரநாயக்கவுடனுமான கொடுக்கல் வாங்கலும் ஆகும். ☆

---

**நிவாரணத்துக்கு விரும்பும் பொருள் கொள்வனவு:**

## யாழ்.செயலக திட்டத்துக்கு அமைச்சு அனுமதி இல்லை

யாழ்ப்பாணம்டிசெ.14

குடாநாட்டில் இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்கள் சங்கக் கடைகளில் தாம் விரும்பிய பொருள்களை நிவாரணமாகக் கொள்வனவு செய்யும் திட்டத்துக்கு புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு அனுமதி மறுத்துள்ளது.

குடாநாட்டில் நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு மாதாமாதம் அரிசி, சீனி, பருப்பு, பாமா ஆகியன வழங்கப்பட்டுவருகின்றன.

இதற்குப் பதிலாக இடம்பெயர்ந்த மக்கள் தமது நிவாரணப் பெறுமதிக்கு சங்கக் கடைகளில் தாம் விரும்பிய பொருள்களைக் கொள்வனவு செய்ய வசதி அளிக்கும் திட்டம் ஒன்றை யாழ். செயலகம் வகுத்திருந்தது.

இத்திட்டத்தை புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் அனுமதிக்காக யாழ். செயலகம் அனுப்பியிருந்தது.

இத்திட்டத்தை ஏற்க அமைச்சு மறுத்துவிட்டது.

அதேவேளை - அடுத்தமாதம் முதல் நிவாரணத்திற்கான பொருள்களில் மாவையும் சேர்த்து வழங்க யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

(ம-3)

## ஒளி விழா

வலிகாமம் தெற்கு,டிசெ.14

தென் இந்திய திருச்சபையின் தெல்லிப்பழை ஆதீனத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் இன்று பிற்பகல் 2 மணியளவில் ஒளிவிழா நடைபெறவுள்ளது.

எஸ்.ரூபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சேகரக் குரு ரி.தேவனேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

(எ-152)

## பிரம்ம குமாரிகள் நிலைய கண்காட்சியும், விரிவுரையும்

யாழ்ப்பாணம்,டிசெ.14

இலங்கை பிரம்ம குமாரிகள் இராஜ யோக நிலையத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமைமுதல் மூன்று நாள்களுக்கு யாழ்ப்பாணத்தில் கண்காட்சியும், விரிவுரைகளும் நடைபெறவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு 'மன அழுத்தமற்ற வாழ்க்கைக்குத் தியானம்' என்னும் தலைப்பிலான விரிவுரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் -

நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு 'சந்தோஷமான வாழ்க்கைக்குத் தியானம்' என்னும் தலைப்பிலான விரிவுரை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும் -

எதிர்வரும் 18ஆம் திகதி புதன் கிழமை மாலை 5 மணிக்கு 'மன ஒருமைப்பாட்டுக்குத் தியானம்' என்னும் தலைப்பிலான விரிவுரை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிலும் நடைபெறவுள்ளன.

விரிவுரைகளைத் தொடர்ந்து படவிளக்கக் கண்காட்சி இடம்பெறும்.

(எ-10)




உலக உணவுத் திட்டத்தின்கீழ் நல்லூர் கமநல சேவை நிலையத்தினால் திருநெல்வேலி பூதவராயர் குளத்தினை ஆழமாக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட உழைப்பாளிகளுக்கான முதலாம் கட்ட உணவு விநியோகம் அண்மையில் திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வை யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் ஆரம்பித்து வைத்து உரைநிகழ்த்துவதையும் அருகில் யாழ்.மாவட்ட கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(ஐ-180)

# Computer College
# கணனிக் கல்லூரி

Center for Computer Studies

337, Kasthuriyar Road,
Jaffna

E - Mail : collegeofcom@bharatmail.com
Phone & Fax : 021 - 2223497

**கணினிக் கற்கைகள்**

- தமிழிலும் விரிவுரைகள்
- விளக்கக் குறிப்புகள்
- இதை கட்டண முறை
- சரியான நேர ஒழுங்கு
- பிரத்தியேக வகுப்புகள்

**கணினி பராமரிப்பு**

**கணினி விற்பனை**

**இணைய சேவைகள்**

**2004** உயர்தரப் பிரிவு மாணவர்களுக்கென கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட பொதுத் தகவல் தொழில் நுட்ப ( **GIT** ) பாடத்திட்டத்துக்கான கற்கைகளை யாழ்.மாவட்டத்தில் **முதன்முதலாக** ஆரம்பித்த பெருமையுடன் இரண்டாவது வருடத்தில் காலடி பதிக்கின்றோம்..

2005 பிரிவுகள்

15 - 12 - 2002 ஞாயிற்றுக்கிழமை
காலை - 10.00 மணி
மாலை - 3.30 மணி

**ஏனைய புதிய பிரிவுகள் :**

Diploma Courses :
Dip. in. Microsoft Office
Dip. in. Desktop Publishing
Dip. in. Web Designing

Certificate Courses in:
Ms - Word, Ms - Excel, Ms - Power point, Ms - Access, Corel DRAW, PageMaker, Photoshop & Internet - E mail.

www.computercollege.ac.lk



MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS

324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)

# இலவசக்கணனிப்பயிற்சி

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்

பதிவுகள் 16.12.2002 இற்கு முன்னர் நேரில்

MCS

SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW SOW



பெற்றோர்களே !

உங்கள் பிள்ளையில் நீங்கள் கொண்ட அக்கறை ?

கணினியியல் கல்லூரி

இன்று போல் என்றும்...

கணினியியல் கல்...

நிலைத்திருக்க.....

**கணினியியல் கல்லூரியின் பெறுமதி மிக்க வெகுமதியை பரிசாக அளித்திடுங்கள்.**

புலரும் புத்தாண்டோடு
எமது புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

**Dip.in.Ms. Office.**
**Dip.in. Desktop Publishing.**
**Dip.in. Hardware Technology.**

**Module Classes**
**Corel DRAW.**
**Adobe PHOTOSHOP.**
**Video Mixing :**
Adobe Premiere
Ulead COOL 3D

GIT பொதுத் தகவல் தொழில் நுட்பம்

கே.கே. எஸ் வீதி,
தகவலுக்கு : இயக்குநர்., கணினியியல் கல்லூரி இணுவில்

ஆரம்பம் : 15 - 12 - 2002.
ஞாயிறு காலை : 09.30




நெற்பயிரில் இலைச்சுருட்டிப் புழுக்களைக் கட்டுப்படுத்த

சரியான இலக்கு

# மிமிக்® 20 எப்

(டெபியுபெனோசைட்)



## புதிய விஷேட செயற்படுபொருள்







◎ நெற்பயிரில் இலைச்சுருட்டிப் புழுக்களின் கட்டுப்பாட்டிற்கு **ஹேக்கெம் நிறுவனம்** வழங்கும் புதிய தீர்வு **மிமிக் 20 எப்.**

◎ ஏக்கருக்கு 300 மி.லீற்றர் மட்டுமே.

**மிமிக்® 20 எப்** இன்றே பாவித்து — பயிர்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

HAYLEYS

**ஹேலீஸ் அக்ரோ புரெடெக்ஸ் லிமிட்டட்**
25, போஸ்ரர் லேன்,
கொழும்பு - 10.
தொலைபேசி: 688960-3,
693138

Bayer

பீடைநாசினிகள் ஆபத்தானவை.
அவதானமாகக் கையாளவும்.

(11734)



# இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாகுப்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ். வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத் தடையா? தொழிற் பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எவ்வித பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம்மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

**மணிசாமி P.T.R.**

யாழ்.உல்லாசப் பயணிகள் விடுதி,
இல.54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்).
பார்வையிடும் நேரம்: காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.
(வியாழக்கிழமைகளில் விடுமுறை) (11727)


## குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையம்
# திருவெம்பாவை

*இடம்:* **அருள்மிகு ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம், களவாவோடை, ஏழாலை தெற்கு.**

*காலம்:* **20.12.2002 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிமுதல**

குரும்பசிட்டி அருள்மிகு ஆலயங்கள் சார்பாக நடைபெறும் மேற்படி வழிபாட்டு நிகழ்வில் அடியார்கள் கலந்து அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றேகுமாறு வேண்டுகின்றோம்.

நிதியுதவி செய்ய விரும்புவோர் நிலைய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

சோ.பவானந்தன்
செயலாளர்

(11721)

அ.சக்திவேல்
தலைவர்

**வடபிராந்திய போக்குவரத்துச் சபை - கோண்டாவில்**
## வழங்குநர்களையும் சேவைகளையும் பதிவு செய்தல் 2003

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு வ.பி.போ.சபையுடன் தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநரிடமிருந்து விண்ணப்பங்கள் 2002ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**வழங்கல்கள்:-**

1. பேருந்துகளுக்கான உதிரிப்பாகங்கள்,
வழங்கப்பட வேண்டிய பேருந்துகளின் இனம் பின்வருமாறு:
   அ. லேலன்ட், லங்கா அசோக் லேலன்ட்
   ஆ. டாட்டா - 1210 எஸ்ஈ, 1313 (டிமோ)
   இ. கிறேட்வோல் (சீனத்தயாரிப்பு)
2. வில்லுத் தகடுகள்.
3. ரயர், ரியூப் வகைகள்.
4. பற்றரி, அசிட் வகைகள்.
5. மின் உபகரணங்கள், மின் சாதனங்கள்.
6. பிளாஸ்டிக் கண்ணாடி, பாதுகாப்புக் கண்ணாடி வகைகள்.
7. சகல வகையான இரும்புப் பொருள்கள், ஆணி வகைகள், சோல்டறிங் ஈயம், இனாமல் பெயின்ட் வகைகள், அலுமினியம் சீற், கல்வனையிஸ்ட் சீற்.
8. அலுவலக மரத்தளபாடங்கள்.
9. அலுவலக உபகரணங்கள், ஸ்டீல் அலுமாரி, ஸ்டீல் கபினெற்கள்.
10. காகிதாதிகள்.
11. கணனி இயந்திரத்திற்கான உபகரணங்கள்.

**சேவைகள்:**

1. அச்சிடுதல் - ரிக்கற் புத்தகங்கள், பொதிச்சீட்டுகள், வழிப்பட்டியல்கள் ஆகிய பல தரப்பட்டவை.
2. அலுவலக தட்டச்சு திருத்துதல், பக்ஸ் இயந்திரம் திருத்துதல், போட்டோ பிரதி செய்யும் இயந்திரம் திருத்துதல், கணனி இயந்திரம் திருத்துதல்.
3. கடைச்சல் வேலை செய்தல்.
4. டீசல் இன்ஜெக்ரர் பம்புகள் திருத்துதல் மற்றும் இவற்றுக்கான இன்ஜெக்ரர்கள், நொசில், பம்ப் இன்ஜெக்ரர் எலிமென்ற், வால்வு ஆகிய உபகரணங்கள்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் *"வழங்கல்கள், சேவைகள் - 2003"* எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால்மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல்வேண்டும்.

1. வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் *"தலைவர், கூறுவிலைச் சபை, வ.பி.போ.சபை, பலாலி வீதி, கோண்டாவில்"* என முகவரி இடப்படல்வேண்டும்.
2. ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல்வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக் கட்டணமாக ரூபா 100/= காசாக/காசுக் கட்டளையாக/தபால் கட்டளையாக பிராந்தியக் கணக்காளரின் பெயரில் பெறப்பட்டு அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

கோரப்படும்போது விலைமனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும அல்லது உரிய நேரத்திற்கு பொருள்கள்/சேவைகள் வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/சேவைகள் வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன் அறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும். ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. விண்ணப்பிக்கும் வழங்கல்/சேவை.
2. பெயரும் விலாசமும்.
3. தொலைபேசி இலக்கம்.
4. வியாபாரப் பதிவின் இலக்கமும் திகதியும்.
5. வியாபாரத்தின் தன்மை.
6. வங்கியாளர்களின் பெயர்.
7. எமக்குக் கிடைக்கக்கூடிய கடன் வசதிகள்/கால எல்லை.

குறிப்பு: சேவைகள்/வழங்கலுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவுசெய்யும் பெயரிலேயே வழங்கப்படும்.

**சு.மணிவாசகன்**
*பொது முகாமையாளர். வ.பி.போ.ச., கோண்டாவில்.*

(சி-25386)

# வரலாற்றின் சிறந்த பந்துவீச்சாளர் முரளி

## 'விஸ்டன்' சஞ்சிகையினால் தெரிவு



டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றின் மிகச்சிறந்த பந்துவீச்சாளராக முத்தையா முரளிதரனை 'விஸ்டன்' சஞ்சிகை தெரிவுசெய்துள்ளது. வரலாற்றில் சிறந்த துடுப்பாட்ட வீரராக டொன் பிரட்மன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

- இவ்வாறு இங்கிலாந்து பத்திரிகை ஒன்று நேற்று அறிவித்துள்ளது. 'விஸ்டன்' சஞ்சிகை கிரிக்கெட்டின் பைபிள் என வர்ணிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை போட்டிகளில் பங்குபற்றிய அனைத்து வீரர்களினதும் பெறுபேறுகள், எதிரணிகளின் பலம், பங்குபற்றிய ஒவ்வொரு போட்டியினதும் அல்லது இன்னிங்ஸினதும் பெறுபேற்றுக்கு குறித்த வீரர் ஆற்றிய பங்களிப்பின் முக்கியத்துவம், குறித்த வீரரின் கிரிக்கெட் வாழ்க்கைக்காலம் முதலியனவற்றை ஆராய்ந்து சிறந்த துடுப்பாட்ட வீரர்களும் பந்துவீச்சாளர்களும் வரிசைப்படுத்தப்பட்டனர்.

இதன்படி சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் முதலிடத்தில் உள்ளார்.

முதல் 10 சிறந்த பந்துவீச்சாளர்களாகத் தெரிவானோரில் முரளி, ஷேன் வோர்ன், கிளைன் மெக்ராத் ஆகியோரே தற்போது விளையாடும் வீரர்களாவர்.

துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் மேதை டொனால்ட் பிரட்மன் முதலிடம் பெற்றுள்ளார். பிரட்மன் பாணியில் விளையாடுகிறார் எனப் புகழப்படும் சச்சின் டெண்டுல்கர் இரண்டாமிடம் பெற்றுள்ளார். விவியன் ரிச்சர்ட்ஸ், கெரி சோபர்ஸ் ஆகியோர் முறையே மூன்றாம், நான்காம் இடங்களை பெற்றுள்ளனர்.

மேற்கிந்திய தீவுகளின் பிறையன் லாரா 10ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். டெண்டுல்கர், லாரா ஆகியோர் மாத்திரமே முதல் 10 சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் பட்டியலில் இடம் பெற்றோரில் தற்போது விளையாடும் வீரர்களாவர்.

30 வயதான முரளி, இதுவரை 437 டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். கொட்னி வோல்ஸ், ஷேன் வோர்ன் ஆகியோருக்கு அடுத்ததாக ஆகக்கூடுதலான டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்திய வீரராக முரளிதரன் திகழ்கிறார்.

**சிறந்த 10 துடுப்பாட்ட வீரர்கள்**

டொன் பிரட்மன் (ஆஸ்திரேலியா), சச்சின் டெண்டுல்கர் (இந்தியா), விவியன் ரிச்சர்ஸ் (மே.இ.தீவுகள்), கெரி சோப்பர்ஸ் (மே.இ.தீவுகள்), எலன் போர்டர் (ஆஸ்திரேலியா), ஜக் கோப்ஸ் (இங்கிலாந்து), கென் பெரிங்டன் (இங்கிலாந்து), சுனில் கவாஸ்கர் (இந்தியா), கிரீஜ் சப்பல் (ஆஸ்திரேலியா), பிறையன் லாரா (மே.இ.தீவுகள்).

**சிறந்த 10 பந்துவீச்சாளர்கள்**

முத்தையா முரளிதரன் (இலங்கை), ரிச்சர்ட் ஹேட்லி (நியூஸிலாந்து), சட்னி பார்ன்ஸ் (இங்கிலாந்து), ஷேன் வோர்ன் (ஆஸ்திரேலியா), கிளேறி கிறிம்மேட் (ஆஸ்திரேலியா), கிளைன் மெக்ராத் (ஆஸ்திரேலியா), டெனிஸ் லில்லி (ஆஸ்திரேலியா), மெல் கொல்ம் மார்ஷல் (மே.இ.தீவுகள்), இம்ரான்கான் (பாகிஸ்தான்), கொட்னி வோல்ஸ் (மே.இ.தீவுகள்).

## வி.பி. கிண்ண கிரிக்கெட் போட்டி

# 7 விக்கெட்டுக்களால் ஆஸி. அணி வெற்றி!

சிட்னி,டிசெ.14

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் இலங்கை கிரிக்கெட் அணிகள் பங்குபற்றும் வி.பி.கிண்ண முக்கோண ஒருநாள் போட்டித் தொடர் நேற்று ஆஸ்திரேலியாவில் ஆரம்பமாகியது.

நேற்று நடந்த முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதின.

இப்போட்டியில் ஆஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மத்தியூ ஹைடன், கில்கிறிஸ்ட் ஆகியோரின் அபார ஆட்டம் ஆஸ்திரேலியாவுக்கு வெற்றியைப் பெற்றுத் தந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களின் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 251 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணியின் சார்பில் நிக் நைற் 111 ஓட்டங்களையும் மார்க்த் திரஸ் கோதிக் 57 ஓட்டங்களையும், அணித் தலைவர் நாஸர் ஹூசேன் 52 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்களில் பிறட்லீ, டெரன் லெஹ்மன் மற்றும் ஷேன் வோர்ன் முறையே 4,3 மற்றும் ஒரு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

அடுத்து துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 45 ஓவர் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

ஆஸ்திரேலிய அணியின் சார்பாக மத்தியூ ஹைடன் 98 ஓட்டங்களையும், அடம் கில்கிறிஸ்ட் 53 ஓட்டங்களையும், டேமன் மார்ட்டின் ஆட்டமிழக்காது 46 ஓட்டங்களையும், லெஹ்மன் ஆட்டமிழக்காது 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.



ஆட்டநாயகன் மத்தியூ ஹைடன்

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மத்தியூ ஹைடன் தெரிவுசெய்யப்பட்டார்.

இத் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மெல்போணில் நடைபெறவுள்ளது. இதில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் மோதவுள்ளன. (ஓ-5)

# ஹொக்கி சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,டிசெ.14

சுன்னாகம் றோட்டறிக் கழகம் நடத்தும் ஆர்.சி.சி சம்பியன் கிண்ணத்துக்கான ஹொக்கி சுற்றுப் போட்டி ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை முதல் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இன்று பிற்பகல் 2.30 மணிமுதல் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

பிற்பகல் 2.30 மணி - கிறாஸ் கொப்பர்ஸ் வி.க. "பி" அணி எதிர் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி (ஊதா) அணி

பிற்பகல் 3.15 மணி - கோப்பாய் ஐக்கிய வி.க. அணி எதிர் உடற்கல்வி (நீலம்) அணி

பிற்பகல் 4.00 மணி- யாழ்.பல்கலைக்கழக வி.க.அணி எதிர் சென்றலைட்ஸ்வி.க அணி

பிற்பகல் 4.45 மணி ஓல்ட் 'ஜோல்ட் ஸ் வி.க அணி எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் வி.க. அணி

(ம-5)

## கரம் போட்டி

யாழ்ப்பாணம்,டிசெ.14

வை.எம்.சி.ஏயினால் நடத்தப்படும் கரம் சுற்றுப்போட்டியின் இருபாலாருக்குமான திறந்த போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் யாழ். வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இதில் 45 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான போட்டிகளும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-5)

# புலிகள் யுத்தத்தை விரும்பவில்லை: ஜேர்மன் தூதுவரிடம் யாழ். ஆயர்

யாழ்ப்பாணம்,டிசெ.14

விடுதலைப் புலிகள் யுத்தத்தை விரும்பவில்லை. எமது மக்களுக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் ஒரு நல்ல தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்றே விரும்புகிறார்கள்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வருகைதந்த ஜேர்மன் நாட்டுத் தூதுவர் ஜகன் எலியாசுடன் உரையாடிய யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்த ஜேர்மன் நாட்டுத் தூதுவர் ஜகன் எதியாஸ் அங்கு யாழ் ஆயருடன் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின்போது ஆயர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதானப் பேச்சுமூலம் ஒரு நல்ல தீர்வை எட்டவேண்டும் என்றே விடுதலைப் புலிகள் விரும்புகிறார்கள். எமது மக்களின் ஆதங்கமும் அதுவே.

இதற்கு சர்வதேசமும் தமது முழுமையான ஆதரவை வழங்கவேண்டும். பேச்சு முயற்சிகளுக்கு நோர்வே அரசு வழங்கிவரும் பங்களிப்பும் காத்திரமானது. முன்னர் நடைபெற்ற பேச்சுகளைப் போலல்லாது இப்போது நடைபெறும் பேச்சுக்கள் வேகமாக முன்னேறி வருகின்றன. அரசாங்கமும் விட்டுக்கொடுப்புடனும் இதயசுத்தியுடனும் செயற்படவேண்டும்.

இதன்மூலம் எமது நாட்டுக்கு ஒரு நிரந்தர சமாதானம் கிடைக்கவேண்டும் என்றார்.

இச்சந்திப்பின்போது ஜேர்மன் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்கான பொறுப்பாளர் கே.ஏறாப் முல்லரும் உடனிருந்தார்.

(ம-8)

# சமாதானம்



அநுராதபுர மாவட்ட சமாதான சபையால் கடந்த 4ஆம் திகதி அச்சிடப்பட்டு அநுராதபுரம் இளைஞர் மன்றக் கட்டடத்தில் நடைபெற்ற பிரசார மாநாட்டில் வெளியிடப்பட்ட பிரசுரத்தின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம். அந்த மாநாட்டிற்கு வழங்கப்பட்ட தலைப்பு 'ஈழத்திலிருந்து சமாதானத்திற்கு' (From Eelam to Peace) என்பதாகும்.

சிங்கள - பௌத்த மக்கள் சிந்திக்கவேண்டிய சம்பவங்கள் தற்போது நாட்டில் இடம்பெறுகின்றன. எமது சிங்களத் தலைவர்கள் மற்றும் தலைவிகளில் பலர் விடுதலைப் புலிகளை, எமது பிரதேசங்களை ஆக்கிரமிக்கக் காத்திருக்கும் ஆக்கிரமிப்புப் படை எனக் கூறினர். இருப்பினும், சிங்களவர்களாகிய நாம் எப்போதாவது யாழ்ப்பாணம் செல்ல முடியும் என நினைத்திருப்போமா? ஆனால், தற்போது நாங்கள் யாழ்ப்பாணம் செல்லமுடியும். யாழ்ப்பாணம் சென்று உயிருடன் திரும்பி வரவும் முடியும். யாழ்ப்பாணம் செல்லும் சிங்களவர்களாகிய எங்களுக்கு பாதுகாப்பை வழங்குபவர்கள் விடுதலைப் புலிகளே.

ஸ்ரீலங்கா மஹாபோதி மீதும் தலதா மாளிகை மீதும் தாக்குதலை மேற்கொண்ட விடுதலைப் புலிகளை சிங்கள - பௌத்தர்களாகிய நாம் மிகவும் சீற்றத்துடனேயே பார்த்தோம். ஆனால், யாழ்ப்பாணம் சென்ற பின்னரே எமது அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட ராணுவ நடவடிக்கைகளில் இருந்து தப்பாத இந்துக் கோவில்கள், பாடசாலைகள், வீடுவாசல்கள் எவையும் இல்லை என்பதைக் கண்டோம். இன்றும் ராணுவத்தின் அதி உயர் பாதுகாப்பு வலயம் பிரபலமான இந்துக் கோவில்களைச் சுற்றியே உள்ளது. இந்து சமயத்தை பின்பற்றுவோருக்கு அங்கு காலடி எடுத்து வைக்கக்கூட இன்றும் அனுமதியில்லை.

. புதுமையான விடயம் என்னவெனில் ஸ்ரீ மஹாபோதி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது, தலதாமாளிகை மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று கூறும் யுத்தத்தில் அக்கறை கொண்டவர்கள், விடுதலைப் புலிகளை முற்றிலுமாகக் கொன்றொழிக்கவேண்டும் எனக் கூறும் வேளையில், 'மீண்டும் யுத்தம் வேண்டாம்' எனக் கூறிக்கொண்டு தங்களது வாழ்விடங்களுக்கும் உயிர்களுக்கும் இவ்வளவு அழிவுகளை ஏற்படுத்திய அரச படைகளுடன் இணைந்து விடுதலைப் புலிகள் கண்ணிவெடிகளை அகற்றுகின்றனர்.

அதுமாத்திரமின்றி, பேச்சுவார்த்தைகள் வேண்டாம் எனக்கூறி யுத்தத்திற்குத் தூபமிடும் ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய ஆகியனவற்றுடன் பேச்சுக்களை மேற்கொள்வது எனவும் விடுதலைப் புலிகள் தீர்மானித்துள்ளனர்.

பிரபாகரன் வடக்கில் ஈழத்தை உருவாக்கும் வேளையில் தொண்டமான் மலைநாட்டில் தோட்டப் பகுதியில் மலைநாட்டை உருவாக்குகிறார் என யுத்தவாதிகள் எமக்குக் கூறினர். அதே யுத்தவாதிகள் பேச்சு மற்றும் தீர்வு குறித்தும் எமக்கு விளக்கினர். அவற்றை நாட்டைத் துண்டாடும் முயற்சி எனவும் பிரிவினைவாதிகளுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கும் துரோகத்தனம் எனவும் கூறினர். அதேபோலவே மாகாண சபை முறை அறிமுகப்படுத்தப்பட்ட போது நாடு எட்டுத் துண்டுகளாகத் துண்டாடப்பட்டது என்றனர். எனவே, அநுராதபுரத்தில் இருந்து குருநாகலுக்குச் செல்ல விசா பெறவேண்டும் என்றனர்.

யுத்தநிறுத்தம் பற்றியும் அவர்கள் கூறினர். எமது ராணுவத்தை முகாம்களில் முடக்கி வைத்து முற்றாக அழிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள சதியே யுத்தநிறுத்தம் என்றனர். விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால் ஈழம் சட்டபூர்வமானதாகிவிடும் என்றும் கூறினர்.

இவ்வாறு எல்லாவற்றையும் கூறிய யுத்தவாதிகள் தின்று கொழுத்து "பிரபாகரனைக் கொன்று யாபாபடுனவை (யாழ்ப்பாணத்தை) வென்றெடுப்போம்" என்றனர். இருப்பினும், இன்று என்ன நடந்துள்ளது? யுத்தநிறுத்தத்தின் பின்னர் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பிரபாகரன் ஈழத்தைக் கைவிட்டபோது தொண்டமானின் பேரன் (ஆறுமுகம் தொண்டமான்) மல்வத்தை பீடத்தில் புத்த பிக்குகளைச் சந்தித்து ஆசிகளைப் பெற்றுள்ளார்.

பிரபாகரனைக் கொன்று யாபாபடுனவை வெற்றிகொள்வதற்குப் பதிலாக பிரபாகரனுடன் பேச்சுகளை அரசு மேற்கொண்டதன் பயனாகவே இந்த நிலைமை உருவாகியுள்ளது.

யுத்தத்தால் பிரிக்கப்பட்ட நாடு மீண்டும் ஒன்றிணைவதற்கும் பாதிக்கப்பட்ட இனங்கள் மீண்டும் ஒன்று சேர்வதற்கும் உருவாகியுள்ள இந்த வாய்ப்பானது பேச்சுகளின் மூலமாகவே ஏற்பட்டது என்பதை - போர் ஆர்வம் கொண்ட கருத்துக்களை உடைத்தெறிந்து - செயல்வடிவில் நிரூபித்துள்ளது. இல்லையா?

எனவே, பிரபாகரன் பௌத்த மஹா சங்கத்தினரின் (பௌத்த பிக்குகளின்) ஆசீர்வாதத்தைப் பெறும் நாள் உதயமாகும் எனக்கூறுவது புதுமையானதன்று.

(ம)

## யாழ்.மாநகர சபையைச் சேர்ந்த

# சுகாதார பரிசோதகர்களுக்கு சீருடைத்துணி வழங்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,டிசெ.14

யாழ்.மாநகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு இந்த ஆண்டுக்குரிய கோல உடைத் துணிகள் இதுவரை வழங்கப்படவில்லை என புகார் தெரிவிக்கப்பட்டது.

கடந்த பல வருடங்களின் பின்பு 2001ஆம் ஆண்டு கோல உடைத் துணிகள் வழங்கப்பட்டன என்றும் - இந்த ஆண்டில் இதுவரை சீருடை வழங்குவதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் - கூறப்பட்டது.

இது விடயமாக மாநகர சபைக் கூட்டத்தில் பலமுறை பிரஸ்தாபிக்கப்பட்டும் அது பலனளிக்காமல்போய் விட்டது என்று சுகாதார பரிசோதகர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சீருடை வழங்கப்படாமையினால் கடமைகளை நிறைவேற்றுவதில் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(ஏ-10)

# மேற்குப் பகுதி கடலில் எண்ணெய்வள ஆய்வு

கொழும்பு, டிசெ.14

இலங்கையின் மேற்குப் பிரதேசக் கடலில் எண்ணெய்வள ஆரம்ப ஆய்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சு கூறுகிறது.

அமெரிக்க எண்ணெய்வள ஆய்வு நிறுவனம் ஒன்று செய்மதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொண்ட ஆய்வில் மேற்கு பிரதேசக் கடலில் எண்ணெய்வளம் இருப்பது தெரியவந்திருக்கிறது.

இதையடுத்தே ஆரம்ப ஆய்வு வேலைகள் மேற்கோள்ளப்பட்டு வருகின்றன.

சுவீடனைச் சேர்ந்த பெற்ரோஸ்கேன் என்னும் நிறுவனம் இந்த ஆய்வு வேலைகளை மேற்கொண்டிருக்கிறது என்று அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறுகிறார். (ஐ)

## அன்பான அழைப்பு

### மூத்த வங்கியாளர் கௌரவிப்பு - 2002

தற்பொழுது சேவையிலுள்ள யாழ்.மாவட்ட வங்கிகளைச் சேர்ந்த ஊழியர்கள் தமது வங்கிகளில் இருந்து இளைப்பாறியும் அன்றி வேறு வழிகளில் விலகியும் சென்ற மூத்த வங்கியாளர்களை (ஓய்வூதியம் பெறும் விதவைகள் உட்பட) கௌரவிக்கும் வருடாந்த நிகழ்வானது நாளை (15.12.2002) ஞாயிற்றுக்கிழமை நினைவு கூரப்படவுள்ளது.

இடம்:- **வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபம்**
(வர்த்தக வங்கி அருகில்)
இல.464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நேரம்: **காலை 10மணி**

பிரதம விருந்தினர்:- **உயர்திரு.ப.கோபாலகிருஷ்ண ஐயர்**
*(கலைப்பீடாதிபதி - யாழ். பல்கலைக்கழகம்)*

கௌரவிக்கப்படுபவர்களையும், கௌரவிப்பவர்களையும் இவ் விழாவில் பங்குகொண்டு மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றனர்.

திரு.ரி.ரகு
உபதலைவர்.

திரு.என்.சிவரத்தினம்
செயலாளர்.

*குறிப்பு:* பங்குகொள்பவர்கள் தமது வருகை பற்றி இதுவரை அறிவிக்காவிடின் தயவுசெய்து செயலாளருக்கு அறிவித்து ஏற்பாடுகளுக்கு உதவி செய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

வங்கியாளர் சங்கம்,
யாழ்.மாவட்டம். (C/25383)

BANKERS ASSOCIATION
JAFFNA DISTRICT.

## புனர்வாழ்வு குறித்து நான்கு நாள்கள் பயிற்சிப் பட்டறை!

வலி.மேற்கு,டிசெ.14

சமூக அடிப்படையிலான புனர்வாழ்வு தொடர்பாக நான்கு நாள் பயிற்சிப்பட்டறை ஒன்று யாழ். செயலகத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் ஆகியோர் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்ள வேண்டுமென மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

(எ-175)

## செய்முறை பரீட்சை

தென்மராட்சி,டிசெ.14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நடத்தப்பட்ட முறைசாராக் கல்வித்திட்டத்தின் உடை அமைத்தல் பயிற்சிநெறியில் பங்குபற்றியோருக்கான அறிமுக செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், மிருசுவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், கைதடி முத்துக் குமாரசாமி மகாவித்தியாலயம் ஆகியவற்றில் இப்பயிற்சி நெறிகளில் கலந்துகொண்டோர் பரீட்சையில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

(ம-117)

## நன்றி நவில்கின்றோம்

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட

### அமரர் பஸ்தியாம்பிள்ளை கிறிஸ்தோப்பர்

*(இரத்தினம்)*

அவர்களின் மறைவுச்செய்தி (28.10.2002)இல் அறிந்து நேரிலும், தொலைநகல்மூலமும் இறுதிச்சடங்கிலும் கலந்து மலர்வளையங்கள் வைத்தும் இரங்கல் திருப்பலியிலும் மரண ஊர்வலத்திலும் கலந்துகொண்ட ஆயர், குருக்கள், அருட்சகோதரிகள், அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் கியூடெக் நிர்வாகிகள், ஊழியர்களுக்கும் ஏனைய அமைப்புக்கள், குழுக்களின் பிரதிநிதிகளுக்கும் தனிப்பட்ட முறையில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது குடும்பத்தினர் நன்றியினைத் தெரிவிக்கின்றார்கள்.

எமது துயரில் பகிர்ந்து ஆறுதல் அளித்ததுபோல் அமரரின் ஆன்மா சாந்திபெறவும் இறைவனைப் பிரார்த்திக்கவேண்டி நிற்கின்றோம்.

*சரஸ்வதி வித்தியாலய வீதி,*
*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.* (C/25381)

அமரர் குடும்பத்தினர் சார்பாக,
அருட்திரு. C.G.ஜெயக்குமார்
*(மகன் - கியூடெக்).*

## மரண அறிவித்தல்கள்

### உமாபதி கந்தசாமி

*(இளைப்பாறிய சிறாப்பர்)*

கந்தர்மடத்தைச் சேர்ந்த உமாபதி கந்தசாமி அவர்கள் 12.12.2002 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அன்னலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் கருணாகரன்(வீதி அபிவிருத்தித் திணைக்களம், நெல்லியடி), கிருபாகரன்(ஹரன் ஜுவல்லர்ஸ்), ஞானாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கௌரி, தேன்மொழி, லிங்கேஸ்வரி ஆகியோரின் அருமை மாமனாரும் ரமணன் (ஹரன் ஜுவல்லர்ஸ்), உமையாள்(பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), இரத்தினமுகுந்தன், உமாகாந்தன், தேவகி, காயத்திரி, கௌரிசங்கர், தயாபரி, யசோதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(14.12.2002) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"உமாபதி",*
*57, பலாலி வீதி, கந்தர்மடம்.* (11710)

தகவல்:
பிள்ளைகள்.

### திருமதி செல்லத்துரை விசாலாட்சி

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை விசாலாட்சி அவர்கள் 12.12.2002 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் திருமதி கோமதியம்மாள் நவரத்தினத்தின் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், சாவ. இந்துக் கல்லூரி) பாசமிகு தாயாரும் உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கோயிற்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நவரத்தினத்தின் (இளைப்பாறிய பிரதம லிகிதர் நீர்ப்பாசனத் திணைக்களம், மகா இலுப்பலம) அன்பு மாமியாரும் Dr.நவீனன் (U.K.), நளினி(சட்டத்தரணி - கொழும்பு), சாந்தினி(U.K.), நிர்மலன் (கணக்காளர் U.K.), வசந்தினி (U.K.), வசந்தன் (Bio chemist - Norway), பிரபாகரன் (Electronic Engineer - Norway), சாந்தன் (Computer Engineer, Norway), ருபன் (Computer Engineer, Norway), சுகன்யா (U.K.), கணேசயோகன் (சட்டத்தரணி, Colombo), ரகுநாதன்( Civil Engineer, U.K.), சிவப்பிரியா (கணக்காளர் U.K.), ஜெயபாலன்(Accountant, U.K.), Dr.ருபவதனா (Norway), உஷா (Norway), ஞானகௌரி (Norway) Babitha (Norway) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் துளசி (U.K.), தனஞ்செயன் (Bristal University, U.K.), தனுஷன், ஹரிகேஷ் (St.Thomas Mountlaiania), ராமேஸ்வரன் (University of Saray), சர்மினி (University of Excrerotor), கம்சினி (U.K.), விசாலா, அனிஸ்யா, நிசாணி, சிவானி, ஷாலினி, ஜனனி, கீர்த்தனன், சங்கீதா, அர்ஜன் ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(14.12.2002) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"நவமதி",*
*3ஆம் ஒழுங்கை,*
*கச்சாய் வீதி, சாவகச்சேரி.* (C/25382)

தகவல்:
பொ.நவரத்தினம்
(மருமகன்).

## விநியோகிப்போர் தேவை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மிருக மருந்துத் தயாரிப்புகளை விநியோகம் செய்ய விரும்பும் தனிப்பட்டவர்கள் அல்லது நிறுவனங்கள் வரையறுக்கப்பட்ட பிரவுண் அன் கம்பனியின் மிருக மருந்துப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கடிதம் அல்லது தொலைபேசிமூலம் தொடர்புகொள்ள வேண்டியமுகவரி.
திரு. டி. எம். எஸ். சல்டின், உதவிப் பொது முகாமையாளர்.

தயவுசெய்து ஆங்கிலத்தில் பதில் அளிக்கவும்

BG

மிருக மருந்துப் பிரிவு
தொலைபேசி; 01-694118 அல்லது 697111
வரையறுக்கப்பட்ட பிரவுண் அன் கம்பனி
481, டி.பி. ஜாயா மாவத்தை,
கொழும்பு 10

Intervet | ZAGRO | Biomin

## வாழ்த்துகின்றோம்



யாழ்.நல்லூர் அரசடி வீதி,
மூன்றாம் ஒழுங்கையைச் சேர்ந்த

### திரு.எஸ்.பரம்ராசா

அவர்கள் 09.12.2002 அன்று திருமதி S.இளங்கோவன (யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி) அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் எடுத்தமையைப் பாராட்டி அவரது சேவை தொடர வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்: (C/25385)

யாழ்ப்பாணம். - வடபிராந்திய முச்சக்கர மோட்டார் வண்டிச் சேவைச் சங்கத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

தினேஷ் அம்பாள் பேக்கரி உரிமையாளராகிய
**திரு.சோ.யோகராசா** அவர்களின் பாசமிகு தாயார்

### சோமசுந்தரம் கமலாதேவி

அவர்களின் மரணச் செய்திகேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

*559, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/25388)

நிர்வாகம்
யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.

## யாழ்ப்பாணம் மாநகர சபை

## கேள்வி அறிவித்தல் - 2003

கீழ்க்காணும் இடத்தில் உள்ள ஆட்டிறைச்சிக் கடையை 01.01.2003 முதல் 31.12.2003 வரையான காலத்துக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி: 20.12.2002 வெள்ளிக்கிழமை பி.ப.12.30 மணி

கேள்விப் படிவம் வழங்கும் இறுதித் திகதி: 20.12.2002 வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணிவரை.

கேள்விகள் திறக்கும் திகதி: 20.12.2002 வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணி

| இறைச்சிக்கடை அமையவுள்ள இடம் | மீளளிக்கக்கூடிய பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வி (வற் நீங்கலாக) |
|---|---|---|
| மானிப்பாய் வீதியில் முஸ்லிம் பள்ளி வாசலுக்கு அருகில் தற்போது இறைச்சிக்கடை நடைபெறும் இடம் | 2500.00 | 15000.00 |

குறித்த இறைச்சிக்கடைக்கான இடத்தைக் கேள்விக்காரரே ஒழுங்குசெய்தல் வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறியலாம்.

*மாநகரசபை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
2002.12.11

(சி-25356)

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.